மஹான்

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர்

தீக்ஷிதர் அவர்களின் 50 ஸ்லோகங்கள் அடங்கிய

ஆத்மார்ப்பண ஸ்துதி

இந்த நூலில் இணைக்கப்பட்டுள்ளது

ஸ்ரீ சர்மா சாஸ்த்ரிகள்

श्री मदादिशंकर भगवत्पादाचार्य परम्परागत मूलाम्नाय सर्वज्ञ पीठम्

श्री काञ्ची कामकोटि पीठम्



ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய பரம்பராகத மூலாம்னாய ஸர்வஜ்ஞ பீடம்

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்

மஹான்
ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர்

சர்மா சாஸ்திரிகள்
94443 80973

முதல் பதிப்பு: ஏப்ரல் 2018 (ஹேவிளம்பி சங்கர ஜெயந்தி)

ஆசிரியர்: ஸ்ரீ சர்மா சாஸ்திரிகள்

உரிமை: ஆசிரியருக்கு

விலை: ரூ.100/-

வெளியீடு:

லோக க்ஷேமா சேவா சமிதி

சென்னை

அச்சிட்டோர்:

ஆர் மீடியா, 2/1114, 2வது குறுக்குத் தெரு, ராஜராஜேஸ்வரி நகர்,
மடிப்பாக்கம், சென்னை-600 091.
இ-மெயில்: gs8168@gmail.com Mobile: 98848 86240

உள்ளே...

உங்களுடன் ஒரு வார்த்தை	5
சேனைக்கிழங்கு பரங்கிக்காயாகிவிட்டால் என்ன செய்வது?”	7
ஐய்யப்ப சாஸ்தா ஏன் மூக்கில் விரல் வைத்துக்கொண்டுள்ளார்?	9
ஸ்ரீ காலகண்டேஸ்வரர் ஆலயம்	13
ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களின் ஜனனமும், உபநயனமும்.	17
தகப்பனார் ஸ்ரீ ரங்கராஜர் மரணம்	19
ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரின் விவாஹம்	21
யாகங்களை அனுஷ்டித்த மஹான் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர்	24
தீக்ஷிதர் அவர்கள் அருளிச் செய்த க்ரந்தங்கள்	25
பரம வினய சம்பன்னர்	27
வாழ்நாளில் தரிசித்த க்ஷேத்திரங்கள்	29
ஸ்ரீ ருத்ரத்தின் மஹிமையை பற்றி அருளியதும், நமது கடமையும்	31
பரம சிவ பக்தர்	33
சிவ நிர்மால்யத்தை சாப்பிடலாமா கூடாதா?	35
சிவ ஸாயுஜ்யம்	37
ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவா அவர்கள் தீக்ஷிதரை பற்றி அருளியது	41
அடையபலத்தில் வேத பாராயணம்	43
ஆத்மார்பண ஸ்துதி	45
ஸ்ரீ மார்கப்ந்து ஸ்தோத்திரம் (சமஸ்கிருதம்)	141
ஸ்ரீ மார்கப்ந்து ஸ்தோத்திரம் (தமிழ்)	143

உங்களுடன் ஒரு வார்த்தை

ஆதி சங்கராச்சார்ய மூலாம்ஞாய சர்வக்ஞபீடம் ஸ்ரீ ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சார்யார் ஸ்ரீ ஸ்ரீ பால பெரியவா அவர்கள் அடியேனிடம்

" உன்னிடம் வேதம் கற்று வரும் வித்யார்த்திகளை அழைத்துக்கொண்டு ஒரு நாள் அடையபலம் சென்று ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் மண்டபத்தில் அமர்ந்து பாராயணம் செய்" என்று உத்தரவிட்டார்.

அதற்கு முன்புவரையில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரைப் பற்றியோ அல்லது அடையபலத்தைப் பற்றியோ அதிகம் நான் அறிந்திருக்கவில்லை.

தீக்ஷிதர் அவர்களின் 'ஆத்மார்ப்பண ஸ்தோத்ரத்தை' மட்டும் கேள்விப்பட்டிருந்தேன்.

மார்ச் 18, 2018, யுகாதி, அன்று விடியற்காலை 5 மணி அளவில் கிட்டத்தட்ட 75 வித்யார்த்திகளுடன் அடையபலம் நோக்கி சென்னையிலிருந்து பயணம் ஆனோம்.

காலை 8.30 மணி அளவில் அடையபலம் சென்று அடைந்தோம். கிராமத்தில் நுழைந்தவுடெனேயே ஆகா, நாங்கள் அடைந்த ஆனந்தத்தை வெறும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. ஒரு காலத்தில் அநேகமாக எல்லா கிருஹங்களிலும் அக்னிஹோத்ரிகள் வசித்து வந்த கிராமம் அல்லவா அடையபலம்.

என்னுடன் வந்த வித்யார்த்திகளில் பள்ளி மற்றும் கல்லூரி மணவர்கள், ஐடியில் பணி புரிபவர்கள், வங்கி ஊழியர்கள், ஓய்வு பெற்ற வயதானவர்கள் என பலர் இருந்தனர். 8லிருந்து 80வயது வரை.

அடையபலத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் மண்டபத்தில் ஒரு பக்கம் தைத்ரீய உபநிஷத், ஒரு பக்கம் அருண பிரஸ்ணம், மறு பக்கம் மஹாந்யாஸத்துடன் ஸ்ரீ ருத்ர பாராயணம் என குழு குழுவாக வித்யார்த்திகள் மூலம் பாராயணங்கள் நடைபெற்றன.

துவக்கத்தில் காலையில் எல்லோரும் சேர்ந்து சஹஸ்ர காயத்ரி ஜபமும் செய்தனர்.

ஸ்ரீ காலகண்டேஸ்வரர் சன்னதியிலும் ஸ்ரீ ருத்ர பாராயணம் செய்யும் பாக்யம் கிடைத்தது.

மதிய போஜனத்திற்குப் பிறகும் வேத பாராயணம் தொடர்ந்தது.

மாலை சென்னை திரும்பியதும் அன்று இரவு என் மனத்தில் ஒரு எண்ணம் உதயம் ஆனது.

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களின் ஜீவித சரித்ரத்திலிருந்து ஒரு சில முக்கிய குறிப்புக்கள் எளிய முறையில் ஒரு சிலரையாவது சென்று அடைய வேண்டும் என்று மனதில் எண்ணம் தோன்றியது. ஒரு நூல் எழுத மனதில் ஆச்சார்யாளின் அனுக்ரஹத்துடன் சங்கல்பம்.

அதன் முடிவே இந்த நூல். இந்த நூல் வெறும் ஒரு அறிமுக நூல்தான். மகான் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களைப் பற்றிய முழு வாழ்க்கை சரித்திரம் அல்ல.

நாங்கள் அடையபலம் சென்றிருந்தபோது அங்கிருந்தவர்கள் மூலம் கேள்விப்பட்ட விஷயங்களும், மஞ்சக்குடி ஸ்ரீ. ராஜகோபால சாஸ்திரிகளின் நூலும் இந்த புஸ்தகம் எழுதுவதற்கு எனக்கு சஹாயமாக இருந்துள்ளது எனது பாக்யம்.

1956-ல் மாயவரம் ஸ்ரீ மஹாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் இயற்றிய "ஆத்மார்பண ஸ்துதி" ஸ்லோகத்திற்கு தமிழில் எழுதிய உரையுடன் கூடிய அந்த நூலை இந்த புஸ்தகத்தில் இடம்பெற செய்துள்ளேன். ஸ்ரீ மஹாலிங்க சாஸ்திரிகளுக்கு எனது நமஸ்காரங்கள் பல.

சர்மா சாஸ்திரிகள்

ஸ்ரீ ஆதி சங்கர ஜெயந்தி

ஹேவிளம்பி. ஏப்ரல் 20, 2018.

"சேனைக்கிழங்கு பரங்கிக்காயாகிவிட்டால் என்ன செய்வது?"

பிராரப்த கர்மாவை நாம் மனதார ஏற்றுக்கொண்டு அனுபவித்துவிட வேண்டும். நமது பெரியோர்கள் அப்படித்தான் நமக்கு வழி காட்டியுள்ளார்கள்.

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரின் வாழ்க்கையிலும் ஒரு சம்பவம் நமக்கு இதைத்தான் நினைவூட்டுகின்றது.

அடையபலம் அப்பய்ய தீக்ஷிதரின் அந்திம காலத்தில் அவர் பொறுக்கமுடியாத வயிற்று வலியால் துடித்தார். தனது சிவ பூஜைக்கு இந்த உபாதை இடைஞ்சலாக இருப்பதனால் ஒரு துண்டை எடுத்து இறுக்கி வயிற்றின் மேல் கட்டிக்கொண்டு தனக்கு எதிரே ஒரு தாம்பாளத்தில் நீர் நிரப்பி வயிற்றில் இருந்த பெரிய கட்டியை வெளியே எடுத்து அதில் வைத்தார்.. அது ஒரு சேனைக்கிழங்கு போல் நீரில் மிதந்தது. பூஜை முடிந்ததும் ரத்தக் கட்டி வயிற்றுக்குள் பழையபடியே சென்றுவிடும். இது அன்றாடம் தொடர்ந்தது.

அது மாத்திரம் அல்ல. சிஷ்யர்களுக்கு பாடம் சொல்லித்தரும்போதோ அல்லது சில சமயங்களில் தம்மை யாராவது விசேஷமாக சந்திக்க வந்தாலோ அவர்கள் முன்பு தான் வலியால் அவஸ்தைப்படுவதை காட்டிக்கொள்ளக் கூடாது மற்றும் கலந்துரையாடுவதற்கு இந்த தாங்கமுடியாத வலி தடங்கலாக இருக்கக்கூடாது என்று நினைப்பார். உடனே அருகில் இருக்கும் மான் தோலினால் செய்யப்பட்ட ஆஸனத்தில்

அந்த வலியை இடம்பெற செய்து விடுவார். அந்த மான்தோல் துடித்துக்கொண்டே இருக்குமாம். வந்தவர்கள் விடைபெற்று சென்றவுடன் பழையப்படி அந்த வலியை தான் மீண்டும் வாங்கிகொண்டு விடுவார்.

இவற்றையெல்லாம் அருகில் இருந்து பார்த்துக்கொண்டிருந்த சிஷ்யர்களும் மற்றவர்களும் ஒரு நாள் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு தீக்ஷிதர் அவர்களிடம் "குருநாதா, தங்களால் அந்த கட்டியை வெளியே கொண்டுவர முடிகிறதே. அதை அப்படியே வெளியே விட்டுவிடக் கூடாதா?" என கேட்டனர்.

"வாஸ்தவம். என்னால் அதை வெளியேற்ற முடியும். அப்புறம் சேனைக்கிழங்கு பரங்கிக்காயாகி என்னை அடையும்போது அதை எப்படி பொறுத்துக்கொள்வது? இந்த ஜென்மத்தில் அனுபவிக்க வேண்டியதை சிவன் அருளோடு இப்போதே பொறுத்துக் கொண்டு அனுபவித்து விடுகிறேன்" என்றார்.

ஒரு சமயம் அவரது இல்லத்திக்கு விஜயம் செய்த அரசன் இதைபற்றி பிரஸ்தாபித்தான். அதற்கு தீக்ஷிதர் அவர்கள் கூறிய விவரமான பதில் இதோ:

"அரசே, சரீரம் படைத்து ஜன்மா எடுத்த நமக்கு எல்லோருக்கும் ப்ராரப்த கர்மாவினால் ஏற்படுகின்ற அங்கப் பிரதிபந்தங்களைத் தடுக்க முடியாது. அதற்கு நானும் விதிவிலக்கல்ல. அதனால்தான் பிராரப்த வசத்தால் எனக்கு தற்சமயம் ஏற்பட்டுள்ள இந்த ரோஹம் என்னை வாட்டுகின்றது. அவசியம் நேரும்போது அதனை இம்மாதிரி தற்காலிகமாக சிறிது நேரம் இடம்பெற செய்துக்கொள்ளுவேன். இதை நான் சிரமமாக கருதவில்லை. அனுபவித்து விடுகிறேன்."

இதனை செவிமடுத்த அரசன் தீக்ஷிதர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம் செய்தான். கூடவே வைத்தியம் செய்துக்கொள்ளுமாறு ஒரு வேண்டுகோளையும் விடுத்தான். தீக்ஷிதர் அவர்கள் மறுத்துவிட்டு பிராரப்தத்தை நாம் அவசியம் அனுபவித்தே தீரவேண்டும் என்று எடுத்துக் கூறி அரசனை சமாதானப்படுத்தினார்.

ஐய்யப்ப சாஸ்தா ஏன் மூக்கில் விரல் வைத்துக்கொண்டுள்ளார்?

ஐயப்பன் மூக்கின் மேல் விரலை வைத்துக்கொண்டு யோசனையில் இருப்பதுபோல் ஒரு விக்ரஹம்.

ஆச்சர்யமாக உள்ளதா? இதோ அந்த தெய்விக நிகழ்வு ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் வாழ்க்கையில்:

ஒரு சமயம் தஞ்சை ஸ்ரீ பிருஹதீஸ்வரர் ஆலய பிரஹ்மோத்சவம் நடைபெறும்போது மஹாராஜாவின் அழைப்பிற்கிணங்க ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் தஞ்சாவூர் செல்லுகிறார். தாதாச்சார்யார் எனும் ஒரு வைஷ்ணவ வித்வானும் அழைக்கப்பட்ட பல வித்வான்களில் ஒருவர்.

விழா முடிந்து அனைத்து வித்வான்கள் அவரவர்கள் இருப்பிடம் திரும்பினார்கள். ஆனால் அரசன் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களையும், தாதாசார்யார் அவர்களையும் தன்னுடன் சிலகாலம் இருக்கும்படி வேண்டுகிறான். அது சமயத்தில் பல புண்ணிய க்ஷேத்ரங்களுக்கு ராஜா விஜயம் செய்கின்றான்.

அவ்வாறாக பல க்ஷேத்ரங்களை தர்சித்து வரும்போது மூக்கின் மேல் வலது கை விரலை வைத்துக்கொண்டு யோசனையில் இருப்பதுபோல் விக்ரஹமுடைய ஸ்ரீ ஐயப்பனை ஒரு ஊரில் தரிசிக்க நேரிடுகின்றது.

இதை பார்த்து அதிசயித்த ராஜா கேட்டான்:

"இந்த விக்ரஹம் ஏன் இப்படி யோசிக்கின்ற பாவனையில் உள்ளது?"

அந்த ஊரில் இருக்கும் வயதானவர்களில் சிலர் முன் வந்து பவ்யத்தோடு அரசினிடம் சொன்னது:

" அரசனே, இந்த விக்ரஹத்தை வடித்த ஸ்தபதிக்கு ஐயப்ப சாஸ்தா இப்படி தீர்க்க சிந்தனையில் இருப்பதுபோல் தர்ஸனம் தந்துள்ளார். தமக்கு தர்ஸனம் கிடைத்த அந்த காட்சியின்படியே அந்த ஸ்தபதி மூர்த்தியை வடித்துவிட்டார். 'பிற்காலத்தில் ஸர்வ சாஸ்திர நிபுணரும், மஹா ஞானியுமான ஒரு மஹான் இங்கு வருவார். அவர் இதன் ரஹஸ்யத்தை உலகுக்கு எடுத்துச் சொல்லுவார். அந்த க்ஷணமே ஐய்யப்பனும் மூக்கிலிருந்து விரலை எடுத்து விடுவார்.' என்று அந்த ஸ்தபதி சொல்லிவிட்டுப் போய்விட்டார். நாங்களும் அன்றிலிருந்து காத்திருக்கிறோம். பல பெரியோர்கள் வந்தார்கள். காரணங்களை சொன்னார்கள். ஆனால் சாஸ்தா மூக்கிலிருந்து விரலை எடுக்காமலேயே இருக்கிறார்."

இதை ராஜாவுடன் வந்திருந்த இரு மஹா வித்வான்களும் கேட்டுக்கொண்டிருந்தனர். ஒருவர் வைஷ்ணவ சித்தாந்ததைச் சார்ந்த தாதாசார்யார். மற்றொருவர் அத்வைதியான அப்பய்ய தீக்ஷிதர்.

ராஜா தாதாசார்யாரை நோக்கி இதன் ரஹஸ்யத்தைச் சொல்லமுடியுமா என கேட்க, தனது மனதில் தோன்றிய கருத்தை கீழ்கண்ட ஸ்லோகம் மூலம் தெரிவிக்கிறார்:

விஷ்ணோ: ஸுதோஹம் விதிநா ஸமோஹம்
தந்யஸ் ததோஹம் ஸுரஸேவிதோஹம் |
ததாபி பூதேச ஸுதோஹம் ஏதத்
பூதைர் வ்ருதச் சிந்த்யதீஹ சாஸ்தா ||

இதன் பொருள்:

"மோஹினி ருபமாய் விஷ்ணு இருந்தபோதுதான் நான் பிறந்தேன். ஆதலால் நான் விஷ்ணுவுக்கு மகன். பிரஹ்மாவுக்கு சமானமானவன். நான் மிக சிறந்தவனும்கூட. ஆதலால்தான் தேவர்கள் என்னை வாழ்த்தி போற்றுகின்றார்கள். விஷயம் இப்படி இருக்கும்போது, சுடுகாட்டில் பூத கணங்களால் சூழப்பட்டு வாழ்ந்துவரும் சிவனின் மகன் நான் என்று ஒரு சிலர் என்னை சொல்லுவதை நினைக்கும்போது எனக்கு வருத்தமாக இருக்கிறது என்று சாஸ்தா நினைக்கின்றார்."

இதுதான் சாஸ்தாவின் வருத்தத்துக்கு காரணம். என தாத்தாச்சாரியார் கூறுகிறார்.

இதை கேட்ட ஐயப்பன் மூக்கிலிருந்து விரலை எடுக்கவில்லை. பிம்பம் அப்படியே இருந்தது. எந்த சலனமும் விக்ரஹத்தில் இல்லை. இது சத்தியம் இல்லாததாலும், பரமசிவனை இகழ்ச்சியாய் பேசியதாலும் ஐப்பனின் கை விரல் மாறவில்லை.

உடனே அரசன் ஸ்ரீமத் தீக்ஷிதர் அவர்களை வணங்கி இந்த ஹரிஹரபுத்ரனின் வாஸ்தவமான அபிப்ராயத்தை எங்களுக்கு தெரியப்படுத்தவேண்டும் என பிரார்த்திக்கின்றான்.

தீக்ஷிதர்வாளும் தனது அபிப்ராயத்தை ஒரு ஸ்லோகம் மூலம் சமர்ப்பிக்கின்றார். இதோ அந்த ஸ்லோகம்:

அம்பேதி கௌரீம் அஹம் ஆஹ்வயாமி
பத்ந்ய பிதுர் மாதர ஏவ ஸர்வா : |
கதம் நு லக்ஷ்மீம் இதி சிந்தயந்தம்
சாஸ்தாரம் ஈடே ஸகலார்த்த ஸித்த்யை ||

ஸ்லோகத்தின் அர்த்தம்:

”விஷ்ணு பகவான் மோஹினி அவதாரம் செய்த சமயத்தில் பரமசிவனுக்கு குமாரனாக பிறந்தேன் நான். ஆகையால் கைலாசம் சென்று தந்தையான பரமசிவனை தர்ஸிக்கும்போது பார்வதி தேவியை அம்மா என்று அழைப்பேன். தகப்பனாரின் பத்னிகள் அனைவரும் குழந்தைக்கு அம்மாதானே. ஆனால் வைகுண்டம் செல்லும்போதுதான் குழப்பம் வருகின்றது. அங்கு என் தாயான மஹாலக்ஷ்மியை விஷ்ணுவின் மனைவியை நான் என்ன முறை சொல்லி அழைப்பது என்று புரியவில்லை.”

மேலும் தீக்ஷிதர் அவர்கள் கூறுவதை கேளுங்கள்:

‘‘எனது ஸகல எண்ணங்களும் ஸித்தியாகும்படியாக சாஸ்தாவை நமஸ்கரிக்கின்றேன்’’

இம்மாதிரி அர்த்த புஷ்டியுள்ள ஸ்லோகத்தை பக்தியுடன் தீக்ஷிதர் அவர்கள் கூறிய அந்த க்ஷணமே சாஸ்தா தனது வலக்கரத்தின் விரலை மூக்கிலிருந்து விலக்கி விடுகிறார்.

இங்கு உள்ள ஒரு சூக்ஷ்மத்தை அரசன் உள்பட அங்கு கூடி இருந்தோர்கள் அத்துனை பேரும் கவணித்தனர்.

தீக்ஷிதரின் ஸ்லோகத்தில் தெய்வ பேதம், அதவது இந்த தெய்வம் உசத்தி, இது மட்டம் என்கின்ற அபிப்ராயங்கள் ஏதும் இல்லை. ஸ்லோகத்தில் தீக்ஷிதர் அவர்கள் தனது புத்தியை மட்டும் காட்டாமல் பக்தியையும் காட்டி 'ஸகல ஸித்திக்காக சாஸ்தாவை வழிபடுகிறேன்' என்று சொல்லி இருக்கிறார்..

அதாவது தாத்தாச்சாரியார் சிவனை இகழ்ச்சியாக பேசியதுபோல் அல்லாமல், தீக்ஷிதர் அவர்கள் விஷ்ணுவிடமும் பக்தியை காண்பித்து வாஸ்தவமான விஷயத்தை எடுத்துச் சொன்னதால் சாஸ்தா விக்ரஹத்தில் இருந்த கை விரல் மூக்கிலிருந்து எடுத்து விடும் அந்த தெய்விக காட்சியையும் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களது சத்திய வாக்கினையும் கண்டு அரசனும் மற்றவர்களும் ஆனந்தமடைந்தனர்.

இந்த சம்பவத்தை சொல்லும்போது நமது மஹா பெரியவர்கள் கூறியதாவது:

"ஒரு விக்ரஹம் ஸ்லோகம் கேட்டு மூக்கிலிருந்து விரலை எடுத்தது என்றால், கூடியிருந்தவர்களெல்லாம், 'இப்படியும் ஒரு அதிசயமுண்டா?' என்று மூக்கின்மேல் விரலை வைத்துக் கொண்டிருப்பார்கள் !"

ஸ்ரீ காலகண்டேஸ்வரர் ஆலயம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சார்யார் ஸ்ரீஸ்ரீ பால பெரியவா அவர்களின் ஆக்ஞைப்படி என்னிடம் வேதம் கற்கும் 75 வித்யார்த்திகளுடன் அடையபலத்திற்கு சென்றோம் என தொடக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறேன் அல்லவா? நாங்கள் அனைவரும் அந்த குக்கிராமத்தின் உள்ளே நுழையும்போதே எங்களை அறியாமல் எங்கள் அனைவருக்கும் உடம்பில் ஓர் ஆன்மிக புத்துணர்வும் உற்சாகமும் ஏற்பட்டது.

ஆச்சார்யாள் அனுக்ரஹத்தால் அங்கு ஸ்ரீகாலகண்டேஸ்வர ஆலயத்தை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. ஆலயத்துக்குள் நுழையும்போது அந்த க்ஷணம் எங்களுக்கு ஏற்பட்ட அந்த தெய்வீக அனுபவத்தை எப்படி சொல்லுவது என்று தெரியவில்லை.

பரமேஸ்வரனின் சந்நிதியிலேயே ஸ்ரீ ருத்ர பாராயணம் செய்தபோது மேலும் எங்களுக்கு ஏற்பட்ட ஆன்மிக அனுபவம் எல்லையில்லாதது.

பிரகாரத்தில் விநாயகர், ஸுப்ரஹ்மண்யர், உமாதேவியார் ஆகியோரின் தரிசனமும் கிடைத்தது.

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் தனது சொந்த செலவிலேயே அந்த ஆலயத்தை நிமாணித்துள்ளார் என கேள்விப்பட்டதும் ஒரு நிமிடம் ஆடாமல் அசையாமல் நின்றுவிட்டோம். தீக்ஷிதர்வாளுக்கு சிவனிடம் எந்த அளவிற்கு பக்தி இருந்தால் இது சாத்தியமாகி இருக்கும் என்று நினைத்து பார்த்தோம்.

அந்த ஆலய நிர்மாணத்திற்கான திரவியம் தீக்ஷிதருக்கு கிடைத்த விதத்தையும் இங்கு சற்று பார்ப்போமே.

அக்காலத்தில் நாயக வம்சத்தைச் சார்ந்தவர்கள்தாம் சில சிற்றரசர்களாக இருந்து வந்தனர். ஆதியில் இவர்கள் சிவ பக்தர்கள்தாம். ஆனால் ஒரு காலகட்டத்தில் வைஷ்ணவ பிரசாரத்தினால் இவர்கள் சிவ நிந்தனையில் ஈடுபட ஆரம்பித்தனர். வைஷ்ணவ ஆலயங்களை பின்பற்றி வந்ததோடு நிற்காமல் சிவ பக்தர்களை மதிக்காமல் சைவத்துக்கு எதிராக பிரசாரத்தில் ஈடுபடத் தொடங்கினர். மக்களிடயே குழப்பம் ஏற்படத் துவங்கியது.

இதைக் கண்டு தீக்ஷிதர் அவர்கள் மிகவும் மனம் வருந்தினார். வைஷ்ணவர்களும் சிவ பக்தர்களும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என ஏங்கினார்.

தீக்ஷிதர் அவர்கள் பரம சிவ பக்தராக இருந்தும் என்றும் வைஷ்ணவ சம்பிரதாயத்தை தூஷித்தது கிடையாது.

அதே சிந்தனையோடு ஒரு நாள் நித்திரைக்கு சென்றார். அந்த இரவு நித்திரையில் நான்காம் யாமத்தில் பரமேஸ்வரன் காட்சி அளித்து ‘குழந்தாய், ஸ்ரீகண்ட பாஷ்யத்துக்கு பல வேத நிரூபணங்களுடன் ஒரு வியாக்யாண க்ரந்தம் செய். அதன் மூலம் உனது மனக் கவலை தீரும். உனது விருப்பம் நிறைவேறும்’ என அருள செய்தார்.

பரமேஸ்வரனின் உத்தரவின்படி ஸ்ரீகண்ட பாஷ்யத்துக்கு விரிவுரை எழுதவேண்டும் என மனத்தில் சங்கல்பத்தோடு மறுநாள் அரசவைக்கு செல்கிறார் தீக்ஷிதர் அவர்கள்.

இந்த இடத்தில் ஸ்ரீகண்ட பாஷ்யம் என்னவென்று சுருக்கமாக பார்ப்போம்.

பிரஹ்மசூத்திரத்தை வேத வியாஸர் அருளியுள்ளதை நாம் அறிந்திருப்போம். ஸ்ரீகண்டாச்சாரியார் எனும் ஒரு மஹான் சைவபரமாக ப்ரஹ்மசூத்திரத்திற்கு எழுதிய விரிவுரைதான் ஸ்ரீகண்ட பாஷ்யம் என்பது.

தீக்ஷிதர் அவர்கள் அரசவையில் நுழைந்ததும் அங்கு நடந்த நிகழ்வு தீக்ஷிதர்வாளை திக்குமுக்காட செய்து விட்டது. அனைத்தும் சிவனின் கருணை. அரச சபைக்குள் நுழைந்ததும் சின்ன பொம்மன் எனும் பெயருடைய அந்த அரசன் நமது தீக்ஷிதர்வாளை பார்த்ததும் எழுந்து நின்று நமஸ்கரித்து கை கூப்பி பின்வருமாறு கூறுகிறான்:

"ஸ்ரீகண்ட பாஷ்யத்துக்கு தாங்கள் ஆழ்ந்த கருத்துக்களுடன் ஒரு விரிவுரை எழுதி இந்த உலகத்துக்கு மாபெரும் கைங்கர்யம் செய்யவேண்டும்" என பிரார்த்திக்கின்றான்.

இதை செவிமடுத்த தீக்ஷிதருக்கு பரமானந்தம் ஏற்படுகின்றது. கனவில் ஈசன் அருளிய அதே விஷயத்தை அரசனும் சபையில் கூறவே ஈசனின் கருனையை நினைத்து நினைத்து ஆனந்தப்படுகிறார். பேரானந்தம் அடைகிறார். இருக்காதா பின்னே.

ஈசனின் அனுக்ரஹத்தால் தீக்ஷிதர் அவர்கள் க்ரந்தத்தை எழுதத் தொடங்குகிறார்.

வேத பிரமாணங்களுடனும், மீமாம்ஸ நியாயங்களை அனுசரித்தும் ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் புதைந்து கிடக்கும் ஆழ்ந்த கருத்துக்களை மேலும் தெளிவாக்கும் வகையில் தனது வியாக்யானத்தை எழுதி முடிக்கின்றார்.

அதற்கு 'சிவார்க்கமணி தீபிகா' எனும் நாமகரணத்தையும் சூட்டுகின்றார்.

ஒரு நல்ல முஹூர்த்தத்தில் பண்டிதர்கள் நிரம்பிய சபையில் அரசன் முன்பு அந்த க்ரந்தத்தை அரங்கேற்றம் செய்கின்றார். பல வித்வான்கள் எழுப்பிய

ஆட்ஷேபணைகளுக்கும், கேள்விகளுக்கும் தக்கவாறு பதில் அளித்து அவர்களையும் அதை ஏற்றுக்கொள்ளச் செய்கின்றார். .

அந்த சமயம் சபையில் தீக்ஷிதர்வாள் சூரியன்போல் பிரகாசித்தாராம்.

இதையெல்லாம் கண்ணுற்ற அரசன் பரம சந்தோஷமடைந்து கூடி இருந்த அத்துனை பண்டிதர்கள் முன்பாக ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களை தங்க சிம்மாஸனத்தில் அமரச் செய்து ஸ்வர்ண நாணயங்களால் ஸ்நானம் செய்வித்தான்.

தீக்ஷிதர்வாளுக்கு கனகாபிஷேகம் நடைபெற்றது.

இந்த கனகாபிஷேகத்தின்போது தனக்கு கிடைத்த திரவியத்தைக் கொண்டுதான் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் தனது ஸ்வக்ராமமாகிய அடையபலத்தில் ஸ்ரீ காலகண்டேஸ்வர ஆலயத்தை நிர்மாணித்தார்.

மேலும் ஒரு விஷயம் நமக்கு தெரிய வருகின்றது.

சிவார்க்கமணி தீபிகா என்ற தீக்ஷிதர் அவர்களின் அதி அற்புதமான கிரந்தத்தை நாடெங்கிலும் பிரசாரம் செய்யவும் அரசன் சின்ன பொம்மன் வேண்டிய அனைத்து சஹாயங்களையும் செய்துள்ளான். தீக்ஷிதர் அவர்கள் தானே ஸ்வயமாக ஐந்நூறுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த நூல் மூலமாக அத்வைத சித்தாந்தத்தையும் போதித்து உள்ளார். தேசத்தில் பல பாகங்களில் இந்த நூல் மூலம் தீக்ஷிதர் அவர்களின் புகழ் மேலும் ஓங்கியது.

எல்லாம் ஸர்வாந்தர்யாமியான ஈசனின் கருனை.

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களின் ஜனனமும், உபநயனமும்.

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் கிட்டத்தட்ட நாநூறு வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த மஹான்.

ஒரு சாமகர். அதாவது சாம வேதம்.

காஞ்சிபுரம் அருகில் ஆரணி, ஆற்காடு நகரங்கள் கேள்விபட்டிருப்போம். அவற்றிற்கு அருகில்தான் இந்த அடையபலம் கிராமம் உள்ளது. சிறு கிராமம்தான். ஆனால் இதன் மகிமையோ அபாரம். ஒரு காலத்தில் இந்த அடையபலம் கிராமம் ஆசாரசீலர்கள், அக்னிஹோத்ரிகள், வேதசாஸ்திர மேதாவிகள் என பல மகனீயர்களால் நிரம்பி வழிந்துள்ளது என்றால் மிகையாகாது.

இந்த அடையபலம் கிராமத்தில்தான் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களின் ஜனனம் ஏற்பட்டது. இவரது தந்தையார் பிரஹ்மஸ்ரீ ரங்கராஜ தீக்ஷிதர் அவர்களும் பல யாகங்களை அனுஷ்டித்தவர் ஆவார். விஸ்வஜித் யாகத்தையும் அனுஷ்டித்தவர் தீக்ஷிதர் அவர்கள். இந்த யாகத்தை செய்தவர்கள் தனது சொத்து முழுவதையும் யாகத்திற்காக அர்ப்பணிக்க வேண்டும்.

ஸகல வேத சாஸ்திரங்களிலும் பாண்டித்யம் பெற்றவர்.

இவரை ரங்கராஜத்வரி என்றும் அழைப்பதுண்டு.

ஸ்ரீ ரங்கராஜ தீக்ஷிதர் அவர்கள் 40 வயது வரை புத்திர பாக்கியம் இல்லாமல் இருந்தார். மிகுந்த கவலையோடு இருக்கும் சமயத்தில் சிலரது ஆலோசனைப்படி சிதம்பரத்திற்கு தனது வாசஸ்தலத்தை மாற்றிக்கொண்டு நித்ய சிவ பூஜையுடன் தபஸ் மாதிரி ஒரு வாழ்க்கையை மேற்கொண்டார். ஸ்ரீ நடராஜப் பெருமானை நித்யமும் தரிசனம் செய்து வந்தார்.

ஸ்ரீ நடராஜப் பெருமானின் அனுக்ரஹத்தால் ஒரே வருடத்தில் ஸ்ரீ ரங்கராஜரின் பார்யாளுக்கு சுகப்பிரசவம் ஏற்பட்டது. ஆங்கில வருஷம் 1594. பிரமாதீஸ வருஷம். புரட்டாசி மாதம், சோமவாரம், கிருஷ்ண பக்ஷத்தில் உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவதாரம் ஏற்படுகின்றது. ஸ்ரீ ரங்கராஜ தீக்ஷிதர் குழந்தைக்கு 'விநாயக ஸுப்ரஹ்மண்யம்' என்று யதோக்தமாக நாமகரணம் செய்து வைக்கிறார். ஸீமந்த புத்திரனான விநாயக ஸுப்ரஹ்மண்யம் 'அப்பா' என்று அழைக்கப்பட நாளடைவில் அப்பா என்ற நாமம் அப்பய்யா என்று பரவலயிற்று எனத் தெரிய வருகின்றது.

தொடர்ந்து இதற்குப் பிறகு இரண்டாவது குழந்தையும் ஸ்ரீ ரங்கராஜ தீக்ஷிதருக்கு ஆண் குழந்தையாகவே பிறக்கின்றது. இந்தக் குழந்தைக்கு தனது தந்தை பெயரான ஆச்சார்ய தீக்ஷிதர் எனப் பெயர் சூட்டுகிறார். இவரும் மஹானாக பிரசித்திபெற்றார்.

பின்னர் ஒரு பெண் குழந்தை. ஞானாம்பிகை என்று பெயர்.

கர்ப்பாஷ்டம வயதில் அதாவது ஏழாவது வயதில் அப்பய்யருக்கு உபநயனம் செய்து வைத்தார்.

தகப்பனார் ஸ்ரீ ரங்கராஜர் மரணம்

தகப்பனார் ஸ்ரீ ரங்கராஜ தீக்ஷிதர் தனது சீமந்த புத்திரன் அப்பய்யருக்கு குருராம கவி எனும் ஒரு ஸ்ரேஷ்டர் மூலம் காவ்யம், நாடகம், அலங்காரம், சாஹித்யம் முதலியவைகளை கற்பித்தார்.

சிறிய வயதிலேயே அப்பய்யர் பாஷாஞானமும், பல இதர திறமைகளையும் பெற்று விளங்குவதைக் கண்டு கவியும் தந்தையரும் எல்லையில்லா சந்தோஷத்தை அடைந்தனர்.

அப்பய்யருக்கு கிட்டத்தட்ட வயது 16 இருக்கும்போது ஸ்ரீ ரங்கராஜர். சிவ சாயுஜ்யம் அடைந்து விடுகிறார். அதற்கு முன்பு தனது இரு புத்திரர்களையும் தனது அருகில் அழைத்து கீழ்கண்டவாறு உபதேசம் செய்கிறார்:

"குழந்தைகளே, நீங்கள் ஸகல வித்யாசம்பத்துக்களை அடைந்துள்ளீர்கள். அஹங்காரமற்றவர்களாய் என்றும் பரமசிவனை பூஜித்து வாருங்கள். எப்போதும் நீங்கள் வீபூதி ருத்ராக்ஷ தாரணம் செய்தும், வீபூதி ருத்ராக்ஷ தாரணம் செய்பவர்களை சாக்ஷாத் சிவனாகவே எண்ணி அவர்களை வணங்கி வாருங்கள். யக்ஞபதியான பரமேஸ்வரனை யாகங்கள் அனுஷ்டிப்பதின் மூலம் ஆராதியுங்கள்".

பதினாறு வயதே ஆகியிருந்த அப்பய்யருக்கு தந்தையின் மரணம் பெரும் துக்கத்தை அளித்தது.

இருப்பினும் தனது கடமையான பித்ரு கார்யங்களை யதோக்தமாக செய்து முடிக்கிறார்.

தொடர்ந்து அடையபலத்திலேயே வசித்து வருகின்றார். வித்யாப்யாஸமும் பல மகனீயர்கள் மூலம் அப்பய்யருக்கு தொடர்கின்றது.

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரின் விவாஹம்

ரத்னகேட தீக்ஷிதர் எனும் ஸ்ரீனிவாஸ தீக்ஷிதர் என்பவர் ஸ்ரீ காமாக்ஷி தேவியின் பரம அனுக்ரஹத்துக்கு பாத்ரமானவர். மஹவித்வான்.

சூரப்ப நாயக்கன் அரச சபையில் ஆஸ்தான வித்வானாகவும் அலங்கரித்துள்ளார்.

இவர் தனது புத்ரியான மங்களநாயகியை ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதருக்கு கன்னிகாதானம் செய்து கொடுத்து மேலும் கீர்த்தி பெற்றுள்ளார்.

ரத்னகேட தீக்ஷிதர் வம்சமும் மிக கீர்த்தி பெற்ற ஒன்றாகும். ஸ்ரீ ரத்னகேட தீக்ஷிதர் வம்சத்தில் வந்தவர்கள் இன்றும் பலர் வைதிக ஸ்ரேஷ்டர்களாக இருக்கின்றார்கள். அதில் புலியூர் கிராமத்தை சேர்ந்த இரு சகோதரர்கள், வைதிக ஸ்ரேஷ்டர்கள், தற்போது சென்னையில் மேற்கு மாம்பலத்தில் வசித்து வருகின்றார்கள். இந்த இரு சகோதரர்களும் எனக்கு தனிப்பட்ட முறையில் நல்ல பரிச்சயமும் கூட.

ஸ்ரீ ரத்னகேட ஸ்ரீனிவாஸ தீக்ஷிதர் வாழ்க்கையில் மிக சுவாரஸ்யமான ஒரு தெய்வீக நிகழ்வை இங்கு நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும் என நினைக்கின்றேன்.

ஒருசமயம் பூனா ராஜ்யத்தில் மைதிலோட்ரம் எனும் ராஜ்யாதிபதியான அரசன் ஒருநாள் மாலை வேளையில் இவரிடம் யதேச்சையாக இன்று என்ன திதி என கேட்கிறான். இவர் அமாவாஸ்யை என்று கூறுவதற்கு பதிலாக சட்டென பௌர்ணமி என்று கூறி விடுகிறார். கூட இருந்தவர்கள்

ஆட்சேபிக்க இவரோ தான் சொன்னதிலேயே உறுதியுடன் இருக்கிறார். மீண்டும் மீண்டும் அவர்கள் கேட்கவே 'சற்று பொறுங்கள், இரவு வரட்டும் உங்களுக்கே விடை கிடைக்கும்' என்று பதில் அளித்துவிட்டு சென்று விடுகிறார்.

சந்த்யா வேளை வந்தது. தீக்ஷிதர் அவர்கள் காமாக்ஷி தேவியை தியானித்தவாறே அர்க்யம் விடுவதற்காக ஆயத்தமாகுகிறார். அது சமயம் தேவி காமாக்ஷி அம்பாள் அவர் எதிரே பிரசன்னமாகி தனது காதில் உள்ள தாடங்கத்தை, காதில் அணியும் ஆபரணம், அவரிடம் அளித்து 'இதை நீ ஆகாயத்தை நோக்கி வீசு. உன் வாக்கு பொய்யாகாது' என அருளவே, அவரும் அவ்வாறே செய்கிறார். ஆயிரம் சந்திரன் பிரகாசித்தால் என்ன பிரகாசம் கிடைக்குமோ அந்த ஒளியானது ஆகாயம் முழுக்க பரவியது. அரசனும் மற்றவர்களும் வியப்படைந்து இவ்வளவு பிரகாசம் எவ்வாறு ஆகாயத்தில் திடீரென தோன்றியது என ஆச்சர்யப்பட்டனர். இது ஸ்ரீனிவாஸ தீக்ஷிதரின் மகிமைதான் என உணர்ந்தனர்.

அரசன் அவருக்கு அனைத்து மரியாதைகளையும் செய்து அவருக்கு ரத்னகேட எனும் ஆபரணத்தையும் அளிக்கிறார். அன்று முதல்தான் இவருக்கு ரத்னகேட தீக்ஷிதர் எனும் பெயரும் ஏற்பட்டது என அறிகின்றோம்.

விவாஹமானதும் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் பிரம்மவாஸ்து எனும் இடத்தில் தனது மனைவியுடன் வசித்து வந்து ஸ்ரௌத ஸ்மார்த்த கர்மாக்களை யதாவிதியாக அனுஷ்டித்து வந்தார்.

சிவபாரம்யமான பல க்ரந்தங்களை இயற்றத் தொடங்கினர்.

நாட்டின் பல பாகங்களிலிருந்து வரும் பல சிஷ்யர்களுக்கு பாடங்களை போதித்து வந்தார்.

பிறகு காஞ்சிபுரத்துக்கு சென்று அங்கு சிறிது காலம் வசிக்கும் நேரத்தில் மேலும் பல சிஷ்யர்களுக்கு சாஸ்த்ராப்யாஸம் செய்து வைத்தார். பிரவசனங்கள் மூலம் சிவ பக்தியையும், சாஸ்த்ர சூக்ஷ்மங்களையும், சிவ பக்தியையும் பலருக்கு உபதேசித்து வந்தார்.

சிறிது காலம் கழித்து மீண்டும் அடையபலம் திரும்புகிறார்.

அவரது கீர்த்தி தேசத்தின் எல்லா பாகங்களிலும் பரவுகின்றது. பல கவிகள் தீக்ஷிதரை ஸ்துதிகளால் கொண்டாடத் தொடங்கினர்.

ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுக்கு மூன்று குமாரர்களும், இரண்டு பெண்களும் பிறந்தார்கள். நீலகண்டன், உமா மஹேஸ்வரன், சந்த்ராவதம்சன் என்பது மூன்று குமாரர்களின் பெயர்கள் ஆகும். மரகதவல்லி, மங்களாம்பா எனபது பெண் குழந்தைகளின் பெயர்கள்.

பிறகு சின்னபொம்ம ராஜன் ஆதரவில் சிறிதுகாலம் வேலூரில் வாஸம் செய்கிறார். ஆஸ்தான வித்வானாகவும் இருந்துள்ளார். அந்த சமயத்திலும் தனது அக்னிஹோத்ராதி கர்மானுஷ்டானங்களை விடாமல் அனுஷ்டித்து வந்துள்ளார் மஹான் அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள்.

சின்னபொம்மனின் அரச சபையில்தான் தீக்ஷிதர்வாள் தனது வாழ்க்கையில் பெரும் பகுதியை கழித்ததாக தெரிகின்றது. இங்கு வாசம் செய்தபோதுதான் பல அரிய க்ரந்தங்களையும் இயற்றி அருள் செய்துள்ளார்.

தாதாச்சார்யார் போன்ற ஒரு சிலரால் சில துன்பங்களுக்கு இவர் ஆளாகியும் இவர் சற்றும் கலங்கவில்லை. தனது பாதையிலிருந்து சற்றும் விலகவில்லை. எந்த கொடுமைகளும் இவரை ஒன்றும் செய்ய முடியவில்லை.

யாகங்களை அனுஷ்டித்த மஹான் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர்

தந்தையை போலவே ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களும் சர்வதோமுகம் உள்பட பல யாகங்களை அனுஷ்டானம் செய்தவர்.

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் அடையபலத்தில் ஸோமயாகம் செய்தபோது அந்தக் காலத்தில் வஸிஷ்ட மஹரிஷி எம்மாதிரி தானம் கொடுத்து பிரகாஸித்தாரோ அதே மாதிரி பிரகாஸித்ததாக அறிகின்றோம்.

ஜ்யோதிஷ்டோம, வாஜபேயாதி யாகங்களை யதோக்தமாக செய்துள்ளார்.

காஞ்சிபுர புண்ணிய க்ஷேத்ரத்தில் வாஜபேயம் என்ற மஹா யாகத்தை அனுஷ்டித்துள்ளார். பல வித்வான்கள் போற்றும் வகையில் தீக்ஷிதர் அவர்கள் இந்த வாஜ்பேய யாகத்தை அனுஷ்டித்துள்ளது ஒரு மகத்தான விஷயம்.

பொதுவாக வாஜபேய யாகத்தை தொடர்ந்து ஸ்வர்காரோஹணம் என்ற கர்மாவும் அவப்ருத ஸ்நானமும் செய்யவேண்டும். அவப்ருத ஸ்நானம் செய்தபிறகு வாஜபேய யாகத்தை விதிப்படி அனுஷ்டானம் செய்து பூர்த்தி செய்தவரை நாடாளும் மன்னர் வெண்குடை பிடிப்பது சம்ப்ரதாயம் அந்தக் காலத்தில். அந்த வகையில் தீக்ஷிதர் அவப்ருத ஸ்நானம் செய்த பிறகு தஞ்சாவூர் மன்னன் நரசிம்மபூபால வர்மன் வெண்குடை பிடித்து கௌரவித்ததை அறிந்து நாடே சந்தோஷப்பட்டது.

தீக்ஷிதர் அவர்கள் அருளிச் செய்த க்ரந்தங்கள்

மஹா வித்வானான ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் நூற்றுக்கு மேல் க்ரந்தங்களை நமக்கு அருளி தந்துள்ளது நமது பாக்யம்தான்.

அவருக்கு அத்வைத சித்தாந்தத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்ததால், அவரால் மாற்று வேதாந்த தத்துவங்களில் கூட சிறந்த நூல்களை எழுத முடிந்தது.

பிரம்மசூத்திரத்தின் நான்குவித தத்துவ உரைகளை எடுத்துக்காட்டும் வகையில் சதுர்மதசாரம் என்றொரு நூலை எழுதினார். அதில் 'நயமஞ்சரி' அத்வைதத்தைப் பற்றியும், 'நயமணிமாலை' ஸ்ரீகண்டமதத்தைப் பற்றியும், 'நயமயூகமாலிகா' இராமானுஜ சித்தாந்தத்தையும், 'நயமுக்தாவள' மத்வருடைய சித்தாந்தத்தையும் விளக்குகின்றது.

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரின் வேதாந்த நூல்களில் மிகவும் பிரசித்தி பெற்றது 'சித்தாந்தலேசசங்கிரகம்' என்ற அவருடைய சொந்தப் படைப்பு. இப்பெரிய நூலில் அத்வைத சித்தாந்தத்தின் எல்லா நெளிவு சுளிவுகளையும் ஒரே இடத்தில் கொண்டு வருகிறார். பாஷ்யங்களைப் படிக்கத் தொடங்கும் அத்வைத மாணவர்கள் யாவரும் இன்று இந்நூலில் தான் தொடங்குவார்கள். அத்வைதத்தினுள்ளே இருக்கும் பல பிரிவுகளின் கொள்கைகளும் இதனில் அலசப்பட்டு விடுகின்றன. தீக்ஷிதரின் ஏக ஜீவவாதம், நாநாஜீவவாதம், பிம்பப் பிரதிபிம்பவாதம், ஸாக்ஷித்துவவாதம் முதலிய எல்லாமே விவரிக்கப்பட்டு அவைகளின் எதிர்வாதங்களும் அறிவுச்

சாணையில் தீட்டப்பட்டு விடுகின்றன. அகிலமும் சம்மதம் என்பது போல் அவரே அந்த பரந்த நோக்கை நியாயப்படுத்தி விடுகிறார்: "உலகெல்லாம் மாயை என்பதை எல்லா அத்வைதிகளும் ஒப்புக்கொள்வதால், அம் மாய உலகத்திற்கு இவர்கள் வெவ்வேறு படங்கள் வரைவதினால் என்ன குறை வந்துவிடப் போகிறது?"

தீக்ஷிதர் அவர்கள் அருளிச் செய்த க்ரந்தங்கள் மொத்தம் 104 எனத் தெரிய வருகின்றது. அதன் விவரங்களை ஒரு சிறிய பட்டியல் மூலம் பார்ப்போமா?

இதோ அந்த விவரங்கள்:

1. வேதாந்த பரமான கிரந்தங்கள்:	25
2. சிவாத்வைத கிரந்தங்கள்:	26
3. மீமாம்ஸா சாஸ்திரம் விஷயமாக:	7
4. காவ்ய வியாக்யானம்:	1
5. வியாகரண வியாக்யாணம் :	1
6. அலங்கார ஸ்தோத்ரம்:	3
7. ஸ்தோத்திர நூல்கள்:	26
8. மற்றும் பல இதர தலைப்புகளில் :	15

பரம வினய சம்பன்னர்

பல அரிய யாகங்களை அனுஷ்டானம் செய்தும், வேத சாஸ்திரங்களில் மகா பாண்டித்யம் பெற்றும், நூற்றுக்கணக்கான அறிய க்ரந்தங்களை எழுதியும், அத்வைத சித்தாந்தத்தை எளியோருக்கும் புரியும் வகையில் அனவருக்கும் எடுத்துச்செல்லும் ஒரு பெரிய இயக்கத்தை உருவாக்கியும்கூட ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களிடம் நாம் எளிமையை மட்டுமே பார்க்க முடிந்தது.

வினயத்தின் முழு உருவம் தீக்ஷிதர் அவர்கள். பரம வினயசம்பன்னர். அவர் வாழ்ந்த காலத்தில். இதற்குச் சான்றாக பல உதாரணங்களையும், நிகழ்வுகளையும் நாம் சொல்லலாம்.

ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

தீக்ஷிதர் அவர்கள் ஒரு சமயம் பண்டிதர்கள் நிரம்பி வழிந்த ஒரு மாபெரும் சபையில் இயற்றி அருளிய ஒரு ஸ்லோகம் இதோ:

நாஹமதீதி வேதே ந ச படிதீ யத்ர குத்ரசிச்சாஸ்த்ரே |
கிந்து தரேந்துவதம்ஸினி புரஹம்ஸினி பும்ஸி பூயஸீ பக்தி: ||

(நான் எந்த வேதத்தையும் அப்யஸித்தவன் அல்ல. அதேமாதிரிதான் சாஸ்திர விஷயத்திலும். நான் சாஸ்திர ஞானன் அல்ல. என்னிடம் இருப்பதெல்லாம் அர்த்தசந்திரனைத் சிரஸில் வைத்திருக்கும் பரமேஸ்வரனிடம் மட்டும் தான்.)

தீக்ஷிதர் வாழ்க்கையில் மற்றொரு சம்பவமும் நமக்கு ஆதர்ஸமாக விளங்குகின்றது.

தான் பரம சிவபக்தனாக இருந்தாலும் விஷ்ணுவின் பேரிலோ அல்லது வைஷ்ணவ சித்தாந்தாத்திலோ எந்தவிதமான துவேஷமும் அவரிடம் காணமுடியாது. அதற்கு அவர் இயற்றிய 'வரதாராஜஸ்தவம்' எனும் க்ரந்தமே சாட்சி.

அவரது இந்த பரந்த நோக்கத்தை பறைசாற்றும் வகையில் அவர் இயற்றிய ஒரு ஸ்லோகம் இதோ:

விஷ்ணுர்வா சங்கரோ வா ஸ்ருதிஸிகரகிராமஸ்து தாத்பர்ய பூமி:
நாஸ்மாகம் தத்ர வாத: ப்ரஸரதி கிமபி ஸ்பஸ்டமத்வைத பாஜாம்
கிம் த்வீசத்வேஷகாடநல கலிதஹ்ருதாம் துர்மதீநாம் துருக்தீ:
பங்க்தும் யத்னோ மமாயம் ந ஹிபவது விஷ்ணு வித்வேஷ சங்கா

வாழ்நாளில் தரிசித்த க்ஷேத்திரங்கள்

போக்குவரத்து வசதி ஏதும் இல்லாத அந்தக் காலத்தை சற்று கற்பனை செய்து பாருங்கள். அந்த காலத்திலேயே தீக்ஷிதர் அவர்கள் தரிசித்த புண்ணிய க்ஷேத்ரங்களின் பட்டியலை பார்த்தால் நமக்கு பிரமிப்பு ஏற்ப்படத்தான் செய்கின்றது.

அந்த நீண்ட பட்டியலிலிருந்து ஒரு சில ஊர்களின் பெயர்களை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றேன்:

காஞ்சிபுரம்
விரிஞ்சிபுரம்
வேலூர் (ஜலகண்டேஸ்வரர்)
சிதம்பரம்
திருவிடைமருதூர்
திருவையாறு
ஸ்ரீவாஞ்சியம்
திருவெண்காடு
தஞ்சாவூர்
இராமேஸ்வரம்
மதுரை
திருச்சிராப்பள்ளி
ஸ்ரீரங்கம்
சென்னை திருவான்மியூர்
சென்னை வேளச்சேரி
திருப்பதி
காளஹஸ்தி
காசி எனும் வாராணசி

.....இன்னும் பலப்பல க்ஷேத்திரங்கள்.

ஸ்ரீருத்ரத்தின் மஹிமையை பற்றி அருளியதும், நமது கடமையும்

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களுக்கு ஸ்ரீ ருத்ர பாராயணத்தில் ஒரு விசேஷ ஆகர்ஷணம் இருந்துள்ளது என்று அவரது ஜீவிதத்தில் காணப்படும் பல நிகழ்வுகள் மூலம் நமக்கு தெரிய வருகின்றது.

ஸ்ரீ மஹா பெரியவா அவர்கள் சொன்னதை பாருங்கள்:

”வேதங்களுள் யஜுர் வேதம் முக்கியமானது. அதற்குள் அதன் மத்திய பாகமாகிய நாலாவது காண்டம் முக்கியமானது. அதற்குள்ளும் மத்திய பாகமான நாலாவது ப்ரச்னம் முக்கிய மானது. அதுதான் ஸ்ரீருத்ரம். அதற்குள்ளும் ‘நம: சிவாய’ என்ற பஞ்சாக்ஷர வாக்கியம் மத்தியில் இருக்கிறது. அதன் மத்தியில் ‘சிவ’ என்ற இரண்டு அக்ஷரங்கள் அடங்கியுள்ளன. இதையே ஜீவரத்னம் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இந்த அபிப்பிராயத்தை அப்பய்ய தீக்ஷிதர் ’ப்ரம்மதர்க்க ஸ்தவத்தில்’ சொல்லியிருக்கிறார்கள். அந்த ப்ரம்மம் சிவஸ்வரூபம் என்று தெரிகிறது. ”

தீக்ஷிதர்வாள் ஒருசமயம் இந்த விஷயத்தை பற்றி கூறியதை செவிமடுப்போம்:

“யஜுர்வேதத்தில் பிரசித்தமான ருத்ராத்யாயம் அமைந்துள்ளது. அந்த ருத்ரத்தில்தான் பஞ்சாக்ஷர மந்திரம், எட்டாவது அனுவாகத்தில், அமைந்துள்ளது. இதனாலும் யஜுர் வேதத்துக்கு மேலும் சிறப்பு உண்டு.”

மேலும் தீக்ஷிதர்வாள் இது சம்பந்தமாக சொன்னதை கேளுங்கள்:

“ யஜுர்வேத சாகையில் ஜன்மா எடுப்பது என்பது அல்ப புண்ணியத்தின் பலனாகக் கிடைக்காது. பெறும் புண்ணியத்தைச் செய்தவனுக்கே இந்த பாக்யம் கிடைக்கும்”

ஸ்ரீ ருத்ரத்தில் வரும் பஞ்சாக்ஷரத்தின் மஹத்துவத்தை தீக்ஷிதர்வாள் நாடெங்கும் பரப்பியதும் அவரது வாழ்க்கையில் நாம் காணும் மற்றொரு மகத்தான விஷயமாகும்.

நமது கடமை:

உபநயன சம்ஸ்காரம் ஆனவர்கள் எல்லோரும் வேத பாடசாலையில் சேர்ந்து அத்யயனம் செய்யும் வாய்ப்பு கிடைக்கவிட்டாலும் குறைந்தது ஸ்ரீ ருத்ரத்தையாவது நாம் குருமுகமாக அப்யாஸம் செய்ய முயற்சி செய்யத் தவறக் கூடாது.

ஆனால் ஒன்று.

காசெட்டுக்கள், சீடி போன்றவற்றின் உதவிகளுடன் வேதம் கற்றுகொள்ள முயற்சி செய்வது நல்லதல்ல. இந்த கருவிகள் நம்மை திருத்தாது. இதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். நாம் செய்யும் பிழைகள் நமக்கு தெரியாமலேயே போய்விடும்.

சாதாரணமாக நமது அன்றாட லௌகீக வாழ்க்கையிலேயே அபசப்தமாக பேசக்கூடாது என்று நாம் நினைப்போம் அல்லவா! அப்படி இருக்கும்போது அக்ஷர, ஸ்வர சுத்தம் இல்லாமல் வேதத்தைச் சொல்லலாமா?

வயது வித்தியாசம் இல்லாமல் உபநயன சம்ஸ்காரம் ஆன எல்லோருக்கும் எந்த வயதிலும் வேதம் கற்றுகொள்ள வரும். சந்தேகமே வேண்டாம்.

வயதாகிவிட்டதே எனக் கவலைப் படாமல் வயதானவர்களும் ஸ்ரீ ருத்ரத்தை கிரமமாக குருமுகமாக கற்றுக்கொண்டு ஆத்மார்த்தமாக நித்யமும் பாராயணம் செய்ய வேண்டும்.

பரம சிவ பக்தர்

உன்மத்தம் ஏற்பட்ட நிலையிலும்கூட:

தீக்ஷிதருக்கு ஒரு சமயம் தன்மேலேயே தனக்கு சந்தேகம் வந்து விட்டது. அதாவது வாஸ்தவத்தில் தனக்கு சிவனிடம் பக்தி உள்ளதா என்பதே அந்த சந்தேகம். நாள் ஆக ஆக அந்த சந்தேகம் அதிகரிக்கவே தனது சிஷ்யர்களை ஒரு நாள் அழைத்து இவ்வாறு கூறுகிறார்:

"என் கையில் இருக்கும் ஊமத்தைச்சாற்றை நான் குடிக்கப்போகின்றேன். உடனே எனக்கு பைத்தியம் பிடித்துவிடும். பைத்தியக்காரனாகிவிடுவேன். உன்மத்த நிலையில் இருக்கும்போது நான் பேசுவதை ஒன்று விடாமல் குறித்துக் கொள்ளுங்கள். இரண்டு மூன்று மணிக்கு அப்பறம் இதோ இந்த சீசாவில் இருக்கும் மாற்று மருந்தை எனக்கு கொடுங்கள். நான் பழைய நிலைக்கு வந்துவிடுவேன்" என்று கூறி ஊமத்தஞ்சாறை தீக்ஷிதர் அருந்தி விடுகிறார்.

பைத்தியம் பிடித்துவிடவே தீக்ஷிதர் அவர்கள் கன்னாபின்னாவென்று குதித்து ஆடவும் பாடவும் செய்தார். எல்லாம் சிவனை ஸ்தோத்திரம் செய்துக்கொண்டே. அருகில் இருந்தவர்களுக்கு ஆச்சர்யத்திலும் ஆச்சரியம்.

தெய்விக அனுபவம்.

சுமார் மூன்று மணி நேரத்துக்கு பிறகு மாற்று மருந்தால் சுய நினைவுக்கு திரும்பியதும் சிஷ்யர்களை பார்த்து

''உன்மத்த நிலையில் நான் எப்படி இருந்தேன்?'' என தீக்ஷிதர் கேட்டார்.

கூடி இருந்த சிஷ்யர்களும் மற்றவர்களும் '' ஊமத்தைச் சாற்றினால் உங்களுக்கு, பைத்தியம் பிடித்தபோதும் நீங்கள் சிவனைத்தான் ஸ்மரணம் செய்தீர்கள்; ஸ்தோத்ரங்களையும் இயற்றியுள்ளீர்கள். அவற்றை குறிப்பு எடுத்து வைத்துள்ளோம். இதோ அந்த ஸ்தோத்திரங்கள்'' என்றனர்.

அந்த ஸ்தோரங்கள்தாம் 'ஆத்மார்ப்பண ஸ்துதி' என பிற்காலத்தில் பிரபலமடைந்த ஒரு பொக்கிஷமாகும்.

இந்த *'ஆத்மார்ப்பண ஸ்துதி'* ஸ்லோகங்கள் முழுமையாக இதே நூலில் தனியாகத் தரப்பட்டுள்ளது.

இந்த ' ஆத்மார்ப்பணஸ் ஸ்துதி' யில் காணப்படும் கடை சி ஸ்லோகத்தை இங்கு தற்போது பார்ப்போம்:

ஆத்மார்ப்பணஸ்ஸ்துதிரியம் பகவந்திபத்தா யத்யப்யநன்யமநஸா ந மயா ததாபி |
வாசாபி கேவலமயம் சரணம் வ்ருணீதே தீனோ வரக இதி ரக்ஷ கிருபாநிதே மாம் ||

இதன் பொருள்:

'' பரமேஸ்வரா, இந்த ஆத்மார்ப்பணஸ் ஸ்துதியானது என்னால் ஒரே சிந்தனையோடு ஒரே முகமாக இயற்றப்படவில்லை என எனக்கு நன்றாகவே தெரிகின்றது. மற்ற விஷயங்களிலிருந்து கட்டுப்படுத்தப்பட்ட மனதுடன் இயற்றப்படவில்லை. அப்படியிருந்தும் கருனாமூர்த்தியே, தயாநிதியே, இந்த எளியவன், அற்பன், வெறும் பதங்களைக்கொண்டு வேண்டுகின்றேன். சரணத்தை பிரார்த்திக்கின்றேன். என்னை ரக்ஷிக்க வேண்டும்.''

சிவ நிர்மால்யத்தை நாம் சாப்பிடலாமா கூடாதா?

சிவ நிர்மால்யத்தை நாம் சாப்பிடலாமா கூடாதா எனும் சந்தேகம் நம்மில் பலருக்கு வருவதாக நான் கேள்விப்பட்டுள்ளேன். நீங்களும் கேள்விப்பட்டிருக்கலாம்.

இந்த சந்தேகம் அந்த காலத்தில் அரசனுக்கு வரவே ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரிடம் சந்தேகத்தை நிவர்த்தி செய்யுமாறு வேண்டுகிறான்.

தீக்ஷிதர் அவர்கள் போதாயன சூத்ரத்திலிருந்து இந்தப் பிரமாணத்தை எடுத்துக்கூறி விளக்கம் அளிக்கிறார்.

சிவஸ்ய நிர்மால்யமசாம்பவானாமபோஜ்யமர்ஹம் விமலாந்தராணாம் / ஸத்ப்ராஹ்மணோச்சிஷ்டம போஜ்யமங்க்ரி ஜாதைர்ஹி போதாயன தர்மஸூத்ரம் //

(சிவ பக்தர்கள் சிவ நிர்மால்யம் சாப்பிடுவதில் அவர்களுக்கு பூர்ண தகுதி உள்ளது. சிவ பக்தர்கள் சாப்பிடுவதில் எந்த குற்றமும் இல்லை....)

தீக்ஷிதர் அவர்கள் மேலும் இது விஷயத்தில் கூறுவதை கேளுங்கள்:

ஸர்வௌஷதீனாம் பதிரஸ்ய புஷ்பம் கங்காதி தீர்த்தம் து கபர்த்த ஜாதம்/
கிம் வஸ்து நிர்மால்ய விஹினமாஸ்தே விசார்யமணே சிவ ஏவ ஸர்வம் //

(கங்கா ஜலமே சிவ நிர்மால்யம்தான். அனைத்து ஔஷதிகளும் பரமேஸ்வரனை சார்ந்ததே. 'வ்ருக்ஷாணம் பதயே' என்று வேதம் சொல்லி இருப்பதால் எல்லாமே சிவனை சார்ந்தது தான். எனவே சிவனை ஆராதித்த சிவ பிரசாதத்தை, சிவ நிர்மால்யத்தை, சிவ பக்தர்கள் ஸ்வீகரிப்பதில் குற்றமேதுமில்லை.)

இதை செவிமடுத்த அரசனுக்கு சந்தேக நிவர்த்தி ஆகி விட்டது.

அரசனுக்கு மட்டுமா? நமக்கும்தான்.

சிவ ஸாயுஜ்யம்

தனது கடைசி காலத்தில் ஸ்ரீமத் தீக்ஷிதர் அவர்கள் சிதம்பர புண்ணிய க்ஷேத்ரத்தில் வாழ்ந்து வந்தார்.

நித்யமும் ஸ்ரீ நடராஜ பெருமானை தரிசித்து புளகாங்கிதம் அடைந்து வந்தார். தமது கடைசி நாள் வரையில் தனது கிருஹத்தில் சிவ பூஜையையும், கர்மானுஷ்டானங்களையும் தவறாது செய்து வந்துள்ளார்.

73 வயதில் தமது மோக்ஷகாலம் நெருங்குவதை உனர்ந்தார் தீக்ஷிதர் அவர்கள். அவரது இறுதி நாளும் நம்மையெல்லாம் புல்லரிக்கும்வகையில் அமைந்திருந்தது. அது ஒரு தெய்வீக அனுபவம்.

அதை சற்று பார்ப்போம்.

அன்று சைத்ர பௌர்ணமி. காலை நேரம். தீக்ஷிதர் அவர்கள் தர்ப்பாஸனத்தில் அமர்ந்து, கூடி இருந்தவர்களை அனைவரையும் ஆசிர்வதித்தார். அதுசமயம் அவரது புத்திரர்கள், நீலகண்டரும் மற்றவர்களும் தீக்ஷிதர் அவர்களை நமஸ்காரித்து ஒரு வேண்டுகோளை விடுத்தினர். அந்த க்ஷணத்தில் தீக்ஷிதரின் மனத்தில் என்ன பிராகாஸிக்கிறது என்பதை தங்களுக்குச் சொல்ல வேண்டும் என விக்ஞாபித்துக்கொண்டார்கள்.

அதற்கு கருணாமூர்த்தியான தீக்ஷிதர் அவர்கள் கூறிய அருள்மொழி ஒரு ஸ்லோகத்தின் ரூபத்தில் அமைந்திருந்தது. இதோ அந்த ஸ்லோகம்:

சிதம்பரமிதம்புரம் ப்ரதிதமேவ புண்யஸ்தலம்
ஸுதாஸ்சு விநயோஜ்வலா: ஸுக்ருதயஸ்ச காஸ்சித்க்ருதா: /
வயாம்ஸி மம ஸப்ததேருபரி நைவ போகே ஸ்ப்ருஹா
ந கிஞ்சிதஹமார்த்தயே சிவபதம் திக்ருக்ஷே பரம் //

(சிதம்பர ஸ்தலமானது ஒரு மஹா புண்ணியக்ஷேத்ரம் என பிரசித்தமானது. புத்திரர்களான நீங்கள் மஹா விநயசம்பன்னர்களாக ஜ்வலிக்கின்றீர்கள். நான் ஏதோ சில நூல்களை எழுதியுள்ளேன். எனக்கோ வயது 70ஐ தாண்டிவிட்டது. எந்தவிதமான சுகத்திலும் எனக்கு இனி மனசு நாட்டம்கொள்ளவில்லை. எதையும் அடையவும் இஷ்டமில்லை. ஆனால் உசத்தியான பரமசிவனுடைய பாதம் ஒன்றை மட்டும் அடைய விரும்புகின்றேன்.)

இந்த ஸ்லோகத்தை கூறி முடித்ததும் தீக்ஷிதர்வாளின் கண்களில் ஒரு ஜோதி தோன்றியது. அந்த ஜோதியின் மத்தியபாகத்தில் நடராஜரின் தூக்கியப்படி இருந்த பாதாரவிந்தங்களை தரிசித்தார்.

அந்த ஆனந்த பரவச நிலையில் மீண்டும் ஒரு ஸ்லோகம் அவரது தெய்வீக வாக்கினால் வெளிவந்தது:

ஆபாதி ஹாடகஸபாநடபாத பத்ம
ஜ்யோதிர்மயோ மனஸிமே தருணாருணோ (அ)யம் /

(கனகசபையில் நடனம் ஆடும் நடராஜப்பெருமானின் பாதாரவிந்தங்களின் ஜ்யோதியானது உதயசூரியனின் பிரகாஸம் போல் என் மனதில் பிரகாசிக்கின்றது)

இந்த பாதி ஸ்லோகம் முழுமைப்பெறாமல் பாதியில் நின்றுவிடுகின்றது. ஸ்ரீமத் தீக்ஷிதர் அவர்கள் முக்தி அடைந்துவிடுகிறார்.

ஸ்லோகம் பாதியிலேயே நின்று விடுகின்றது.

இதனை அருகில் இருந்தப்படி பார்த்துக்கொண்டிருந்த ஸ்ரீமத் நீலகண்ட தீக்ஷிதர் அவர்கள் மீதி பாதி ஸ்லோகத்தை பின்வருமாறு பூர்த்தி செய்ததாக அறிகின்றோம்.:

நூநம் ஜராமரண கோரபிசாசகீர்ணா
ஸம்ஸாரமோஹராஜ்ஞீ விரதிம் பிரயாதா //

(சூரியோதயம் ஆகி விட்டது அதனால் ஜனனம், மரணம், துக்கம் ஆகிய பிசாசுகளால் சூழப்பட்ட சம்சாரம் என்கின்ற இந்த ராத்திரி விடிந்துவிட்டது.)

இதே சமயத்தில் சிதம்பரம் ஸ்ரீ நடராஜ ஸ்வாமி சந்நிதியில் என்ன நடைபெற்றது தெரியுமா?

ஸ்ரீ நடராஜப் பெருமானின் சந்நிதியில் பூஜை புனஸ்காரங்கள் வழக்கமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. கற்பூர ஹாரத்தி சமயம் அது. அந்த க்ஷணத்தில் நமது ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் ஸ்வாமி சந்நிதியில் பிரவேஸம் செய்வதை அர்ச்சகர்கள் கண்டனர். அதை பார்த்ததும் அவருக்கு தரிசனம் செய்து வைக்க அர்ச்சகர்கள் முயற்சியில் ஈடுப்பட்டனர். தீக்ஷிதர் அவர்கள் பஞ்சாக்ஷர படிகளில் ஏறி நேராக கர்ப்பக்ருஹத்தில் சாந்நித்தியம் கொண்டுள்ள ஸ்ரீ நடராஜப் பெருமானுடன் ஐக்கியமாகிவிடுகின்றார்.

அந்த காட்சியை நேரிடையாக பார்த்த ஆலய அர்ச்சகர்கள் மஹா பாக்யவான்களே.

சாக்ஷாத் பரமேஸ்வரனின் அம்ஸமான ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் சிவசாயுஜ்யம் அடைந்த இந்த தெய்வீக அனுபவத்தையும், அவரது தெய்வீக வாழ்க்கை குறிப்புக்களை கேட்பவர்களும், படிப்பவர்களும் புண்ணியவான்களே.



ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவா அவர்கள் தீக்ஷிதரை பற்றி அருளியது

ஆதிசங்கர பகவத்பாதாச்சார்ய மூலாம்ஞாய சர்வக்ஞபீடம் ஸ்ரீ ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளுக்கு அந்த கலத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களும் அவர்களது வம்சத்தினரும் இடைவிடாது பலமுறை பிக்ஷாவந்தனம் செய்துள்ளனர்.

ஸ்ரீ ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்துடன் இவர்களுக்கு தொடந்து சம்பந்தம் இருந்து வந்துள்ளது.

ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவா அவர்கள் 2.6.1930 அன்று முதன்முதலாக ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களின் ஸ்வக்ராமமான அடையபலத்திற்கு விஜயம் செய்துள்ளார். ஸ்ரீ காலகண்டேஸ்வர கோவில் வளாகத்தில் பூஜைகளை முடித்துக்கொண்டு 400 வருஷங்களுக்கு முன்பு அந்த ஊரில் வாழ்ந்த

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களை பற்றி ஸ்வாமிகள் ப்ரஸங்கம் செய்துள்ளார்கள். அது சமயம் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் தன்னையே சித்தஸ்வாதீனமற்ற நிலையில் தனது சிவபக்தி சம்பந்தமாக பரீட்சை செய்து கொண்ட விவரங்களை பற்றியும், சிவபக்திப் பிரவாஹமான 'ஆத்மார்ப்பணஸ்துதி' ஸ்லோகங்களை பற்றியும் விவரமாக அருளிச் செய்து ஸ்வாமிகள் அனுக்ரஹம் புரிந்துள்ளார்கள்.

ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவா அவர்கள் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அவர்களை பற்றி நிறைய விஷயங்களை பல சந்தர்பங்களில் குறிப்பிட்டு நமக்கு அருள் செய்துள்ளார். அதில் ஒன்றை நாம் இங்கு நினைவு கூறுவது சாலப்பொருத்தமாக இருக்கும்.

'நான் நித்யமும் பிராதஸ்மரணத்தில் ஒரு சில மஹனீயர்களை நினைவுப்படுத்துக் கொள்ளுவேன். அப்படி ஞாபகப்படுத்திக்கொள்ளும் மஹனீயர்களில் அப்பய்ய தீக்ஷிதரும் ஒருவர்'

ஸ்ரீ மஹா பெரியவா அவர்கள் ஸ்ரீமத் தீக்ஷிதரை பற்றி மேலும் கூறிய அருள்மொழியை சற்று இங்கு பார்ப்போம்.

"பதினாறாம் நூற்றாண்டில் அப்பைய தீக்ஷிதர் என்று மஹான் இருந்தார். அவர் அத்வைதியான போதிலும் சிவ உபாஸனையை விசேஷமாக வளர்த்துக் கொடுத்தவர். அவர் காலத்தில் சிவாராதனத்தை மட்டம் தட்டியும் சிவாராதனம் செய்து வந்தவர்களை எதிர்த்தும் விஷ்ணு உபாஸனையாவது "aggressive" என்று சொல்லக் கூடிய விதத்திலேயே பரப்பப்பட்டு வந்ததால்தான் அவர் எதிர் நடவடிக்கையாக சிவோத்கர்ஷத்தை (சிவபெருமானின் உயர்வை) ஸ்தாபித்து நிறையப் பிரசாரம் பண்ணும்படியாயிற்று. அவருக்கு ஸமகாலத்தவராகிய தாதாசாரியார் என்பவர் விஜயநகர ராயவம்சத்தின் கடைசி ராஜாக்களிடம் நிரம்பச் செல்வாக்குப் பெற்றுத் தீவிரமாக வைஷ்ணவப் பிரசாரம், மத மாற்றம் பண்ணி வந்தது தான் சைவத்தை விசேஷமாக நிலைநாட்டும்படி தீக்ஷிதரைத் தூண்டியது. மற்றபடி, எதிராளிகளுக்கு ஒரேயடியாக சிவத்வேஷம் இருந்த மாதிரி அவருக்கு விஷ்ணு த்வேஷம் என்பது லவலேசமும் இருக்கவில்லை. சற்றுமுன் 'ரத்ன த்ரயம்' என்று சொன்னபடி ஈச்வரன், அம்பாள் ஆகியவர்களோடு விஷ்ணுவையும் ஸாக்ஷாத் பரப்ரஹ்மத்தின் ஸ்ரூபமாக – ஏனைய தேவதைகளுக்கெல்லாம் உச்சியிலுள்ள மும்மணிகளில் ஒருவராக – ச்ருதி யுக்தி ப்ரமாணங்கள் காட்டி தீக்ஷிதரே ஸ்தாபித்திருக்கிறார்"

அடையபலத்தில் வேத பாராயணம்

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ பால பெரியவா அவர்களின் உத்தரவுப்படி, அடையபலம் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அவதார ஸ்தலத்தில், என்னிடம் வேதம் கற்று வரும் வித்யார்த்திகள் மூலம் யுகாதியன்று (18-3-2018) வேத பாராயணம் நடைபெற்றது. 75 வித்யார்த்திகள் கலந்து கொண்டனர்.

• சஹஸ்ர காயத்ரி ஜபம் • உபநிஷத் பாராயணம்
• மஹாந்யாஸம் • ஸ்ரீ ருத்ரம் • அருணம் (சூர்ய நமஸ்காரம்)
• ஸ்ரீ காலகண்டேஸ்வரர் சந்நிதியில் ஸ்ரீ ருத்ரத்துடன்
பூஜை அர்ச்சனாதிகள்.

- சர்மா சாஸ்திரிகள்

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அருளிய

ஆத்மார்பண ஸ்துதி

ய. மஹாலிங்க சாஸ்திரிகள் எம்.ஏ., பி.எஸ்

தமிழில் எழுதிய உரையுடன் கூடியது

॥ श्रीगुरुभ्यो नमः ॥

॥ आत्मार्पणस्तुतिः ॥

(श्रीमदप्पय्यदीक्षित विरचिता)

ஆத்மார்பண ஸ்துதி

(அப்பய்ய தீக்ஷிதர் எழுதியது)

—* देवदेव प्रभावकथनम् *—

कस्ते बोद्धुं प्रभवति परं देवदेव प्रभावं
यस्मादित्थं विविधरचना सृष्टिरेषा बभूव।
भक्तिग्राह्यस्त्वमसि तदपि त्वामहं भक्तिमात्रात्
स्तोतुं वाञ्छाम्यतिमहदिदं साहसं मे सहस्व ॥ १ ॥

கஸ்தே போத்தும் ப்ரபவதி
பரம் தேவதேவ ப்ரபாவம்
யஸ்மாதித்தம் விவிதரசனா
ஸ்ருஷ்டிரேஷா பபூவ।
பக்திக்ராஹ்யஸ்த்வமஸி ததபி
த்வாமஹம் பக்திமாத்ராத்
ஸ்தோதும் வாஞ்சாம்யதிமஹதிதம்
ஸாஹஸம் மே ஸஹஸ்வ ॥ 1 ॥

(பதவுரை) இந்த சுலோகம் மஹாதேவனின் பெருமையைக் கூறுகிறது. தேவதேவ - தேவர்களுக்குள் சிரேஷ்டனே, யஸ்மாத் - எவரிடமிருந்து இத்தம் - (இந்திரஜாலம் போல) எங்கும் காணப்படுகிற (விசித்திரமான)

विविधरचना - பற்பல அமைப்புகளோடு கூடின, **एषा** - ப்ரத்யக்ஷமான இந்த **सृष्टिः** - சிருஷ்டி காரியமான உலகமானது, **बभूव** - உண்டாயிற்றே (அப்படிப் பட்ட), **ते** - உம்முடைய, **परं भावं** மேலான மஹிமையை, **वेद्धुं**-அறிவதற்கு, **कः प्रभवति** (தேவர்களிலும் மனிதர்களிலும்) யார் சக்தியுள்ளவனாகிறான்? **तदपि** - அப்படி இருந்தபோதிலும், **इह**-இங்கு, **त्वं**-நீர், **भक्तिग्राह्यः असि** - பக்தியினால் அறியக்கூடியவராக இருக்கிறீர், (**तत्** - ஆகையினால்,) **अहं** - நான், **त्वां** - உம்மை, **भक्तिमात्रात्** - பக்தியை முன்னிட்டே, **स्तोतुं** - ஸ்தோத்திரம் செய்ய, **वाञ्छामि** - விரும்புகிறேன், **मे** - என்னுடைய, **अतिमहत्** - மிகப் பெரிய, **इदं** - இந்த, **साहसं** - துணிச்சலை, **सहस्व** - பொறுத்துக்கொள்ளும்.

(கருத்துரை) இந்த விசித்திரமான பிரபஞ்சத்தைப் படைத்தவரும் தேவர்களுக்குள் முதல்வனுமான உன் அபாரமான மஹிமைகளை யாரால் தான் அறிய முடியும்? ஆயினும் **अनन्यचेताः सततं यो मां स्मरति नित्यशः। तस्याहं सुलभः पार्थ नित्ययुक्तस्य योगिनः॥** என்ற கீதா வாக்கியப்படி பக்தர்களுக்கு அந்த ஈசுவரனும் சுலபர் ஆகிவிடுகிறபடியால் பக்தியையே முன்னிட்டு நான் உம்மை ஸ்துதி செய்யப் போகிறேன். என் துணிச்சலைப் பொறுத்துக் கொள்ளவேண்டும். **कस्यं कविं कव्यक्कामरूपं तुन्दुवांसोऽमृतत्वं भजन्ते** என்ற வேதம் உன்னை எந்தவிதத்திலாவது ஸ்துதி செய்யும்படி என்னைத் தூண்டுகிறது.

(விசேஷவுரை) **दीव्यन्तीति देवाः विष्ण्वादयः। तेषामपि भासकत्वात् देवदेवः। तथा च श्रुतिः "तस्य भासा सर्वमिदं विभाति।** அவனே முதல்வன் என்பது **ते देवा रुद्रमब्रुवन्**

को भवानिति। सोऽब्रवीदहमेकः प्रथममासं वर्तामि च भविष्यामि नान्यः कश्चन मत्तो व्यतिरिक्तः என்ற வேதவாக்யங்களால் புலப்படும். ஈசன் பக்தி யோகத்தினல் சுலபர் என்பது ध्यानेन वृणुते यो मां सर्वदाहं वृणोमि तम् என்ற ஈசுவரகீதா வாக்யத்தினுல் தோன்றும். ஸ்துதிக்க வேண்டும் என்பது स्तुहि श्रुतं गर्तसदं युवानं, तुष्टुवांसोऽमृतत्वं भजन्ते। இம் மாதிரியான வேத வாக்யங்களால் தெளிவுபடுத்தப்படுகிறது.

—* जगत्स्रष्टृस्वरूपविचारः *—

क्षित्यादीनामवयववतां निश्चितं जन्म तावत्
तन्नास्त्येव क्वचन कलितं कर्त्रधिष्ठानहीनम्।
नाधिष्ठातुं प्रभवति जडो नाप्यनीशश्च भावः
तस्मादाद्यस्त्वमसि जगतां नाथ जाने विधाता॥ २॥

க்ஷித்யாதீனமவயவவதாம்
நிச்சிதம் ஜன்ம தாவத்
தன்னஸ்த்யேவ க்வசன கலிதம்
கர்த்ரதிஷ்டானஹீனம்।
நாதிஷ்டாதும் ப்ரபவதி ஜடோ
நாப்யனீசஸ்ச பாவः
தஸ்மாதாத்யஸ் த்வமஸி ஜகதாம்
நாத ஜானே விதாதா॥ 2॥

(ப-ரை) இது உலகத்தை படைத்தவரின் சொரூபத்தை விரித்துரைக்கிறது. नाथ-ஹே ஸ்வாமி, अवयववतां பலவித உறுப்புக்களின் சேர்க்கை ரூபமான, क्षित्यादीनां - பூமி முதலிய பலைடக்கப்பட்ட பதார்த்தங்களுக்கு जन्म - உற்பத்தி ஆனது, निश्चितं तावत் - அவசி

யம் ஒப்புக்கொள்ளப்பட வேண்டியதே. तत् - அவ்வுற்பத்தியோ வெனில், कचन - ஒரிடத்திலும், कर्त्रधिष्ठानहीनं உற்பத்தி செய்பவன், உற்பத்திக்கு ஆதாராமாயுள்ள பொருள் என்ற இவ்விரண்டும் இல்லாததாக, नास्त्येव कलितम् - அறியப்பட்டதே கிடையாது. जडः - அசேதனமான எந்தப் பதார்த்தமும், अधिष्ठातुं - உற்பத்தியை நிறைவேற்ற, न प्रभवति - திறமையுள்ளதாக ஆகாது. (அப்படியே) अनीशः – தனக்கு ஸ்வாதந்த்ர்யமில்லாத भावः- எந்த சேதனனும், न प्रभवति - (அந்தத் தொழிலை நடத்த) திறமையுள்ளவனாக ஆக மாட்டான், तस्मात் - ஆகையினால் (கடைசியாக யோசித்துப் பார்த்தால்), आद्यः - இந்த பிரபஞ்ச ஸ்ருஷ்டிக்கும் முதல்வனான, त्वं நீயே, जगतां - உலகங்களுக்கு, विधाता ஸ்ருஷ்டி கர்த்தாவாக, असि - இருக்கிறாய் (என்றும்), जाने - நான் ஊகிக்கிறேன்.

(க - ரை) ஒரு குடம் கர்த்தாவான குயவனாலும் அதிஷ்டானமாகிற மண்ணினாலும் உண்டாகிறது. அதுபோல இந்த பிரபஞ்ச ஸ்ருஷ்டிக்கும் ஒரு கர்த்தாவும் அதிஷ்டானமும் அவசியம் தேவை. ஜடபதார்த்தம் சேதனனின் ஸம்பந்தமில்லாவிடில் உருமாறாது. ஆனால் யாராவது ஒரு சேதனன் இந்தப் பிரபஞ்ச சிருஷ்டியை செய்திருக்கலாமோவென்றால், தன்னுடைய கர்ம பலன்களுக்குக் கட்டுப்பட்ட எந்தச் சேதனனும் இதைச் செய்திருக்க முடியாது. மாயையும் ஜடமாதலால் அதனாலும் இந்தக் காரியம் இயலாது. ஆகையினால் எல்லாவற்றிற்கும் முதல்வனாயும், ஸ்வயம் ஸர்வ சக்தியுடையவனுமாகிய நீயே இந்த லோகத்தின் ஸ்ருஷ்டி கர்த்தா என்பதற்கு என்ன சந்தேகம்?

(வீ – ரை) कालः स्वभावो नियतिर्यदृच्छा भूतानि योनिः पुरुष इति चिन्त्या। संयोग एषां न त्वात्मभावादात्माप्यनीशः सुखदुःखहेतोः ॥ प्रकृतिश्च प्रतिज्ञादृष्टान्तानुपरोधात् என்ற உபநிஷத், ப்ரம்ம சூத்திரம் முதலியன காலம் முதலியன சிருஷ்டி கர்த்தாவாகமாட்டா என்பதைத் தெரிவிக்கின்றன. ततः प्रथमसृष्टेस्तु समस्तोपाधिवर्जितः। कर्ता महेश एवेष्टः प्रवृत्ताशेषशक्तिकः॥ शिवात्सत्यपरानन्दप्रकाशैकस्वलक्षणात्। आविर्भूतमिदं सर्वं चेतनाचेतनात्मकम् ॥ सर्वैश्वर्यसंपन्नः सर्वेश्वरः शम्भुराकाशमध्ये, என்ற ஸுதஸம்ஹிதா வாக்யம், உபநிஷத் முதலியன சிவனே ஸ்ருஷ்டி கர்த்தா ஸகல சக்தி வாய்ந்தவன் என்பதை விளக்கிக் கூறுகின்றன.

—* सर्वदेवोत्तरत्वकथनम् *—

इन्द्रं मित्रं वरुणमनिलं पद्मजं विष्णुमीशं
प्राहुस्ते ते परमशिव ते मायया मोहितास्त्वाम्।
एतैः सार्धं सकलमपि यच्छक्तिलेशे समाप्तं
स त्वं देवः श्रुतिषु विदितः शम्भुरित्यादिदेवः ॥ ३ ॥

இந்த்ரம் மித்ரம் வருணமனிலம்
பத்மஜம் விஷ்ணுமீசம்
ப்ராஹுஸ்தே தே பரமசிவ தே
மாயயா மோஹிதா ஸ்த்வாம்।
ஏதைஸ்ஸார்த்தம் ஸகலமபி யச்
சக்திலேசே ஸமாப்தம்
ஸ த்வம் தேவ: ச்ருதிஷு
விதித: சம்புரித்யாதிதேவ: ॥ 3 ॥

(ப-ரை) இந்த சுலோகம் எல்லா தேவர்களிலும் நீ மேலானவன் என்பதைக் கூறுகின்றது. ते-உன்னுடைய मायया-மாயையினல், मोहिताः-கலக்கப்பட்ட, ते ते-அந்தந்த மதாபிமானிகள், हे परमशिव-ஹே பரமேச்வர त्वां-(ஜகத் காரணமாகிய) உன்னை, इन्द्रं-இந்திரன், मित्रं-சூரியன், वरुणं-வருணன், अनिलं-வாயு, पद्मजं-ப்ரம்மா, विष्णुं-விஷ்ணு, ईशं-ருத்திரன் என்றும் प्राहुः-சொல்லுகிறார்கள், एतैः सार्धं-இவர்களோடு சேர்ந்து, सकलमपि-மற்றெல்லாமும், यच्छक्तिलेशे-எவருடைய சக்தியின் சிறு பகுதியில். समाप्तं-அடங்கி விடுகிறதோ. श्रुतिषु-வேதங்களில், शम्भुः इति विदितः-சம்பு என்று பிரகாசப்படுத்தப்பட்ட, आदिदेवः-சகல தேவர் களுக்கும் முதன்மையான, स देवः-அந்தக் கடவுள், त्वम्-நீயே.

(க-ரை) உன் மாயையினல் மோஹமடைந்த பற்பல ஜகத் காரணவாதிகள் ஸ்வர்க்கத்திற்கதிபதி யான இந்திரனையும், உலகத்திற்கு உஷ்ணத்தையும் வெளிச்சத்தையும் தரும் சூரியனையும், பாபங்களைப் போக்கும் ஸமுத்ராதிபதியான வருணனையும், பலவா னகிய வாயுவையும், ப்ரம்மா விஷ்ணு ருத்திரன் முதலியவர்களையும் உலகத்தின் ஸ்ருஷ்டி கர்த்தாவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனல் மேற்கூறிய தேவதைகள் எல்லோரும் உன் மகிமையின் ஒரு திவிலைக்குள் அடங்கிப்போனவர்கள். வேதங்களால் குறிப்பிடப்பட்ட ஆதியான பரம்பொருள் சகல சிருஷ்டிக்கும் காரணம் பரமசிவமாகிய நீயே.

(வி-ரை) स्त्रीपुंनपुंसकादित्वाज्जगतः कार्यदर्शनात्। अस्ति कर्ता स इत्येतत्सृजत्यस्मात् प्रभुर्हरः என்ற ரௌரவாகமத்தி

ளுள்ள சிவஜ்ஞான போத ஸூத்ரம் சிவனே கர்த்தா என்பதைத் தெளிவுபடுத்துவதாகும். विवादाध्यासितं विश्वं विश्ववित्कर्तृपूर्वकम् । कार्यत्वादनयोः सिद्धं काय-कुम्भादिकं यथा ॥ अचेतनस्य मायादेः प्रवर्तकतया पतिः । सिद्धः सर्वार्थवित्कर्ता व्यापकः सततोदितः ॥ என்பது முதலிய பௌஷ்கர ஆகம வாக்யங்களில் சொல்லப்பட்ட அனுமானங்களாலும் மாயை முதலியன கர்த்தா ஆகமாட்டா, ஈசனே ஜகத் கர்த்தா என்பதும் புலப்படும். शिवात्सस्यपरानन्दप्रकाशैकस्वलक्षणात् என்பது முதலிய ஸூதஸம்ஹிதா வாக்யங்களும் கவனிக்கத் தக்கன. जन्माद्यस्य यतः, शास्त्रयोनित्वात् முதலிய வியாஸ ஸூத்திரங்களும் அவ்விடத்தில் பாஷ்யத்தில் எடுத்துக் காட்டப்பட்ட வேதவாக்யங்களும், அதன் காரணமாகத் தோன்றிய அனுமானங்களும் ஈசனே ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார, அநுக்ரஹ, திரோபாவ மென்ற பஞ்ச க்ருத்ய காரணம் என்பதை வலியுறுத்தும்.

—* श्रीसोमलोकाख्यशिवस्थानवर्णनम् *—

आनन्दाब्धेः किमपि च घनीभावमास्थाय रूपं
शक्त्या सार्धं परमसुमया शाश्वतं भोगमिच्छन् ।
अभ्यतीते शुचिदिवसकृत्कोटिदीप्रे कदर्दिन्
आद्ये स्थाने विहरसि सदा सेव्यमानो गणेशैः ॥ ४ ॥

ஆனந்தாப்தேः கிமபி ச
கனீபாவமாஸ்தாய ரூபம்
சக்த்யா ஸார்த்தம் பரமமுமயா
சாச்வதம் போகமிச்சன் ।

அத்வாதீதே சுசி திவஸக்ருத்
கோடி தீப்ரே கபர்தின்
ஆத்யே ஸ்தானே விஹரஸி ஸதா
ஸேவ்யமானே கணைசை: ॥ 4 ॥

(ப-ரை) ஸோமலோகம் என்ற சிவனுடைய ஸ்தானத்தை இந்த ச்லோகம் வர்ணிக்கிறது. **कपर्दिन्** (கங்கையோடு கூடின) ஜடையை தரித்தவரே! **त्वं**-நீர் **आनन्दाब्धेः**-ப்ரம்மானந்தப் பெருக்கின், **घनीभावं**-உறைதலினால் ஏற்பட்டதான, **किमपि च रूपं**-இத்தன்மையானதென்று விரித்துரைக்க முடியாத ஒரு ஸ்வரூபத்தை, **आस्थाय**-தரித்துக் கொண்டு, **शक्त्या उमया सार्धं**-உமா ஸ்வரூபமாகிய தன் சக்தியோடு கூட, **परमं**-மேலான, **शाश्वतं**-அழிவற்ற **भोगं**-ஆனந்தானுபவத்தை, **ईप्सून्**-நீர் விரும்பினவராய், **अध्वातीते**-வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாத (பிரளயம் முதலிய மாறுதல்களுக்கு உட்படாத), **शुचिदिवसकृत्कोटिदीप्रे**-கோடைக் காலத்துக் கோடி சூரியர் சேர்ந்தாற்போல் பிரகாசமாயுள்ள, **आद्ये स्थाने**-அநாதியான சிவலோகத்தில், **सदा**-எப்பொழுதும், **गणेशैः**-கணஸ்ரேஷ்டர்களால், **सेव्यमानः**-உபாஸிக்கப்படுகிறவராய், **विहरसि**-விளங்குகிறீர்!

(க-ரை) முன் சுலோகத்தில் இந்திரன் முதல் மும்மூர்த்தி வரையிலுள்ள ஸகல தேவர்களும் எவருடைய சக்தி லேசத்தில் முடிவடைகின்றனரோ, வேதங்களால் உணர்ந்தோதற்கரிய அவ்வித ஆதி தேவனாகிய பரமேசுவரனுக்கு, எவ்வித ஸ்வரூபம், எந்த ஸ்தானம், எவ்வித பரிவாரங்கள் என்பதை இந்த சுலோகத்தில் விரித்துரைக்கின்றார். அநுபமான

பரமேசுவரனும் லோகானுக்ரஹத்தின் பொருட்டு லீலா விக்ரஹமெடுத்துக் கொள்ளுகிறார் என்பது சாஸ்திரங்களின் கொள்கை. ஜலம் உறைந்து பனிக் கட்டியாவது போல் ஆனந்த வெள்ளம் கெட்டியாகி ஒரு ஸ்வரூபமானது என்று சொல்லக்கூடியது பரமேசுவரனின் ஸ்வரூபம். அவருடைய சக்தியே உமையாகி அவரோடு சேர்ந்தது. அவர் இருப் பதோ கோடி ஸூர்யப்ரகாசமான ஒரு ஸ்தானம். அது ஸ்ருஷ்டிக்கு முன்னுல் பரமேச்வரனின் இச்சை யால் ஆனது. அந்த ஸ்தானம் அத்வாக்கள் என்ற தத்துவங்களுக்கு அப்பாலுள்ளது. வர்ண, பத, மந்த்ர, புவன, தத்வ, கலா என்பன ஆறு அத்வாக்கள், மூலாதார, ஸ்வாதிஷ்டான, மணீபூர, அனுஹத, விசுத்தி, ஆஜ்ஞா என்ற இவைகளைக் கடந்தே சிவபதமடைய வேண்டியவர் செல்ல வேண்டும். அந்த ஸ்தானத்தில் தன் அம்சம் பொருந்தின சிறந்த கணங்களால் ஸேவிக்கப்படுகிறார்.

(வி-ரை) स एव मायापरिमोहितात्मा शरीरमास्थाय करोति सर्वम्। स्त्रियन्नपानादिविचित्रभोगैः स एव जाग्रत् परि-वृत्तिमेति॥ என்பது லீலாவிக்ரஹங்களை எடுத்துபோகாதி களை அனுபவிக்கிறார் என்பதைக் காட்டுகிறது. वर्णाध्वा च पदाध्वा च मन्त्राध्वा भुवनाध्वकः। तत्वाध्वा च कलाध्वा च षडध्वान इमे मताः॥ என்று ஆறு அத்வாக்கள் கிரணக மத்தில் கூறப்பட்டுள்ளன. ஸித்தாந்த ஸாரத்தில் பதினெட்டு தத்வ பரிமாணங்கள் क्षमावत्वं शतकोटियो-जनमपः प्रारभ्य गोणात्मकं என்று ஆரம்பித்து விரிவாகச் சொல்லப்படுகின்றன. தந்திராகமத்தில் பிராஸாத மந்திர உத்தார படலத்தில் समनान्तं पाशजालमुन्मन्यन्ते

परः शिवः । என்று கூறப்பட்ட இதை சிவயோகிகள் 'த்வாதசாந்த'பதம் என்று கூறுகிறார்கள். அத்வ சோதனைக்குரிய மார்க்கங்களும் முறைகளும், ஆகமங்களில் கூறப்படுகின்றன. மூலாதாரம் முதலிய ஆதாரங்களும் ஆங்காங்கு உள்ள தேவதைகளும் த்வாதசாந்தப் பெருவெளியில் பரசிவத்தின் விளக்கமும் ஆகமங்களிலேயே கண்டு கொள்க.

—* स्वस्वोचिताचारैः शिवप्रीणनम् *—

त्वं वेदान्तैर्विविधमहिमा गीयसे विश्वनेतः
त्वं विप्राद्यैर्वरद निखिलैरिज्यसे कर्मभिः स्वैः ।
त्वं दृष्टानुश्रविकविषयानन्दमात्रावितृष्णैः
अन्तर्ग्रन्थिप्रविलयकृते चिन्त्यसे योगिवृन्दैः ॥ ५ ॥

த்வம் வேதாந்தைர் விவிதமஹிமா
கீயஸே விச்வநேதஃ
த்வம் விப்ராத்யைர் வரத
நிகிலைரிஜ்யஸே கர்மபிஸ்ஸ்வைஃ ।
த்வம் த்ருஷ்டாநுச்ரவிக
விஷயாநந்தமாத்ராவித்ருஷ்ணைஃ
அந்தர் க்ரந்தி ப்ரவிலயக்ருதே
சிந்த்யஸே யோகி ப்ருந்தைஃ ॥ 5 ॥

(ப - ரை) யாவரும் தங்கள் தங்கட்குரிய ஆசாரங்களால் சிவபெருமானை திருப்தி செய்விக்கின்றனர் என்று கூறுகிறார். विश्वनेतः - ஸர்வ லோகங்களையும் நடத்தி வைப்பவனே! त्वं - நீ, वेदान्तैः - உபநிஷத்துக்களால், विविधमहिमा - பலவித பெருமை வாய்ந்தவனாக

गीयसे - துதிக்கப்படுகிறாய்; वरद - (பக்தர்களுக்கு வேண்டிய) வரங்களை அளிப்பவனே! त्वं - நீ, विप्राद्यैः निखिलैः - பிராமணர்களாலும் மற்ற எல்லா வர்ணத்தினராலும், स्वैः कर्मभिः - தங்கட்குரிய யஜ்ஞம் முதலிய கர்ம விசேஷங்களால், इज्यसे - திருப்தி செய்விக்கப்படுகிறாய். त्वं - நீ, दृष्टानुश्रविकविषयानन्दमात्रावितृष्णैः - மனுஷ்ய போகங்கள், ஸ்வர்க்க போகங்கள் இவைகளினால் ஏற்படக்கூடிய ஆனந்தத்தைச் சிறிதளவும்கூட விரும்பாத வைராக்யமுடையவர்களான, योगिवृन्दैः - சிவயோகிகளால், अन्तर्ग्रन्थिप्रविलयकृते - சரீரத்திற்குள் (மூன்று ஸ்தானங்களில் நாடிகளின் சிக்கல்களால்) ஏற்பட்டிருக்கும் முடிச்சுகள் அற்றுப்போகும் பொருட்டு, चिन्यसे - தியானத்தில் புகுத்தப்படுகிறாய்.

(க - ரை) விஷயங்கள் இருவகை. ஒன்று दृष्ट - அதாவது இவ்வுலகில் அனுபவிக்கப்படுகின்ற அன்னபானங்களும், வீடு, பணம், பெண் பிள்ளை இவைகளும். மற்றொன்று आनुश्रविक - அதாவது சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட அப்ஸரஸ் முதலிய ஸ்வர்க்க போகங்கள். முன் சுலோகத்தில் சொன்னபடி ஈசுவரன் வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாத பரசிவஸ்தானத்தில் இருப்பாராயின் அவரை நாம் உபாஸிப்பது எப்படி? உன் மஹிமைகள் உபநிஷத்துக்களால் பலவாறு போதிக்கப்படுகின்றன. வர்ண தர்மங்களைப் பரிபாலிக்கும் பிராமணர் க்ஷத்திரியர் முதலியவர்களால் நீ கர்மாவிஞ்லேயே உபாஸிக்கப்படுகிறாய். யோகிகளோ விஷய போகங்களில் இச்சையற்றவர்களாய் உன்னை தியானம் மூலமாய் உபாஸிக்கிறார்கள். தியானத்தினால் அவர்கள் சரீரத்தினுள்ளிருக்கும் மூலாதாரம் மணி-

பூரம் ஆஜ்ஞாஸ்தானங்களிலிருக்கும் நாடிகளின் செடுக்குகளைத் தெறிக்கச் செய்து முக்தியை சாதித்துக் கொள்ளுகின்றனர். ஞான மார்க்கத்தினாலும் கர்ம மார்க்கத்தினாலும் யோகமார்க்கத்தினாலும் மேயே ஆராதிக்கப்பட்டு மோக்ஷ ஸாம்ராஜ்யமளிப்பவன் என்பது.

(வி - ரை) त्वमसि पयसामर्णव इव என்ற வாக்யம் இங்கு கவனிக்கத்தக்கது. अनध्वगा अध्वसु पारयिष्णवः, सोऽध्वनः पारमाप्नोति, अध्वनामध्वपते श्रेष्ठस्याध्वनः पारमशीय முதலிய வேதவாக்யங்கள் ஷடத்வாதீதமான மோக்ஷஸ்வரூபத்தை உணர்த்துவன.

ध्यायन्तस्त्वां कतिचन भवं दुस्तरं निस्तरन्ति
त्वत्पादाब्जं विधिवदितरे नित्यमाराधयन्तः ।
अन्ये वर्णाश्रमविधिरताः पालयन्तस्त्वदाज्ञां
सर्वं हित्वा भवजलनिधावेष मज्जामि घोरे ॥ ६ ॥

த்யாயந்தஸ்த்வாம் கதிசன பவம்
துஸ்தரம் நிஸ்தரந்தி
த்வத்பாதாப்ஜம் விதிவதிதரே
நித்யமாராதயந்தः ।
அன்யே வர்ணாச்ரமவிதிரதாः
பாலயந்தஸ்த்வதாஜ்ஞாம்
ஸர்வம் ஹித்வா பவஜலநிதௌ
ஏஷ மஜ்ஜாமி கோரே ॥ 6 ॥

(ப - ரை) कतिचन - சிலர், त्वां - உன்னை, ध्यायन्तः - தியானம் செய்கிறவர்களாய், दुस्तरं - கடக்க முடியாத,

भवं – ஸம்ஸாரத்தை, निस्तरन्ति - கடந்து விடுகிறார்கள், इतरे - மற்றவர்கள் (த்யான ஸமாதியையடைய சக்தியில்லாதவர்கள்), नित्यं - நாள்தோறும், विधिवत् - முறைப்படி, त्वत्पादाब्जं - உன் சரண கமலத்தை, आराधयन्तः - பூஜித்துக் கொண்டு (கடக்க முடியாத ஸம்ஸாரத்தைக் கடக்கிறார்கள்). अन्ये - வேறு சிலர் (சுவர பூஜையும் செய்ய இயலாதவர்கள்) वर्णाश्रमविधिरताः - ஸ்மிருதிகளில் விதிக்கப்பட்ட வர்ணாஶ்ரம தர்மங்களை அனுஷ்டிப்பதில் சிரத்தை கொண்டவர்களாயிருந்து கொண்டு, त्वदाज्ञां - உன் கட்டளையை, पालयन्तः நிறைவேற்றுகிறவர்களாய் (கடக்க முடியாத ஸம்ஸாரத்தைக் கடக்கிறார்கள்). एषः (अहं) - இந்த நானே, सर्वं हित्वा - (தியானம், அர்ச்சனம், ஆசார ரக்ஷணம் என்ற) எல்லா வழிகளையும் விட்டு விட்டு, घोरे - பயங்கரமான भवजलनिधौ - ஸம்ஸார ஸாகரத்தில், मज्जामि – மூழ்கிறேன்.

(க – ரை) மேற்கூறிய தியானத்தினுல், ஸம்ஸார ஸாகரத்தை சிலர் தாண்டுகின்றனர். சிலர் உன் மூர்த்தியை பூஜை செய்து அப்பலனை அடைகின்றனர். மற்றும் சிலர் உன் கட்டளைப்படி வர்ணாஶ்ரம தர்மங்களை வழுவாமல் நடத்தி வந்து பிறவிக் கடலிலிருந்து கரையேறுகிறார்கள். நானே யோகிகளைப் போலத் தியானம் செய்ய முடியாதவனுய், உன் பக்தர்களைப் போல உன்னை அபிஷேகம், அர்ச்சனை, ஸ்துதி, நமஸ்காரம் முதலியன செய்து ஆராதிக்க சக்தியற்றவனுய், சிஷ்டர்களைப் போல உன் விதிகளை உணர்ந்து தர்மங்களை அனுஷ்டித்து கர்மாக்களை சிரத்தையுடன் செய்யுமைமையில்லாதவனுமாய் என் நற்கதிக்கு யாதொரு

வழியையும் தேடிக்கொள்ளாமல் இந்த பயங்கரமான ஸம்ஸாரக் கடலிலேயே மூழ்கிக் கொண்டிருக்கிறேன்.

(வி – ரை) शिव एको ध्येयः सर्वमन्यत्परित्यज्य। शिवलिङ्गं त्रिसन्ध्यमहरहरभ्यर्चयेत्, मन्त्रेषु कर्माणि कवयो यान्यपश्यन् तानि त्रेतायां बहुधा सन्ततानि। तान्याचरथ नियतं सत्यकामा एष वः पन्थाः सुकृतस्य लोके ॥ என்ற வாக்யங்கள், தியானம், ஈச்வர ஆராதனம், வர்ணச்ரம தர்மானுஷ்டானம் என்றவைகள் சுற்சுதியடைய ஸாதனம் என்பதை விளக்குகின்றன.

—* स्ववंशकीर्तनम् *—

उत्पद्यापि स्मरहर महत्युत्तमानां कुलेऽस्मिन्
आस्वाद्य त्वन्महिमजलधेरप्यहं शीकराणून्।
त्वत्पादार्चाविमुखहृदयश्चापलादिन्द्रियाणां
व्यग्रस्तुच्छेष्वहह जननं व्यर्थयाम्येष पापः ॥ ७ ॥

உத்பத்யாபி ஸ்மரஹர
மஹத்யுத்தமானும் குலேஸ்மின்
ஆஸ்வாத்ய த்வன் மஹிம
ஜலதேரப்யஹம் சீகராணூன் |
த்வத்பாதார்ச்சா விமுக
ஹ்ருதயுஸ்சாபலா திந்த்ரியாணும்
வ்யக்ரஸ்துச்சேஷ்வஹஹ ஜனனம்
வ்யர்த்தயாம்யேஷ பாபः ॥ 7 ॥

(ப – ரை) தன் வம்சத்தைப் பற்றிக் கூறுகிறார். हे स्मरहर – காமனைக் கண்ணால் எரித்த பகவானே! पापः பாபியான, एषः இந்த நான், उत्पद्यापि – பெரியவர்

களுடைய, महति अस्मिन् कुले - உயர்ந்த பிரசித்தி பெற்ற இந்தக் குலத்தில், उत्पद्यापि - ஜனித்தும் கூட, त्वन्महिम-जलधेः - உன் மஹிமையாகிய கடலின், शीकराणून् - சித றிய சிறு திவலைகளை, आस्वाद्यापि - பருகியும் கூட, इन्द्रियाणां चापलात् - இந்திரியங்களின் சபலத் தன்மை யினால், त्वत्पादार्चाविमुखहृदयः - உன் திருவடி சேவை யில் ஈடுபடாத மனமுடையவனாய், तुच्छेषु - அல்பமான விஷயங்களில், व्यग्रः - பரபரப்பு உடையவனாக (जननं ஜன்மாவை, व्यर्थयामि - வீணாக்குகிறேன். अहह - ஐயோ கஷ்டமே.

(க - ரை) ஸ்ரீமத் ஆசார்ய தீக்ஷிதர் ஸ்ரீரங்கராஜ தீக்ஷிதர் முதலிய மஹான்கள் உதித்த இந்த புனிதமான குலத்தில் நான் பிறந்தும், உன் பெருமைகளைத் தெரி விக்கும் வேத வேதாந்த புராணங்களில் ஏதோ சிறிது சிறிது கற்றறிந்திருந்தும் பாபியான நான் இந்திரி யங்களுக்கு அடிமையாகி உன் திருவடி சேவையை மறந்து மிகவும் அற்பமான விஷய போகங்களில் ஈடு பட்டு உத்தமமான இந்த ஜன்மத்தைப் பாழ் செய்து கொள்கிறேன். ஐயோ என்ன பரிதாபம்! காமனை எரித்த பரமேசுவரா! (என் ஆசைகளை நீ எரிக்க மாட்டாயா?)

(வி - ரை) कृतदीक्षोऽघोरमुखे कुलकूटस्थो भरद्वाजः। विद्येश्वरेषु कश्चन पितामहो न इति विस्रम्भः॥ என்றும், श्रीकण्ठोऽवतार यस्य वपुषा, என்றும் நீலகண்ட தீக்ஷி தர் தன் பெரிய பாட்டனார் ஈச்வராவதாரம் என் பதைக் குறிப்பிடுகிறார்! மேலும் அவதார புருஷர்கள் கூட மற்ற மனிதர்களைப் போல வாழ்க்கைக் கிலேசங் களினிடையே தன்னையே நொந்து தொண்டு புரி

தவிப்பதை நாம் இராமாயணம் முதலிய சரித்திரங்களில் காண்கின்றோம். யுத்த மத்தியில் இராமன் **धिङ्मां दुष्कृतकर्माणं अनार्यं मत्कृते ह्यसौ। लक्ष्मणः पतितः शेते शरतल्पे गतासुवत्॥** என்று புலம்புவது கவனிக்கத்தக்கது. பெரியோர் தங்களை உதாஹரித்துச் சொல்லிக் கொள்ளுவது உலகத்திற்குப் பயனுண்டாம் பொருட்டேயாம். இத்தகைய ஸ்துதிகளைப் படிக்கும் ஸம்ஸாரிகள் இந்த உண்மைகளை உணர்ந்து நற்கதி யடையுமாறு இங்ஙனம் அவை குறிக்கப்பட்டிருக்கின்றன. பெரியோர் தங்கள் பெருமையை யறியார் என்பதும், சிறியோர்களே தற்புகழ்ச்சியாய் பிதற்றிக் கொள்ளுவார்கள் என்பதும் அறிவாளிகள் அறிந்த விஷயமே. மேலும் **சிவரஹஸ்யம்** என்றபுராணத்தில் சங்கர பகவத்பாதரின் அவதாரத்தைச் சொல்லுமிடத்தில் தீக்ஷிதர் அவர்களின் அவதாரத்தைப் பற்றியும் கூறியுள்ளது. **दीक्षितोऽपि भवेत्कश्चित् मदंशो भूसुरोऽम्बिके। भासुराचारनिरतः शैवच्छन्दोगवंशजः। शैवशास्त्रं तदा लुप्तं भूमौ विस्तारयिष्यति।** என்று. ஆனால் ஈச்வராம்சம் பொருந்தியவரும், மஹா பரிசுத்த சரித்ரமுடையவரும், ஆசாரசீலரும், ஜ்ஞான வைராக்ய ஸம்பன்னரும், வித்யா ப்ரவசனத்தாலும் நூற்றுக்கதிகமான க்ரந்த கரணத்தினாலும் லோகோபகாரியும், ஸ்ரீகண்ட மத அத்வைத மத பிரதிஷ்டாபகர் என்ற பட்டம் தாங்கியவரும் ஆன இந்த மஹாபுருஷனும் ஏன் தன்னை இப்படி இழிவாம்ப்ச் சொல்லிக் கொள்ள வேண்டும் என்றால், அத்தகையோர், ஆனதால் தான் அவ்விதம் நொந்து கொள்ளுகிறார் என்பதே பதிலாகும். மஹான்களுக்கு பிறவி என்பதே பெருந்துக்கத்தைத் தருவதாகும். அவர்களை நம்மைப்போல் ஸுகதுக்கங்கள் பாதிப்பதில்லை. ஈச்வரா

ராதனத்திற்கும் ஆத்ம ஸ்வரூபானுஸந்தானத் திற்கும் இடுக்கண்ணுயுள்ள சிறிய ஸம்ஸார பந்தங்களும் அவர்களுக்கு பொருக்க முடியாதனவாகின்றன. **विपदो नैव विपदः संपदो नैव संपदः। स्वस्वरूपं भवेत्संपत् तदन्यत् सुधियां विपत्॥** இவ்விதமான பெரியோர்கள் தோன்றுவதனுலேயே அந்த வம்சம் உத்தமமானது என்பது தோன்றும். **ब्राह्मण्यं प्राप्य लोकेऽस्मिन्नमूकोऽबधिरो भवेत्। नापक्रामति संसारात् स खलु भ्रूणहा भवेत्॥** என்ற வாக்கியம் நற்குலத்தில் பிறப்பதும் இந்திரியங்களைப் பெறுவதும் பிறவிக் கடலிலிருந்து கரையேறி பேரின்ப வீட்டை அடைவதற்கே என்பதையும், அவ்விதம் அடையாதவர் பாபிகள் என்பதையும் தெளிவாகக் கூறுகிறது.

—* शिवपूजासाधनसौलभ्यशंसनम् *—

अर्कद्रोणप्रभृतिकुसुमैरर्चनं ते विधेयं
प्राप्यं तेन स्मरहर फलं मोक्षसाम्राज्यलक्ष्मीः।
एतज्ज्ञानन्नपि शिव शिव व्यर्थयन्कालमात्मन्
आत्मद्रोही करणविवशो भूयसाऽधः पतामि॥ ८॥

அர்க்கத்ரோணப்ரப்ருதி குஸுமைः
அர்ச்சனம் தே விதேயம்
ப்ராப்யம் தேன ஸ்மரஹர பலம்
மோக்ஷ ஸாம்ராஜ்ய லக்ஷ்மீः।
ஏதஜ் ஜானன்னபி சிவ சிவ
வ்யர்த்தயன் கால மாத்மன்
ஆத்மத்ரோஹீ கரணவிவஶோ
பூயஸாதः பதாமி॥ 8॥

(ப-ரை) சிவபூஜைக்குரிய ஸாதனங்கள் எளிதில் கிடைக்கக்கூடியன என்று கூறுகிறார். **स्मरहर**- காமனைக் கண்ணுல் எரித்த பிரபுவே, **अकृष्टोणप्रभृति कुसुमैः** - எருக்கு தும்பை முதலிய (மிக எளிதில் கிடைக்கக்கூடிய) மலர்களால் **ते अर्चनम्** - உன் பூசை **विधेयम्** - நிறைவேற்றக்கூடியது. **तेन** - அந்தப் பூஜை யினுல் **प्राप्यं फलं** - அடையத் தகுந்த பயனே **मोक्षसाम्राज्यलक्ष्मीः** - (ஸர்வ பந்த நிவ்ருத்தி ஏற்பட்டு அனுபவிக்கக்கூடிய நித்யமான பூர்ணமான ஆனந்த ரூபமாகிய) மோக்ஷம் என்ற ஏகாதிபத்யம். **एतत् जानन्नपि** - இதை அறிந்தவனுக இருந்தபோதிலும் **करणविवशः** - இந்திரியங்களுக்கு அடிமைப்பட்டு **कालं व्यर्थयन्** - காலத்தை வீணுகக் கழித்து விட்டு **हे आत्मन्** - எல்லா உலகிற்கும் உள்ளேயிருக்கும் ஆத்மரூபியே **आत्मद्रोही** - (உம்மை மறந்ததினுல்) ஆத்மாவிற்கு ஹிதத்தைத் தேடாத (நான்) **शिव शिव** - அட கஷ்டமே **भूयसा** – மிக விரைவாக **अधः पतामि** - அதோ கதியை அடைகிறேன்.

(க - ரை) உன்னை ஆராதிப்பது அடியேனுக்கு ஒன்றும் அப்படி ச்ரமமான காரியமில்லை. எருக்கு தும்பை முதலிய மணமற்ற, யாரும் வேண்டாத, எங்கும் கிடைக்கக்கூடிய புஷ்பங்களால் உன்னை அர்ச்சனை செய்தால் போதும். இவ்வளவு ஸுலப மான ஆராதனைக்கு ஏற்படும் பலமோ மோக்ஷஸாம் ராஜ்யமே. இதை அறிந்திருந்தும் மோக்ஷத்தைத் தேடிக்கொள்ளாத நான் ஆத்ம த்ரோஹியாகிறேன் என்பதில் ஐயமென்ன? சிவ சிவ என்ன பரிதாபம், நான் வீணுகக் காலத்தை விஷயசபலனுகவே கழித்து

வருகிறேன். அதன் பயனாக அதோகதியை அடைகிறேன். உலகத்தில் கடுமையான க்லேசத்தை அனுபவிக்கும் ஒருவன் அதினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டு மஹத்தான சுகத்தையும் அடைய வெகு எளிய வழியை அறிந்திருந்தும் அதற்குப் பிரயத்னம் செய்யாமல் துக்கத்திலேயே உழன்று கொண்டிருப்பானாகில் அவன் எவ்வளவு மூடன்!

(வி-ரை) दुष्करं तस्य सेवायां किमस्ति भुवनत्रये। नद्यां तु सिकता वारि सुलभं कुसुमं वने। नास्त्येव करणक्लेशः कर्तव्यः सकृदञ्जलिः॥ तूर्णं शिव शिवेत्युच्चैः भजन्ति भयहारिणम्। शिवे दत्तं हुतं जप्तं फलान्नादिनिवेदनम्। एकं चाक्षय्यफलदं तद्विधानां न संशयः॥ अन्यथा सन्तमात्मानं योऽन्यथा प्रतिपद्यते। किं तेन न कृतं पापं चोरेणात्मापहारिणा॥ என்ற வாயுஸம்ஹிதை, சிவபுராணம், வேதவாக்யங்கள், சிவபூஜை எளிது, அதற்கு வேண்டிய சாதனங்கள் சுலபம், பெரும்பயனை அளிக்கவல்லது சிவபூஜை, அதைச் செய்யாதவர் பாபி என்றும் புலப்படுத்துகின்றன.

—* विषयप्रतिबन्दिनिरूपणम् *—

किं वा कुर्वे विषमविषयस्वैरिणा वैरिणाहं
बद्धः स्वामिन् वपुषि हृदयग्रन्थिना सार्धमस्मिन्।
उष्णा दर्पज्वरभरजुषा साकमेकत्र बद्धः
श्राम्यन्वत्सः स्मरहर युगे धावता किं करोतु॥ ९॥

கிம் வா குர்வே விஷமவிஷய
ஸ்வைரிணு வைரிணுஹம்
பத்தஸ் ஸ்வாமின் வபுஷி ஹ்ருதய
க்ரந்திணு ஸார்த்த மஸ்மின்।

உஷ்ணே தர்பஜ்வர பராஜுஷா
ஸாகமேகத்ர பத்தः
ஶ்ராம்யன் வத்ஸः ஸ்மரஹர
யுகே தாவதா கிம் கரோது ॥ 9 ॥

(ப – ரை) விஷயங்கள் தடங்கலாக வுள்ளன எனக்கூறுகிறார். स्वामिन् - பிரபுவே विषम विषय वैरिणा – (கரடு முறடான பிரதேசங்களில்) துக்கத்தைத்தரக்கூடிய, இந்திரிய திருப்திக்குரிய சிற்றின்பப் பற்றுதல்களில் அடங்காமல் திமிர் கொண்டு இஷ்டம் போல் ஓடிக்கொண்டிருக்கும் वैरिणा - எனக்கு வீரோதியான (தீங்கிழைப்பதான) हृदयग्रन्थिना - சித்தத்தில் சிடுக்குண்டாக்கியிருக்கும் துர்வாஸனையோடு साधं - கூட अस्मिन् वपुषि - இச்சரீரமாகிற (வண்டியில்) बद्धः – பிணைக்கப்பட்ட अहं - நான் किं कुर्वे - என்னதான் செய்ய முடியும். स्मरहर - மதனனை மாய்த்தவரே दर्पज्वरभरजुषा - திமிர் மிகுதியினால் கொதிப்புள்ள धावता - பாய்ந்தோடுகிற तृष्णा साकं - காளையுடன் கூட एकत्र युगे - ஒரே நுகத்தடியில் बद्धः - பூட்டப்பட்ட श्राम्यन् वत्सः – சிரமத்தினால் சோர்வடைந்த இளங்கன்று किं करोतु - என்ன செய்யக் கூடும்?

(க – ரை) करण विवशः - என்று முன் சுலோகத்தில் கூறியதை இங்கு விரித்துரைக்கின்றார். ஸுலபமான துக்க நிவ்ருத்தி மார்க்கத்தை அறிந்திருந்தும் நான் துஷ்டத்தன முள்ள விஷய வாஸனையினால் தோற்கடிக்கப்பட்டவனானேன். பார்ப்பதற்கு ஸுகம் போலவும் இறுதியில் துக்கத்தைத் தருவதுமான இந்திரியார்த்தங்களில் ஆவேசத்துடன் பாயும் அநேக காலவாஸனா ஜடிலமான என் மனம் என்னைத் தூக்கி

வாரிக் கொண்டுபோய் அனர்த்தங்களுக்கு உள்ளாக்கி விடுகிறது. நான் என்ன செய்வேன். ஒரு முறட்டுக் காளையுடன் ஒரே வண்டியில் பூட்டப் பெற்ற இளங் கன்று என்ன செய்யும்? காளை மேடுபள்ளம் பார்க் காமல் திமிரிக் கொண்டு அதிவேகமாய் ஓடவாரம் பிக்கும் போது இளங்கன்று எவ்வித பரிதாப நிலையை அடையும்? வாஸனை முடிச்சுக்களேறிய திமிர் கொண்ட என் மனத்துடன் நானும் இச்சரீர மாகிற வண்டியில் கட்டப்பட்டிருக்கிறேன். பலமற்ற நான் (ஜீவன்) துஷ்டவாஸனைகளால் அடக்க வொண்ணுத என் மனம் இழுத்த இடமெல்லாம் பரிதபித்துக் கொண்டே ஓடுகிறேன். என்னால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

(வி – ரை) **पराञ्चि खानि व्यतृणत् स्वयम्भूः तस्मात्पराक् पश्यति नान्तरात्मन्!** என்ற வேதவாக்யம் இந்திரியங்கள் எப்பொழுதும் பஹிர் முகமாகவே செல்லுகின்றன என்பதையும், அவைகளை அடக்கி அந்தர்முகமாகச் செலுத்துகின்றவன் தீரன் என்றும் கூறுகிறது. **कुर्वते कर्म भोगाय कर्म कर्तुं च भुञ्जते** என்பதும் கர்மங்களைச் செய்வதிலேயே ஈடுபாட் டைக்குறிக்கிறது.

—* अनितरगतित्वाभिधानम् *—

नाहं रोद्धुं करणनिचयं दुर्नयं पारयामि
स्मारं स्मारं जनिपथरुजं नाथ सीदामि भीत्या ।
किं वा कुर्वे किमुचितमिह काद्य गच्छामि हन्त
त्वत्पादाब्जप्रपदनमृते नैव पश्याम्युपायम् ॥ १० ॥

நாஹம் ரோத்தும் கரணநிசயம்
துர்நயம் பாரயாமி
ஸ்மாரம் ஸ்மாரம் ஜநிபதருஜம்
நாத ஸீதாமி பீத்யா |
கிம்வா குர்வே கிமுசித மிஹ
க்வாத்ய கச்சாமி ஹந்த
த்வத் பாதாப்ஜ ப்ரபதனம்ருதே
நைவ பச்யாம்யுபாயம் ॥ 10 ॥

(ப - ரை) தனக்கு வேறு கதியில்லை என்று கூறுகின்றார். **நாத** - ஸ்வாமி **துர்நய** - கட்டுப்பாடுகளுக்கு அடங்காத **கரணநிசயம்** – இந்திரியங்களை **ரோத்தும்**- அடக்கியாள **அஹம்** - நான் **ந பாரயாமி** – சக்தியற்றவனாக இருக்கிறேன். **ஜநிபதருஜ** - ஜன்மமெடுத்தது முதல் அனுபவித்து வரும் ச்ரமத்தை **ஸ்மார் ஸ்மார்** - நினைக்கும் பொழுதெல்லாம் **பீத்யா** - பயத்தினால் **ஸீதாமி** - நடுங்குகிறேன். **ஹந்த** – ஐயோ! **கிம் வா குர்வே** - நான் என்ன செய்வேன். **இஹ கிமுசிதம்** - இதற்கு என்ன தகுந்த பரிஹாரம்! **அத்ய க்வ கச்சாமி** - இப்பொழுது (இந்த சிரமத்தை நிவ்ருத்தி செய்து கொள்ளுவதற்கு) நான் எங்கே செல்லுவேன்? **த்வத்பாதாப்ஜப்ரபதனமृதே** - உன் திருவடிக்கமலங்களில் அடைக்கலம் புகுவதைத் தவிர **உபாயம்** - வேறு வழியை **நைவ பச்யாமி** - நான் அறிகிலேன்.

(க - ரை) இந்த்ரிய நிக்ரஹத்தில் அசக்தனையும் ஸம்ஸார வேதனைகளை விலக்க விரும்புகிறவனையுமிருக்கு மெனக்கு சரணாகதியைத் தவிர வேறு கதியில்லை என்பதைத் தெரிவிக்கிறார். ஸம்ஸாரவாழ்க்கையின் கஷ்டங்களை (ஜனனமரணாதிகளை) நினைத்து நினைத்து பயம் கொண்டு இதிலிருந்து விடுவிக்கப்பட

வேண்டும் என்று கவலை உண்டானவர்களுக்கு விஷயங்களில் இயற்கையாகவே பிரவர்த்திக்கும் இந்திரியங்களை அடக்க முடியாதது பற்றி துக்கம் ஏற்படுகிறது. துர்வாஸனைக்கு அடிமையான சித்தத்திற்கும் முக்தியை விரும்பும் ஜீவனுக்கும் ஏற்படும் போராட்டத்தில் சலியுற்ற ஜீவன் தைன்யத்துடன் ஈச்வரனை நோக்கிப் புலம்புகிறான். "என்ன செய்வேன்? எங்கு செல்வேன்? எனக்கு எது உபாயம்? ஸ்வாமி! ஒன்றும் வகையறியாத நான் உன் சரணத்தைப் பற்றிக் கொள்ளுகிறேன். எனக்கு நீதான் வழி காட்டவேண்டும்." என்று.

(வி - ரை) धन्याः कति त्रिभुवने परमोपभोग्यं संसारमेव परमेश्वरि भावयन्तः। आयासरूपमवबोधमिमं समेत्य क्लिश्ये कियत् कियदहं त्वमुना भवेन॥ என்று நீலகண்ட தீக்ஷிதர் கூறுவதும் கவனிக்கத்தக்கது. விஷய ஸுகங்களையே நாடி நிற்பவர்களுக்கு விசாரமில்லை.

—* शिवचरणप्रपदनेन प्रसादाभ्यर्थनन् *—

उल्लङ्घ्याज्ञामुडुपतिकलाचूड ते विश्ववन्द्य
त्यक्ताचारः पशुवदधुना मुक्तलज्जश्चरामि।
एवं नानाविधभवततिप्राप्तदीर्घापराधः
क्लेशाम्भोधिं कथमहमृते त्वत्प्रसादात्तरेयम्॥ ११॥

உல்லங்க்யாஜ்ஞா முடுபதி
கலாசூட தே விச்வவந்த்ய
த்யக்தாசாரः பசுவததுனா
முக்தலஜ்ஜஶ்சராமி।

ஏவம் நாநாவித பவததி
ப்ராப்த தீர்க்காபராத:
க்லேசாம்போதிம் கதமஹம்ருதே
த்வத்ப்ரஸாதாத் தரேயம் ॥ 11 ॥

(ப-ரை) சிவனுடைய தாளை வணங்கி அவனருள் வேண்டுகின்றார். **உடுபதிகலாசூட** - சந்திரகலாதரனே **விச்வவந்ய** - ஸகல ஜீவராசிகளாலும் தொழப்படுபவனே **தே ஆஜ்ஞாம்** - (ஸ்ருதி ஸ்ம்ருதி புராணங்களால் வெளியிடப் பட்ட) உன் கட்டளையை **உல்லங்க்ய** - மீறியும் **த்யக்தாசார:** - நன்னடத்தைகளைத் துறந்தவனுமான நான் **அதுனா** - இப்பொழுது **பசுவத்** - ஒரு மிருகத்தைப்போல **முக்தலஜ்ஜ:** - வெட்கங் கெட்டவனாக **சராமி** - திரிகிறேன். **ஏவம்** - இவ்விதமே **நானாவித பவததி ப்ராப்த தீர்காபராத:** பலவித ஜன்மத்தொடர்களில் அடையப்பட்ட நீண்ட குற்றச் சாட்டுகளுடன் கூடிய **அஹம்** - நான் **த்வத்ப்ரஸாதாத் ருதே** - உன் கருணையில்லாவிடில் **க்லேசாம்போதிம்** - துக்கஸாகரத்தை **கதம் தரேயம்** - எப்படித் தாண்டுவேன்?

(க-ரை) உன்னை சரணாகதி செய்யும் நான் பெரிய அபராதி என்று தெரிவித்துக்கொள்ளுகிறார். ஹே சந்த்ர கலாதரனே! உன் கட்டளைகளை மீறி நடந்த வன் நான். ஸ்ருதி ஸ்ம்ருதி புராணங்களின் மூலம் உன்னால் போதிக்கப்பட்ட கர்மாக்களையும் தர்மங் களையும் சரிவர அனுஷ்டிக்காதவன். புத்தி பூர்வமாக உன் விதிகளை மீறிவிட்டு பயமும் வெட்கமும் கூட இல்லாமல் ஒரு விலங்கைப்போல விஷய ஸுகங் களையே பல இடையூறுகளுக்கு மத்தியில் தேடி அலைந்து கொண்டிருக்கிறேன். இவ்விதம் நான் அப ராதியானது இந்த ஜன்மாவில் மட்டுமில்லை. பலவித

மான அநேக கோடி ஜன்மாக்களிலும் இப்படியே அபராதியாக இருந்துள்ளேன். எல்லையற்ற துக்கக் கடலில் உன் தயவின்றி வேறு எவ்விதம் நான் தாண்டப் போகிறேன்!

(வி - ரை) "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்ற சைவ சமயாசாரியர்களின் வாக்கியம் ஈண்டு கவனிக்கத்தக்கது. श्रुतिस्मृती ममैवाज्ञा என்றது கீதா வாக்கியம்.

—* भाव्यपराध संभावनया निस्त्रपत्वनिवेदनपूर्वक-प्रार्थना *—

क्षाम्यस्येव त्वमिह करुणासागरः कृत्स्नमागः
संसारोत्थं गिरिश सभयप्रार्थनादैन्यमात्रात् ।
यद्यप्येवं प्रतिकलमहं व्यक्तमागःसहस्रं
कुर्वन् मूर्खः कथमिव तथा निस्त्रपः प्रार्थयेय ॥ १२ ॥

க்ஷாம்யஸ்யேவ த்வமிஹ
கருணாஸாகர: க்ருத்ஸ்னமாக:
ஸம்ஸாரோத்தம் கிரிச ஸபய
ப்ரார்த்தனா தைன்ய மாத்ராத் ।
யத்யப்யேவம் ப்ரதிகலமஹம்
வ்யக்தமாகஸ்ஸஹஸ்ரம்
குர்வன் மூர்க்க: கதமிவ ததா
நிஸ்த்ரப: ப்ரார்த்தயேய ॥ 12 ॥

(ப - ரை) மேலும் அபாரதம் ஏற்படக்கூடும் என்றெண்ணி வெட்கமின்மையைத் தெரிவித்து வேண்டுகிறார். गिरिश - ஏ பரமேசுவரனே! करुणासागरः

त्वं கருணைக் கடலான நீ, **सभयप्रार्थनादैन्यमात्मात्** - அச்சங் கொண்டு தீனக்குரலோடு செய்யப்படும் வேண்டு கோள் ஒன்றினுலேயே **संसारोत्थं** - ஸம்ஸாரத்தொடர் பினுல் உண்டான **कृत्स्नं आगः** - எல்லாப் பாபங்களையும் **इह क्षाम्यसि एव** - இங்கே (இப்பொழுதே) மன்னித்து விடுவாய் என்பதற்கு ஆக்ஷேபமில்லை. **यद्यपि** - இப்படி இருந்தபொழுதிலும் **एवं** - இம்மாதிரி **प्रतिक्षं** - ஒவ் வொரு நிமிஷத்திலும் **आगःसहस्रं** - ஆயிரம் குற்றங்களை **व्यक्तं** - வெளிப்படையாகவே **कुर्वन्** - செய்து கொண் டேயிருக்கும் **मूढः अहं** - முட்டாளாகிய நான் **निस्त्रपः** - வெட்கமற்றவனுக **तथा** - அவ்விதம் **कथमिव** - எப்படித் தான் **प्रार्थयेय** - வேண்டிக்கொள்ளுவேன்?

(க - ரை) கருணைக்கடலான நீ, என்னுல் பல ஜன் மங்களிலும் மேற் கூறியபடி செய்யப்பட்ட அபரா தங்களை நான் மிக்க பயத்துடனும் மிகவும் பஶ்சாத் தாபத்துடனும் பிரார்த்தனை செய்துகொள்வேனுகில் மன்னித்துவிடுவாய் என்பதற்கையமில்லை. ஆனல் உன்னைப்பிரார்த்தனை செய்து கொள்ள வெட்கமா யிருக்கிறது. ஏனெனில் நான் முன் செய்த அபரா தங்களை க்ஷமித்துக் கொள்ளும்படி கேட்கும்பொழு தாவது அவ்வித அபராதங்களைச் செய்வதை நிறுத்தி யவனுக வேண்டுமல்லவா? இப்பொழுதும் அதே குற்றங்களைச் செய்து கொண்டேயிருக்கும் நான் எப் படி உன்னிடம் தைர்யமாக வந்து என்னுடைய பழைய குற்றங்களை மன்னித்து விடும்படி வேண்டிக் கொள்வேன்?

(வி - ரை) **अपराधसहस्राणि क्रियन्तेऽहर्निशं मया।**
दासोऽयमिति मां मत्वा क्षमस्व परमेश्वर॥ என்ற பிரார்த்

தினையையும் கவனிக்க. பெரியோர்களுக்கு வெட்கம் தன்னிடமிருந்தே மிகுதியாக உண்டாகிறது என்பது स्वतः सतां ह्रीः परतोऽपि गुर्वी என்ற கவியின் வாக்கினால் உணரலாம்.

—* मृतिसमयदोषभूयिष्ठबुद्धिपारतन्त्र्यकथनम् *—

सर्वं क्षेप्तुं प्रभवति जनः संसृतिप्राप्तमागः
चेतः श्वासप्रशमसमये त्वत्पदाब्जे निधाय ।
तस्मिन्काले यदि मम मनो नाथ दोषत्रयार्तं
प्रज्ञाहीनं पुरहर भवेत्तत्कथं मे घटेत ॥ १३ ॥

ஸர்வம் க்ஷேப்தும் ப்ரபவதி
ஜனः ஸம்ஸ்ருதிப்ராப்தமாகः
சேதः ச்வாஸப்ரசம ஸமயே
த்வத்பதாப்ஜே நிதாய ।
தஸ்மின் காலே யதி மம
மனே நாத தோஷத்ரயார்தம்
ப்ரஜ்ஞாஹீனம் புரஹர பவேத்
தத்கதம் மே கடேத ॥ 13 ॥

(ப - ரை) மரண காலத்தில் தோஷங்கள் மிகுந்து புத்தி ஸ்வாதீனத்தை இழந்து விடுமெனக் கூறுகிறார். नाथ पुरहर - திரிபுர மெரித்த ஸ்வாமி! श्वासप्रशम समये - மூச்சடங்கும் சமயத்தில் चेतः - மனத்தை त्वत्पदाब्जे - உன் சரண கமலத்தில் निधाय - வைத்து (அர்ப்பணம் செய்வதனால்) संसृतिप्राप्तं - பிறவிகளில் வந்தடைந்திருக்கும், सर्वं आगः - எல்லா பாபத்தையும், क्षेप्तुं - உதறி எறிந்துவிட, जनः प्रभवति - ஒருவனால் ஸாத்திய

மாகும் (எனினும்) तस्मिन् काले அந்த சமயத்தில் दोषत्रयार्तं - வாத பித்த கபமென்ற மூன்று தோஷங்களால் பீடிக்கப்பட்ட मम मनः - என் மனம் प्रज्ञाहीनं - நல்ல பிரஜ்ஞையிழந்ததாக यदि भवेत् - ஆகிவிட்டால் तत् - (முற்கூறிய) மனத்தை உன் திருவடிகளில் அர்ப்பணம் செய்தல் कथं घटेत - எப்படி ஸம்பவிக்கும்?

(க-ரை) எவ்வித பாபிக்கும் கடைசியாக ஒரு வழி இருக்கிறது. அஃதாவது எனக்கு பயன்படுமா? என்பதைப் பார்ப்போம். தன் ஜன்மாக்களில் ஸம்பவித்த எல்லா அபராதங்களையும் மரண காலத்தில் ஈச்வர சரண கமலத்தில் மனத்தை ஈடுபடுத்துவதின் மூலம் விடலாம். ஆனால் அந்தக்காலத்தில் நான் பிரஜ்ஞை தவறியிருந்தால் என்ன செய்வது? அந்திய காலத்தில் பிரஜ்ஞையுடன் கூடி இருப்பது அரிது. வாத பித்த கபங்களின் விபரீதங்களால் மூர்ச்சை ஏற்பட்டு விடலாம். ஆகையினால் ப்ராண வியோக சமயத்தில் மனத்தை ஈசுவரனிடம் செலுத்தி ஸர்வ பாபங்களையும் போக்கிக்கொள்ளலாம் என்றும் நிச்சயமாக நம்பியிருக்கவும் முடியாது.

(வி - ரை) चित्तं दत्त्वा सकृदपि शिवे चिन्तितं साधयामः என்றது நீலகண்டதீக்ஷிதர் வாக்கியம். सांकेत्यं पारिहास्यं वा स्तोभं हेलनमेव वा। என்ற பாகவத வாக்யத்தை அனுசரித்துத்தான் நம் முன்னோர் ஈச்வர நாமங்களை தங்களுடைய புத்ர பௌத்ராதிகளுக்கு வைத்தனர். दृष्टावाक्षिप्यमाणायां संज्ञया ह्रियमाणया। मृत्युपाशेन बद्धस्य त्राता नैवोपलभ्यते। अयःपाशेन कालेन स्नेहपाशेन बन्धुभिः। हिक्कया बाध्यमानस्य श्वासेन परिशुष्यतः। मृत्युना कृष्यमाणस्य न खल्वस्ति परायणम्। என்று வர்ணிக்

கப்படும் அந்திய காலத்தில் எவ்விதம் புத்தி நிடமாக இருக்கமுடியும்?

—* उत्क्रान्त्यवस्थानिरूपणम् *—

प्राणोत्क्रान्तिव्यतिकरदलत्सन्धिबन्धे शरीरे
प्रेमावेशप्रसरदमिताक्रन्दिते बन्धुवर्गे ।
अन्तः प्रज्ञामपि शिव भजन्नन्तरायैरनन्तैः
आविद्धोऽहं त्वयि कथमिमामर्पयिष्यामि बुद्धिम् ॥ १४ ॥

ப்ராணோத்க்ராந்தி வ்யதிகர
தலத் ஸந்தி பந்தே சரீரே
ப்ரேமாவேச ப்ரஸரதமிதா
க்ரந்திதே பந்துவர்க்கே ।
அந்தः ப்ரஜ்ஞாமபி சிவ
பஜந்நந்தராயை ரநந்தைः
ஆவித்தோஹம் த்வயி
கதமிமாமர்ப்பயிஷ்யாமி புத்திம் ॥ 14 ॥

(ப - ரை) உயிர் வெளிக்கிளம்பும் நிலையைக் கூறுகிறார். शिव - ஹே சிவ प्राणोत्क्रान्तिव्यतिकरदलत्सन्धिबन्धे शरीरे - பிராணவாயு வெளிக்கிளம்புவதனல் சரீரத்தின் பூட்டுகள் தெறித்துக்கொண்டும் बन्धुवर्गे प्रेमावेशप्रसरदमिताक्रन्दिते - பந்து ஜனங்கள் பொங்கி யெழும் அன்புப்பெருக்கால் கட்டுக்கடங்காதபடி அழுதுகொண்டும் இருக்கும் பொழுது अन्तः प्रज्ञां - உள்ளே சுய உணர்வினை भजन्नपि - உடையவனுயினும் (உணர்வினை இழக்காதவனுய் இருப்பதாக வைத்துக்கொண்ட போதிலும்) अनन्तैः अन्तरायैः - கணக்கற்ற

இடையூறுகளால் आविद्धः அஹ் - சூழ்ந்து அமுக்கப் பட்ட நான் इमां बुद्धिं - இந்த புத்தியை त्वयि - உன்னிடத்தில் कथं - எப்படி अर्पयिष्यामि - செலுத்தப் போகிறேன்.

(க - ரை) அப்படியே சுய உணர்வில் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் மனத்தை உன்னிடம் ஈடுபடுத்துவது அஸாத்யமான காரியம். ஏனெனில் பிராணன் வெளிக்கிளம்பும் ஸமயத்தில் ஒவ்வொரு மூட்டுகளிலிருந்தும் இளம்ப எத்தனிக்கும் பிராண வாயுவினால் ஏற்படும் மரணவலியை உணர்த்துமே யொழிய அந்த பிரஜ்ஞை பிரயோஜனப்படுத்திக் கொள்ளகூடியதாக ஆகாது. சரீரத்திற்குள் இந்த வேதனையிருக்க, வெளியில் பந்து மித்திரர்கள், அன்பின் மிகுதியினால் கூக்குரலிட்டு அழுதுகொண்டிருப்பார்கள். ஆதலால் அந்தக்கூச்சலினிடையே மனத்தைத்திருப்பி உன்னிடம் நாட்டுவதும் ஸாத்தியமாகாது. இவ்விதம் பல இடையூறுகளால் எனக்கு அந்த்ய காலத்தில் உணர்விருப்பினும் மனத்தை உம்மிடம் ஒப்படைக்க நான் இயலாதவனாகவே ஆவேன்.

(வி - ரை) தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் மனிதர்களுக்கும் யாவருக்கும் க்ஷேமத்தை விரும்பிக் கொடுத்தலாலும், அனுதி மல சம்பந்தம் அற்றவனாக இருத்தலாலும், ஸகலகல்யாணகுண ஆனந்த பூர்ணனாக இருத்தலாலும், யாவருக்கும் மங்களத்தை நினைத்தலாலும், த்வைத பிரபஞ்சத்தின் உபசமரூபியாக இருத்தலாலும், சிவன் என்று கூறப்படுகிறார். அவ்வாறு பல பொருள் சிவசப்தத்திற்கு உண்டு என்பதை பலவகை ப்ரமாணங்களுடன் சிவார்க்கமணி தீபிகையில் தீக்ஷிதர் அவர்களே காட்டியுள்ளார். प्रायो मुमूर्षि

चेतः प्राणभृतां प्राणनिर्गमावसरे। पुण्येन यदि न मुह्यति पुत्रं वान्य-स्मरन्म्रियते ॥ என்றார் நீலகண்ட தீக்ஷிதர். கட்டுண்ட குதிரை அடிக்கப்பட்டால், காலில் உள்ள கட்டுக் கயிறையும், கயிறு கட்டியுள்ள முளையையும் பிடுங்கிக் கொண்டு ஓடுவது போல, முக்ய ப்ராணன் கிளம்பும் பொழுது மற்ற இந்திரியங்களையும் வலிந்து எடுத்துக் கொண்டு போகும் என்பதும் அப்பொழுது உண்டாகும் வேதனை சொல்லி முடியாது என்பதும் சாந்தோக்யம் முதலிய உபநிஷத்துக்களாலும், ஸுதஸம்ஹிதை முதலியவற்றாலும் அறியலாம், मर्मसूत्कृष्यमाणेषु च्यवमानेषु सन्धिषु। यद्दुःखं म्रियमाणस्य सर्यतां तन्मुमुक्षुभिः ॥ என்பதும் ஆன்றோர் வாக்கியம்.

—※ सद्यः स्वात्मसमर्पणम् ※—

अद्यैव त्वत्पदनलिनयोरर्पयाम्यन्तरात्मन्
आत्मानं मे सह परिकरैरद्रिकन्याधिनाथ।
नाहं बोद्धुं तव शिव पदं न क्रिया योगचर्याः
कर्तुं शक्नोम्यनितरगतिः केवलं त्वां प्रपद्ये ॥ १५ ॥

அத்யைவ த்வத்பத நளினயோ:
அர்ப்பயாம்யந்த ராத்மன்
ஆத்மானம் மே ஸஹ
பரிகரை: அத்ரிகன்யாதிநாத।
நாஹம் போத்தும் தவ சிவ
பதம் நக்ரியா யோகசர்யா:
கர்த்தும் சக்நோம்யநிதரகதி:
கேவலம் த்வாம் பரபத்யே ॥ 15 ॥

(ப - ரை) உடனே தன் ஆத்மாவை ஸமர்ப்பணம் செய்கின்றார். अद्रिकन्याधिनाथ - ஹே பார்வதீபதியே अन्तरात्मन् - அந்தர்யாமியான புருஷனே! अद्यैव - இப்பொழுதே - त्वत्पद नलिनयोः - உன் இரு சரணகமலங்களில் परिकरैः सह - பரிவாரங்களோடுகூட मे आत्मानं - ஜீவ ரூபமான என்னை अर्पयामि - அர்ப்பணம் செய்து விடுகிறேன். शिव - ஹே சிவ तव पदं - உன் இருப்பிடத்தை (சரணத்தை) अहं - நான் बोद्धुं न शक्नोमि - அறிய சத்தியுடையவனில்லை. क्रियाः - (அவசியம் செய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்ட) கர்மாக்களை யாவது योग चर्याः - யோக சாஸ்திரரீதியில் அப்யாஸங்களை யாவது कर्तुं - செய்வதற்கு न शक्नोमि - என்னால் முடியாது. अनितरगतिः - வேறுவழியில்லாதவனாக त्वां - உன்னை. प्रपद्ये केवलं - சரணமடைதலை மட்டும் செய்கிறன்.

(க - ரை) முன் சுலோகத்தில் சொன்னபடி அந்த்ய காலத்தில் மனதை ஈசுவரனிடம் அர்ப்பணம் செய்வது அஸாத்யமானபடியால் இப்பொழுது உன் நினைவு வந்திருக்கும் பொழுதே நான் உன்னிடம் என்னை ஸமர்ப்பணம் செய்து விடுகிறேன். என்னை மட்டுமில்லை. என் பரிவாரங்களையும் சேர்த்துக் கொண்டு ஆத்மார்பணம் செய்து விடுகிறேன். ஹே பரமசிவ! எனக்கு உன் இருப்பிடமோ தெரியாது. கர்மானுஷ்டானத்தையோ யோகாப்யாஸத்தையோ செய்ய என்னால் இயலாது. வேறு ஒரு வழியும் அறியாத நான் உன்னைச் சரணமடைவது ஒன்றையே அனுஷ்டிக்கிறேன்.

(வி - ரை) त्वय्यर्पितं प्रथममप्ययज्वनैव स्वात्मार्पणं विदधता स्वकुलं समस्तम्। का त्वं महेशि कुलदासमुपेक्षितुं मां को वानुपासितुमहं कुलदेवतां त्वाम्॥ என்று ஆனந்த ஸாகர

ஸ்தவத்தில் நீலகண்ட தீக்ஷிதர் இந்த சுலோகத்தை "ஈச்வரனிடம் தனக்குத் தனிப்பட்ட சலுகை இருக்கிறது என்பதற்கும் பரம்பரையாக உரிமை உண்டு என்பதற்கும்" பிரமாணமாக எடுத்துக் காட்டுகிறார். ஸகல ப்ரபஞ்சத்திற்கும் அதிஷ்டானமாக வியாபித்திருத்தலாலும், சித்தின் ஆபாஸ மோஹத்தாலுண்டான எல்லாவற்றையும் எடுத்துக் கொள்வதனாலும், விஷயோன்முகமாயுள்ள புத்தி வ்ருத்திகளை ப்ராசீனமாய் தன்னுள் அடக்கிக் கொள்ளுவதனாலும், எப்பொழுதும் இருத்தலாலும் ஆத்மா என்று கூறப்படும். **यच्चाप्नोति यदादत्ते यच्चात्ति विषयानिह। यच्चास्य सन्ततो भावस्तस्मादात्मेति गीयते।** என்று ஸ்ம்ருதி. இதற்கு விரிவான உரை அனுபூதிப்ரகாசத்தில் காண்க. கர்மாக்கள்: ஸம்ஸ்காரங்கள், வேத வ்ரதம், பாகயஜ்ஞம், ஸோமயஜ்ஞம் முதலியன. யமம், நியமம் ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை முதலிய எட்டு அங்கங்களை உடையது யோகம்.

—* सर्वगुरुत्वनिरूपणपूर्विका प्रपत्तिः *—

यः स्रष्टारं निखिलजगतां निर्ममे पूर्वमीशः
तस्मै वेदानदित सकलान्यश्च साकं पुराणैः।
तं त्वामाद्यं गुरुमहमसावात्मबुद्धिप्रकाशं
संसारार्तः शरणमधुना पार्वतीशं प्रपद्ये॥ १६॥

யஸ்ஸ்ரஷ்டாரம் நிகில ஜகதாம்
நிர்மமே பூர்வமீசः
தஸ்மை வேதாநதித ஸகலான்
யஶ்ச ஸாகம் புராணைः।

தம் த்வாமாத்யம் குருமஹமஸா
வாத்ம புத்தி ப்ரகாஶம்
ஸம்ஸாரார்த்தः ஶரணமதுனா
பார்வதீசம் ப்ரபத்யே ॥ 16 ॥

(ப - ரை) 'சிவபெருமானே யாவர்க்கும் குரு' என நிரூபணம் செய்து சரணமடைகிறார். **निखिलजगतां** எல்லா உலகங்களையும் **स्रष्टारं** - படைத்த பிரமனை **यः ईशः** - எந்த ஈஶ்வரன் **पूर्वं** - ஆதியில் **निर्ममे** - சிருஷ்டித்தானே **तस्मै** - அந்த பிரமதேவனுக்கு **पुराणैः साकं** புராணங்களோடுகூட **सकलान् वेदान् च** - வேதங்கள் யாவற்றையும் **यः** - எந்த ஈசன் **अदित** - உபதேசித்தானே **आत्मबुद्धिप्रकाशं** - தன் புத்தியில் ஜ்யோதிஸ்வரூபமாய் விளங்குகின்ற **पार्वतीशं** - பார்வதீ பதியான **तं** - அந்த **आद्यं गुरुं** - ஆதி குருவான **त्वां** - உன்னை **संसारार्तः** - பிறவியினல் (ஸம்ஸாரத்தினல்) தாபமடைந்த **असौ अहं** - இந்த நான் **अधुना** - இப்பொழுதே **शरणं प्रपद्ये** - ரக்ஷகன் என்று (அடைக்கலமாக) அடைகிறேன்.

(க - ரை) ஜகத்ஸ்ருஷ்டி கர்த்தாவான பிரமனை முதலில் சிருஷ்டித்து அவருக்கு வேதங்களை உபதேசித்த ஆதி குருவான பரமேஶ்வரனை தியானத்தினல் என் சித்தத்தில் நிறுத்தி என்னுடைய தாபங்களை விலக்கும்பொருட்டு அவரிடம் ஶரணுகதியடைகிறேன். சிருஷ்டி இருவகைப்படும். ஒன்று ப்ரகிருதி சிருஷ்டி. மற்றொன்று விக்ருதி சிருஷ்டி. ப்ரகிருதி சிருஷ்டியில் சிவனிடமிருந்து பிரமன் உண்டானது சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஜீவன்களிடையே

எவன் உன்னை ஶரணமடைகிறானே அவனுக்கு ஞானத்தை அளித்து அவனுடைய கட்டை அவிழ்த்து விட்டு நித்யானந்த பரிபூர்ணமான் உன்னுடைய அப்ராக்ருதமான திவ்ய பதவிக்கு அவனை அழைத்துக் கொள்ளுகிறாய். ஆகையினால் உன்னை நான் சரணமடைகிறேன். புல் முதலியவற்றைத் தின்று விவேகமற்றவைகளாய் தன்னை வேலி வாங்கும் மனிதர்களுக்கு அடிமையாகி பார்ர மிழுத்தல் முதலிய காரியங்களில் க்லேசமும் துக்கமுமடையும் மாடுகளைப்போல ஜீவன் அஜ்ஞானியாய் இந்த வாழ்க்கைச் சக்கரத்தில் கட்டுண்டு பலவித கஷ்டங்களை அடைகின்ற இந்த ஜீவன்களை கட்டவும் அவிழ்த்து விடவும் யஜமானன் பரமேஶ்வரனே.

(வி - ரை) आत्मानः पशवः प्रोक्ताः सर्वे संसारवर्तिनः। तेषां पतित्वाद्देवेशः शिवः पशुपतिः स्मृतः॥ என்று பாரதம் கூறுகிறது. यो देवानां प्रथमं पुरस्तात् विश्वाधिपो रुद्रो महर्षिः। हिरण्यगर्भं पश्यत जायमानं। कालाग्निरुद्रमुक्तानां गुरुणामप्यसौ गुरुः। वामाङ्गादसृजद्विष्णुं दक्षिणाङ्गात्प्रजापतिम्। मध्यतो रुद्रमीशानं त्रीन्पुत्रानसृजच्छिवः॥, आत्मा वा इदमग्र आसीत् स ईक्षत इमान्नु सृजा इति என்பது முதலிய வேதம், உபநிஷத், பாரதம், ஸௌதஸம்ஹிதை, சிவ புராணம், ஸனத்ஸுஜாதீயம் முதலிய பல பிரமாண நூல்கள் சிவபெருமானே ஸகலகர்த்தா, பதி, ஸகலருக்கும் ஆதி குரு, ஸர்வஜ்ஞன் என்று தெளிவுறக் கூறுகின்றன. சிருஷ்டி வகைகளும் புராணங்களிலேயே விரித்துரைக்கப் படுகின்றன.

—* पति पशु पाश निरूपणपूर्विका प्रपत्तिः *—

ब्रह्मादीन् यः स्मरहर पशून्मोहपाशेन बद्ध्वा
सर्वानेकश्चिदचिदधिकः कारयित्वाऽऽत्मकृत्यम् ।
यश्चैतेषु स्वपदशरणान्विद्यया मोचयित्वा
सान्द्रानन्दं गमयति परं धाम तं त्वां प्रपद्ये ॥१७॥

ப்ரஹ்மாதீன் யஸ் ஸ்மரஹர
பசூன் மோஹபாசேன பத்த்வா
ஸர்வானேகஸ்சிதசிததிக:
காரயித்வாத்மக்ருத்யம் ।
யஸ்சைதேஷு ஸ்வபதஶரணான்
வித்யயா மோசயித்வா
ஸாந்த்ராநந்தம் கமயதி பரம்
தாம தம் த்வாம் ப்ரபத்யே ॥ 17 ॥

(ப - ரை) பதி பசு பாசம் இம் மூன்றையும் விளக்கும் முகமாக சரணமடைகிறார். स्मरहर - மன்மதனை எரித்தவரே चिदचिदधिकः यः एकः - சித்ரூபமாயும் ஜடரூபமாயு முள்ள இந்த ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் வேறான எவனொருவன் ब्रह्मादीन् - பிரமன் முதலிய सर्वान् पशून् - ஸகலவிதமான பசுக்களையும் (ஜீவர்களையும்) मोहपाशेन - அஜ்ஞான மென்னும் கயிற்றினால் बद्ध्वा - கட்டி आत्मकृत्यं - அவரவர்கட்குரிய காரியங்களை कारयित्वा – செய்வித்து यश्च - எவன் மேலும் एतेषु - இவர்களில் स्वपदशरणान् - தனது திருவடியில் சரணமடைந்தவர்களை विद्यया - ஞானத்தின் மூலம் मोचयित्वा - கட்டிலிருந்து விடுவித்து सान्द्रानन्दं - பரிபூர்ணானந்த மயமான परं - எல்லாவற்றிற்கும்

மேலான धाम - ஸ்தானத்திற்கு गमयति - போகும்படி செய்கிறானே त्वां - அவ்விதமான உன்னை - प्रपद्ये சரணமடைகிறேன்,

(க - ரை) சேதனாசேதன மயமான இந்த பிரபஞ்சத்திற்கு அப்பாலுள்ள நீ இரண்டுகால் நான்கு கால் பசுக்களை அஜ்ஞானக் கயிற்றால் கட்டி அவர்களுக்குரிய காரியங்களைச் செய்வித்து இந்த ஸம்ஸாரத்தை நடத்தி வருகிறாய். இந்த ஜீவன்களிடையே எவன் உன்னைச் சரண மடைகின்றானே அவனுக்கு ஞானத்தை அளித்து அவனுடைய கட்டை அவிழ்த்து விட்டு நித்யானந்த பரிபூர்ணமான உன்னுடைய அப்ராக்ருதமான பதவிக்கு அவனை அழைத்துக் கொள்ளுகிறாய். ஆகையால் நான் உன்னைச் சரண மடைகிறேன். புல் முதலியவற்றை மென்று தின்று விவேகமற்றவைகளாய் தன்னை வேலை வாங்கும் மனிதர்களுக்கு அடிமையாகி பாரம் இழுத்தல் முதலிய காரியங்களில் க்லேசமும் துக்கமுமடையும் மாடுகளைப்போல் ஜீவன் அஜ்ஞானியாய் இந்த வாழ்க்கைச் சக்கரத்தில கட்டுண்டு பற்பல கஷ்டங்களை அடைகின்றான். இந்த ஜீவன்களைக் கட்டவும் அவிழ்த்து விடவும் யஜமானன் பரமேச்வரனே.

(வி - ரை) एषामीशे पशुपतिः प्रजानां चतुष्पदामुत च द्विपदां, एष ह्येव साधु कर्म कारयति यमेभ्यो लोकेभ्य उन्निनीषते என்பது வேத வாக்யம் பாரதத்தில் - पशूनां वः पतिश्चाहं भविष्यामि सुरोत्तमाः । आत्मानः पशवः प्रोक्ताः सर्वे संसारवर्तिनः ॥ என்று பரமேச்வரன் யாவர்க்கும் பதி என்பதும் யாவரும் பசு என்பதும் தெளியக்கிடக்கின்றன.

—* भवरोगभिषग्वरणं *—

भक्ताग्रयाणां कथमपि परैः योऽचिकित्स्याममर्त्यैः
संसाराख्यां शमयति रुजं स्वात्मबोधौषधेन ।
तं सर्वाधीश्वर भवमहादीर्घतीव्रामयेन
क्लिष्टोऽहं त्वां वरद शरणं यामि संसारवैद्यम् ॥ १८ ॥

பக்தாக்ர்யாணும் கதமபி
பரைர் யோசிகித்ஸ்யாமமர்த்யை:
ஸம்ஸாராக்யாம் ஶமயதி ருஜம்
ஸ்வாத்ம போதௌளஷதேந ।
தம் ஸர்வாதீச்வர பவமஹா
தீர்க்க தீவ்ராமயேந
க்லிஷ்டோஹம் த்வாம் வரத சரணம்
யாமி ஸம்ஸாரவைத்யம் ॥ 18 ॥

(ப - ரை) ஸம்ஸார ரோகவைத்யனைச் சரண மடைகிறார். **सर्वाधीश्वर**-எல்லா தேவர்களுக்கும் மேற பட்ட கடவுளே, **वरद** - கேட்டதைக் கொடுப்பவரே **कथमपि** - எவ்விதத்திலேயும், **परैः अमर्त्यैः**-மற்ற தேவர் களால், **अचिकित्स्यां**-வைத்யம் செய்து நிவ்ருத்தி செய்ய முடியாத **संसाराख्यं**-ஸம்ஸாரம் என்கிற பெயருடைய **रुजं** - வியாதியை, **यः** - எவர் **भक्ताग्रयाणां** - தன் பக்த சிகாமணிகளுக்கு, **स्वात्मबोधौषधेन** - சிவஜ்ஞானபோதம் என்ற மருந்தினால், **शमयति** - போக்கடிக்கிறாரோ, **तं** அவ்விதமான, **संसारवैद्यं** - ஸம்ஸாரரோகத்திற்கு வைத்யனை, **त्वाम्** – உன்னை, **भव महादीर्घ तीव्रामयेन** ஸம்ஸாரமாகிற கொடுமையான நீடித்த பெரிய வியா

தியினால், क्लिष्टः अहं-கஷ்டப் படுகிற நான், शरणं यामि சரணமடைகிறேன்.

(க-ரை) இந்த ஸம்ஸாரம் என்பது ஒரு ரோகம். இந்த வியாதிக்கு வைத்தியம் செய்ய வேறு ஒரு வைத்தியனாலும் முடியாது. மற்ற தேவர்கள் சில வரன்களைக் கொடுக்கலாம். ஆனால், இந்த ஸம்ஸார வியாதியைத் தீர்க்க அவர்களால் இயலாது. இந்தப் பிணிக்கு வைத்தியன் நீ ஒருவனே. உன்னிடம் பக்தி செய்தவர்களுக்கு இந்த நோயைத் தீர்த்து விடுகிறாய். இதற்கு நீ வைத்துக்கொண்டிருக்கும் மருந்து ஆத்மஜ்ஞானம் என்பதே. இந்தப் "பிறப்பு இறப்பு" என்னும் நோயால் அநேக காலமாய் மிகவும் பீடிக்கப்பட்ட நான் உன்னைத் தவிர வேறு எங்கு சரணமடையப் போகிறேன். ஆகையால் நீயே எனக்குக் கதி. எனக்கு இந்த வியாதியை நிவ்ருத்தி செய்விக்க வேண்டும்.

(வி-ரை) இதே கருத்தை ஸ்ரீ சங்கர பகவத்பாதர் அவர்களும் வெளியிட்டிருக்கிறார்கள்.

जननमृति युतानां सेवया देवतानां
न भवति सुखलेशः संशयो नास्ति तत्र ।
अजनिममृतरूपं साम्बमीशं भजन्ते
य इह परमसौख्यं ते हि धन्या लभन्ते ॥

ஆர்யாசதகத்தில், संसरणकातराणां संसरणिः शाम्भवी भक्तिः - என்றும், வேதத்தில், प्रथमो दैव्यो भिषक्तं त्वा भिषजां शृणोमि என்றும் கூறியுள்ளது.

—* तारकोपदेष्टृत्वकथनपूर्वकं शरणवरणम् *—

ध्यातो यत्नाद्विजितकरणैर्योगिभिर्यो विमुक्त्यै (विमृग्यः)
तेभ्यः प्राणोत्क्रमणसमये संनिधायात्मनैव ।
तद्व्याचष्टे भवभयहरं तारकं ब्रह्म देवः
तं सेवेऽहं गिरिश सततं ब्रह्मविद्यागुरुं त्वाम् ॥ १९ ॥

த்யாதோ யத்நாத் விஜிதகரணைர்
யோகிபிர் யோ விமுக்த்யை (விம்ருக்யः)
தேப்யः ப்ராணோத்க்ரமண
ஸமயே ஸந்நிதாயாத்மனைவ ।
தத் வ்யாசஷ்டே பவபயஹரம் தாரகம்
ப்ரஹ்ம தேவः
தம் ஸேவேஹம் கிரிஶ ஸததம்
ப்ரஹ்மவித்யாகுரும் த்வாம் ॥ 19 ॥

(ப - ரை) 'நீ தாரக மந்த்ரோபதேசம் செய்பவன், ஆதலால் உன்னைச் சரணமடைகிறேன்' என்று கூறுகிறார்.

गिरिश-ஈச்வரனே, **विजितकरणैः योगिभिः**-பொறிகளை வென்ற யோகிகளால், **यत्नात्** - பெரு முயற்சியினல், **ध्यातः** - தியானிக்கப்பட்ட, **यः देवः** - எந்த தேவன், **विमुक्तये** - மோக்ஷத்தின் பொருட்டு, (**विमृग्यः** - தேடத் தக்கவனுக இருப்பினும்) **तेभ्यः** - அவர்களுக்கு, **प्राणोत्क्रमणसमये** - ப்ராணவாயு வெளிக்கிளம்பும் நேரத்தில், **आत्मनैव** - தானுகவே, **सन्निधाय** - எதிரில் வந்து, **भवभयहरं**-ஸம்ஸாரபயத்தை நிவ்ருத்தி செய்யக் கூடிய **तारकं** - கரை யேற்றுவிக்கும், **तत् ब्रह्म** - அந்த அகண்டமான ப்ரஹ்ம சைதன்யத்தை, **व्याचष्टे** - உபதேசிக்கி

குரவே, தஸ்மை - அந்த, ब्रह्मविद्यागुरु - ப்ரஹ்ம ஜ்ஞானத்தை உபதேசிக்கும் குருவான, त्वां - உன்னை, सततं - எப் பொழுதும், सेवे - உபாஸிக்கிறேன்.

(க-ரை) பொறிகளை அடக்கி த்யான யோகத்தை அப்யாஸம் செய்துவந்த பெரியோர்களுக்கு ப்ராண வியோக ஸமயத்தில் முன்வந்து நின்று தாரக மந்த்ரத்தை உபதேசிக்கும், முக்தி மார்க்கத்திற்கு பரமாசார்யனாகிய உன்னை நான் சரணமடைகிறேன். இந்த்ரிய நிக்ரஹம் செய்து வெகு தீவ்ரமான முயற்சியுடன் த்யான யோகத்தைப் பயிலும் யோகிகளாலும் நீ தேடப்படுகின்றாய். அவர்களுக்கு நீ அந்த்ய காலத்தில் ப்ரஸன்னமாகி மோக்ஷத்திற்கு உதவும் உபதேசத்தையும் அருளுகின்றாய். ப்ரஹ்மஜ்ஞானத்தை உபதேசிக்கும் குரு நீயே. அத்தகைய உன்னை நான் த்யானத்தினால் உபாஸிக்க இயலாதவனாயினும் கேவலம் சரணாகதியில் ஆராதிக்க முயலுகின்றேன். த்யான யோகத்திற்கு வசப்பட்டு எப்படி யோகிகளுடைய மரண காலத்தில் அவர்களை முக்தியடைவிக்கும் பொருட்டு நீ தானாகவே முன் வந்து நின்று உபதேசத்தை யருளுகின்றனையோ அவ்விதம் என் சரணாகதியையும் பொருட்படுத்தி என்னைக் காப்பாற்றுவாயாக.

(வி-ரை) இந்த சுலோகத்தின் முதல் பாதத்தில், विमुक्तये அல்லது विमोक्षयः என்பதும் பாடம். முக்தி கண்டத்தில் எங்கு இருப்பினும் எப்படி இருப்பினும் பாபியாயினும் சிவக்ஷேத்ரத்தில் வாஸம் முக்தியைக் கொடுக்க வல்லது என்று கூறப்பட்டுள்ளது. கர்ப்ப, ஜன்ம, ஜரா, மரணம் முதலிய துன்பங்களினின்றும்

கரையேற்றுவதனால் ப்ரஹ்ம தாரகம் எனப்பட்டது.

पापिष्ठानामपि श्रद्धाविहीनानां जनार्दन। मुक्तिदं मरणादूर्ध्वं शिवक्षेत्रेषु वर्तनम्॥ आत्मानमरणिं कृत्वा प्रणवं चोत्तरारणिम् ध्याननिर्मथनाभ्यासाद्देवं पश्येन्निगूढवत्॥

—※ नित्यदासतानिरूपणम् ※—

दासोऽस्मीति त्वयि शिव मया नित्यसिद्धं निवेद्यं
जानास्येतत्त्वमपि यदहं निर्गतिः संभ्रमामि।
नास्त्येवान्यन्मम किमपि ते नाथ विज्ञापनीयं
कारुण्यान्मे शरणवरणं दीनवृत्तेर्गृहाण॥ २०॥

தாஸோஸ்மீதி த்வயி சிவ மயா
நித்ய ஸித்தம் நிவேத்யம்
ஜானஸ் யேதத் த்வமபி யதஹம்
நிர்கதிஸ் ஸம்ப்ரமாமி।
நாஸ்த்யேவான்யத் மம கிமபி தே
நாத விஜ்ஞாபநீயம்
காருண்யான்மே சரணவரணம்
தீன வ்ருத்தேர் க்ருஹாண॥ 20॥

(ப - ரை) எப்பொழுதும் நான் உனதடிமை எனக் கூறுகிறார்.

शिव - ஹே சிவனே, त्वयि - உன்னிடத்தில், दासोऽस्मि इति - நான் அடிமை என்று, नित्यसिद्धं - என்றும் உறுதியாயுள்ள இந்நிலை, मया - என்னால், निवेद्यं? - தெரிவிக்க வேண்டுவதோ? निर्गतिः - ரக்ஷிப்பவரின்றி, संभ्रमामि - அலைந்து திரிகின்றேன். (इति) यत् एतत् - என்பதையும், त्वमपि - நீயும் जानासि - அறிவாய். नाथ -

ஸ்வாமி, ते - உம்மிடத்தில், **मम**-எனக்கு, **विज्ञापनीयं** - தெரிவித்துக்கொள்ள வேண்டியது, **अन्यत्** - வேறு, **किमपि** – ஒன்றும், **नास्त्येव** - இல்லை. (ஆகையினால்), **दीनवृत्तेः**-பரிதவிக்கும் நிலையிலுள்ள; **मे** - என்னுடைய, **शरणवरणं**-சரணாகதிப்ரார்த்தனையை, **कारुण्यात्**-கருணையினால், **गृहाण** - ஏற்றுக்கொள்.

(க - ரை) ஸ்வாமி! நான் உன் தாஸன், உன்னைத் தவிர வேறு கதி எனக்கு இல்லை, என்பதைத் தானே நான் உன்னிடம் சொல்லிக்கொள்ளமுடியும். ஆனால் நான் உன் தாஸன் என்பது சாச்வதமாய் ஏற்பட்ட நிலை. ஆதலின் நான் சொல்லிக்கொள்ளாமலே நீ அறிந்த விஷயம். நான் திக்கற்றவனுய் பரிதபிக்கும் நிலையில் காப்பவரின்றிச் சுழன்றுகொண்டு வருகிறேன் என்பதும் முற்று முணர்ந்த உனக்குத் தெரியாததில்லை. இவ்விதம் பார்க்குங்கால் நான் உன்னிடம் தெரிவித்துக்கொள்ள வேண்டியது என்ன இருக்கிறது? ஆகையினால் கருணையை முன்னிட்டு மிக்க பரிதாப நிலையிலிருக்கும் என்னுடைய சரணாகதியை ஏற்றுக்கொள்வாயாக.

(வி - ரை) **यः सर्वज्ञः सः सर्ववित्** என்பது முதலியவற்றால் ஈசன் ஸர்வஜ்ஞன் என்பது புலப்படும். நீலகண்ட தீக்ஷிதரும், **सानुग्रहं स्यान्मयि गर्भदासे** என்று நித்யம் அடிமை என்பதைக் கூறுகிறார். சைவாகமங்களில் பதிபசுபாசங்கள் நித்யமாகக் கூறப்படுகின்றன. அதை அனுசரித்து, பரம வைதிக ஸ்ரேஷ்டரான தீக்ஷிதர் இவ்விதம் மார்க்கம் முதலியன கூறுவது எவ்வாறு பொருந்துமெனின், வ்யவஹார காலத்தில் ஸகுணோபாஸனையில் யாவும் பொருந்துவனவே. இத-

னல் பாரமார்த்திகமான அத்வைதம் ஒருக்காலும் பங்கமடைவதில்லை.

—* दीनदयानिधित्वमवलम्ब्य प्रार्थना *—

ब्रह्मोपेन्द्रप्रभृतिभिरपि स्वेप्सितप्रार्थनाय
स्वामिन्नग्रे चिरमवसरस्तोषयद्भिः प्रतीक्ष्यः ।
द्रागेव त्वां यदिह शरणं प्रार्थये कीटकल्पः
तद्विश्वाधीश्वर तव कृपामेव विश्वस्य दीने ॥ २१ ॥

ப்ரஹ்மோபேந்த்ரப்ரப்ருதிபிரபி
ஸ்வேப்ஸித ப்ரார்த்தனய
ஸ்வாமின்னக்ரே சிரமவஸரஸ்
தோஷயத்பி: ப்ரதீக்ஷ்ய: ।
த்ராகேவ த்வாம் யதிஹ
சரணம் ப்ரார்த்தயே கீடகல்ப:
தத் விச்வாதீச்வர தவ
க்ருபாமேவ விச்வஸ்ய தீனே ॥ 21 ॥

(ப - ரை) நீ தீனதயாளு ஆதலால் உன்னை வேண்டுகின்றேன். विश्वाधीश्वर स्वामिन् - ஜகதீச்வரனாகிய பிரபுவே स्वेप्सितप्रार्थनाय-தனது அபீஷ்டங்களை வேண்டிக் கொள்ளுவதற்காக, अग्रे - முன்னின்று, तोषयद्भिः - துதிகளால் திருப்தி செய்விக்கும், ब्रह्मोपेन्द्र-प्रभृतिभिरपि-ப்ரஹ்மா விஷ்ணு முதலியவர்களாலும், अवसरः - (எவருடைய) அருள் செய்யும் சமயமானது, चिरं - வெகுகாலம், प्रतीक्ष्यः - எதிர்பார்க்கப் படுகிறதோ (தீ) त्वां - அவ்விதமான உன்னை, कीटकल्पः - புழுவுக்கு சமமான நான், द्रागेव - திடீரென்று, शरणं प्रार्थये - சரணம் கொடுக்கும்படி பிரார்த்திப்பது, यत् इह - என்

பது யாதொன்று உண்டோ, तत्- அது; दीने - எளியவனிடத்தில், तव - உன்னுடைய, कृपा - தயவை, विश्वस्य एव – நம்பித் தான்.

(க - ரை) ஏ ஸர்வேசா! ப்ரஹ்மா விஷ்ணு முதலியவர்கள் கூட உன்னிடம் தங்களுடைய அபீஷ்டங்களைத் தெரிவித்து வேண்டிக்கொள்ளும் பொருட்டு உன் வாயிலில் வந்து நின்று துதி செய்து உன்னைக் கண்டுகொள்ள ஸந்தர்ப்பத்தை ஆவலுடன் எதிர் பார்த்து இருக்கும் பொழுது அல்ப பிராணியாகிய நான் நினைத்த மாத்திரத்தில் உன்னை அழைத்து எனக்குச் சரணமளிக்கும்படி வேண்டுகின்றேனே! இந்த உரிமை எனக்கு எப்படிக் கிடைத்ததென்றால் நீ தீனர்களிடம் தயையுடையவன் என்ற பெரியோர் களின் மொழியை நம்பியே யல்லாது வேறு எவ்விதமாகும்?

(வி - ரை) ப்ரம்மதேவன், படைக்கும் திறமை பெறவும், திருமால், பிருந்தையிடம் ஈடுபட்டதனால் கோபித்து மறைந்த திருமகளைத் திரும்பவும் பெறவும், இந்திரன், வ்ருத்ராசுரன் முதலிய பகைவர்களைக் கொல்லத் திறமை பெறவும், சிவனருள் வேண்டியது என்பது புராணங்களில் வெளிப்படையானது.

—* प्रपदनोपायप्राप्तेः धैर्यावलम्बनम् *—

कर्मज्ञानप्रचयमखिलं दुष्करं नाथ पश्यन्
पापासक्तं हृदयमपि चापारयन्सन्निरोद्धुम् ।
संसाराख्ये पुरहर महत्यन्धकूपे विषीदन्
हस्तालम्बप्रपदनमिदं प्राप्य ते निर्भयोऽस्मि ॥ २२ ॥

கர்மஜ்ஞான ப்ரசய மகிலம்
துஷ்கரம் நாத பச்யந்
பாபாஸக்தம் ஹ்ருதயமபி
சாபாரயன் ஸந்நிரோத்தும் |
ஸம்ஸாராக்யே புரஹர
மஹத்யந்த கூபே விஷீதன்
ஹஸ்தாலம்ப ப்ரபதனமிதம்
ப்ராப்ய தே நிர்ப்பயோஸ்மி ॥ 22 ॥

(ப - ரை) சரணாகதி என்னும் ஒரு வழியைப் பெற்றமையால் அச்சமின்றி தைர்யம் கொண்டுள்ளேன் எனக் கூறுகிறார்.

हे पुरहर नाथ - முப்புரமெரித்தவனே! ரக்ஷகனே! **अखिलं** - சகலமான, **कर्मज्ञानप्रचयं** - கர்மங்களின் ஞான, **अनुष्ठानङ्कल दुष्करं पश्यन्** - அஸாத்யமென்று கண்டு கொண்டவனையும், **पापासक्तं हृदयमपि** - பாபத்திலேயே ஈடுபட்ட சித்தத்தையும் **सन्निरोद्धुं अपरायन्** - கண்டித்துத் திருப்பச் சக்தியற்றவனுமாகிய நான், **संसाराख्ये** - பிறப்பு இறப்பு இவைகளின் தொடர்புடைய ஸம்ஸாரமென்ற, **महति अन्धकूपे**-பெரிய பாழுங் கிணற்றில், **विषीदन्** - துயரமுற்று வீழ்ந்து கிடக்கும் போது, **इदं** - இந்த, **ते** - உன்னுடைய, **हस्तालम्बप्रपदनं** - (கரையேற்ற) நீட்டப்பட்ட கைப்பிடியை, **प्राप्य** - அடைந்து **निर्भयः** - பயம் நீங்கியவனாக, **अस्मि** - ஆகிறேன்.

(க - ரை) கர்மாவைச் செய்து சுத்தியுடைவதும் ஞானத்தைச் சம்பாதிப்பதும் சிரத்தையினாலும் விடாமுயற்சியினாலும் காலக்கிரமத்தில் ஸாதிக்க வேண்டுவன் வர்தலால் சோம்பேறியும் சபல புத்தி

யுள்ளவனுமாகிய என்னால் அஃதெல்லாம் நிறை வேற்ற முடியாத காரியம் என்பது திண்ணம். துர் வாஸனையினால் தடுக்கப்பட்ட காரியங்களில் ஊக்க முடைய என் மனத்தையே என்னால் திருப்பமுடிய வில்லையே. இந் நிலையில் ஸம்ஸாரமாகிற பாழும் கிணற்றில் பரிதபிக்கும் என்னைக் கரையேற்ற உன் கைப்பிடி கிடைத்திருப்பதால் இனி எனக்கு பய மில்லை.

(வி - ரை) தனதுள்ளத்தில் பிரகாசிக்கும் ஈச்வர ஸ்வரூபத்தைத் தான் அனுஸந்தானம் செய்வதையே தனக்குக் கிடைத்த கைப்பிடியாக வர்ணிக்கிறார். ஸம் ஸார துக்கங்களுக்கிடையில் உன்னை தர்சிப்பதனால் பயம் நீங்கியவனாகிறேன் என்று கூறுகிறார்.

—* जनिमार्गसहायत्वकथनम् *—

त्वामेवैकं हतजनिपथे पान्थमस्मिन्प्रपञ्चे
मत्वा जन्मप्रचयजलधेः बिभ्यतः पारशून्यात् ।
यत्ते धन्याः सुरवर मुखं दक्षिणं संश्रयन्ति
क्लिष्टं घोरे चिरमिह भवे तेन मां पाहि नित्यम् ॥ २३ ॥

த்வாமேவைகம் ஹதஜனிபதே
பாந்தமஸ்மின் ப்ரபஞ்சே
மத்வா ஜன்ம ப்ரசய ஜலதேः
பிப்யதः பாரசூன்யாத் ।
யத்தே தன்யாः ஸுரவர முகம்
தக்ஷிணம் ஸம்ச்ரயந்தி
க்லிஷ்டம் கோரே சிரமிஹ பவே
தேன மாம் பாஹி நித்யம் ॥ 23 ॥

(ப - ரை) பிறவி மார்க்கத்தில் உதவி இடைத்தாகக் கூறுகிறார்.

सुरवर - தேவர்களில் முதல்வனே, **अस्मिन् प्रपञ्चे** - இந்த (மாயாமயமான) லோகஸ்ருஷ்டியில், **हतजनिपथे** - கஷ்டங்கள் நிறைந்த பிறப்பு இறப்பென்னும் (சுழன்று வரும்) பாதையில், **त्वां एकमेव** - உன்னை ஒருவனையே, **पान्थं** - துணைவருபவனாக, **मत्वा** - நினைத்து, **पारशून्यात्** கரையில்லாத, **जन्मप्रचयजलधेः** - பிறவித் தொடரென்ற கடலினின்றும், **बिभ्यतः** - பயங்கொண்ட, **धन्याः** - பாக்யசாலிகள், **ते** - உன்னுடைய, **यत् दक्षिणं मुखं** - எந்த தென்னோக்கிய முகத்தை, **संश्रयन्ति** - அடைகின்றார்களோ, **तेन** - அம் முகத்தால், **इह** - இப் பிரபஞ்சத்தில், **चिरं** - வெகு காலமாக, **घोरे भवे** - பயங்கரமான ஸம்ஸாரத்தில், **क्लिष्टं मां** - கஷ்டப்படும் என்னை, **नित्यं पाहि** - அவசியம் காப்பாற்றுவாயாக.

(க - ரை) ஜன்மத்திற்குப் பின் ஜன்மமாக எடுத்துக்கொண்டு ஸம்ஸாரமென்ற முடிவற்ற பாதையில் அவதிப் பட்டுக்கொண்டு போய்க்கொண்டிருக்கும் ஜீவனுடன் அந்தராத்மாவான ஈசன் ஒருவனே துணையாகக் கூடவே போய்க்கொண்டிருக்கிறார். இவ்விதம் ஜீவனுக்கு துணைவரும் பரமாத்மாவே **மார்க்கபந்து** ஆகிறார். பிறவிக் கடலினின்றும் கரையேற நிச்சயித்த பெரியோர்கள் அவர் தம் துணையாருக்கும் பகவானின் பஞ்ச முகங்களில் தென்னோக்கியதான அகோர முகத்தை சரணமடைந்து முக்தி யடைகிறார்கள். தீக்ஷிதர் அவர்கள் பாரத்வாஜகோத்தரத்தில் பிறந்தவர். ஆதலால் தன் குலத்திற்கு முதல்வரான பரத்வாஜ முனிவரின் வரலாற்றைத் தெரிந்து கொண்டு

அதைத் தானும் பின்பற்ற நினைக்கிறார். பரத்வாஜ முனிவர் ஐந்து முகமுடைய பரமேச்வரனின் அகோர முகத்தின் மூலம் சிவதீக்ஷை பெற்றார் என்பது ஐதிஹ்யம். பரத்வாஜ முனிவரைக் கரையேற்றிய அகோர முகத்தால் என்னையும் கரையேற்றுவாயாக என்று ப்ரார்த்திக்கிறார்.

(வி - ரை) ऋतं पिबन्तौ सुकृतस्य लोके गुहां प्रविष्टौ परमे परार्ध्ये ॥ द्वा सुपर्णा सयुजा सखायौ समानं वृक्षं परिषस्वजाते ॥ என்ற இரு உபநிஷத் வாக்கியங்கள் ஈசன் மார்க்கபந்துவாய் உடனிருக்கிறான் என்பதை உணர்த்துகின்றன. நீலகண்ட தீக்ஷிதர் घोरं भवमपहातुं केचिदघोरं भवं प्रपद्यन्ते । कृतदीक्षोऽघोरमुखे कुलकूटस्थो भरद्वाजः ॥ என்ற சுலோகத்தினுல் பாரத்வாஜர் அகோர முகத்தில் தீக்ஷை பெற்று வீடுபெற்றமையைத் தெரிவிக்கிறார். गुहां प्रविष्टौ आत्मानौ हि तद्दर्शनात् என்ற ப்ரஹ்ம ஸூத்ரத்திலும் ஈசன் உடனிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. यथा राहुरदृश्योऽपि दृश्यते रविमण्डले । तद्वत्सर्वगतोऽप्यात्मा लिङ्गदेहे तु दृश्यते ॥ निश्चलः परिपूर्णोऽपि गच्छतीत्युपचर्यते । என்றும் பாத்ம புராணம் கூறுகிறது.

—* क्लेशदैन्यनिरूपणपूर्विका प्रपत्तिः *—

एकोऽसि त्वं शिव जनिमतामीश्वरो बन्धमुक्त्योः
क्लेशाङ्गारावलिषु लुठतः का गतिस्त्वां विना मे ।
तस्मादस्मिन्निह पशुपते घोरजन्मप्रवाहे
खिन्नं दैन्याकरमतिभयं मां भजस्व प्रपन्नम् ॥ २४ ॥

ஏகோஸி த்வம் சிவ ஜனிமதாமீச்வரோ
பந்த முக்த்யோ:
க்லேசாங்காராவலிஷு லுடத:
கா கதிஸ்த்வாம் விநா மே |
தஸ்மா தஸ்மிந்நிஹ பசுபதே
கோர ஜன்மப்ரவாஹே
கின்னம் தைன்யாகரமதிபயம் மாம்
பஜஸ்வ ப்ரபன்னம் ॥ 24 ॥

(ப - ரை) கிலேசத்தையும் தாழ்மையையும் தெரிவித்துச் சரணமடைகிறார்.

शिव – ஏ சிவபிரானே, जनिमतां – பிறவியுடையவர்களுக்கு, बन्धमुक्त्योः - பந்தம் மோக்ஷம் இவ்விரண்டிற்கும், ईश्वरः - பிரபுவாயிருப்பவன், एकः त्वं असि - நீ ஒருவன் தான். क्लेशाङ्गारावलिषु - துன்பங்களாகிற தணல் கும்பல்களின் மேல், लुठतः - புரளுகின்ற, मे - எனக்கு, त्वां विना-உன்னைவிட்டு, का गतिः-வேறு புகலிடம் ஏது? तस्मात्-ஆகையினால், पशुपते-பசுக்களுக்கு (ஜீவர்களுக்கு) பதியானவனே, अस्मिन् इह घोरजन्मप्रवाहे - இந்த பயங்கரமான ஜனனத் தொடரில், खिन्नं - துன்பமடைந்தவனும், दैन्याकरं - எளிமை யடைந்தவனும், अतिभयं அதிக பயம் கொண்டவனும், प्रपन्नं – சரண மடைந்தவனுமான, मां - என்னை, भजस्व - வந்து ரக்ஷிப்பாயாக.

(க - ரை) பசுக்கள் என்று சொல்லப்படும் ஜீவராசிகளை மாயாபந்தத்தால் கட்டிவைப்பவனும் அதனின்று அவிழ்த்து விடுபவனும் பசுபதி யாகிற நீயே. ஆதலால் உன்னைத் தவிர வேறு யாரை நான் அடைக்கலம் புகவிரும்புவேன். இந்த வாழ்க்கைத் துன்பங்களில், நெருப்புத் தணலில் விழுந்து விட்டவன்போல்

வேதனையால் துடிக்கும் என்னை, மிகப் பரிதாபமான நிலைக்கு இருப்பிடமான என்னை, மனத்தில் மிகுந்த பீதி யடைந்த என்னை, அடுத்தடுத்து பிரவாஹம் போல எனக்கு ஏற்படும் இந்தப் பிறவித் தொடரி லிருந்து விடுவிக்கும் பொருட்டு கருணை கூர்ந்து உடனே ஓடிவந்து ரக்ஷிக்க வேண்டும்.

(வி – ரை) தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம் தம் தேவதானாம் பரமம் ச தைவதம். பதிம் பதீனாம் பரமம் புரஸ்தாத் விதாம தேவம் புவனேசமீட்யம் ॥ என்று ஈச்வரத் தன்மை சிவனுக்கே உரியது என உபநிஷத் சொல்லுகின்றது. சைவ சாஸ்திரங் களில், மலம், மாயா, கர்ம, தத்வதிரோதானம் என்று சொல்லப்பட்ட கிலேசங்களே இங்கு கிலேசத்தனல் எனக் குறிக்கப்பட்டது. பாரதத்தில், ईश्वरश्चेतना कर्ता पुरुषः कारणं शिवः – எனவும், காளிதாஸன் நூல்களில், महेश्वरस्त्र्यम्बक एव नापरः, शब्दमीश्वर इत्युचैः साधुचन्द्रं बिभर्ति यः, यस्मिन्नीश्वर इत्यनन्यविषयः शब्दो यथार्थाक्षरः – எனவும், புராணங்களில், एक एव हि मुख्योऽयमीश्वरः श्रुतिचोदितः – எனவும் கூறப்பட்டுள்ளது. பாதஞ்ஜல யோக ஸூத்திரத்தில், அவித்யா, அஸ்மிதா, ராகம், த்வேஷம், அபிநிவேசம் என ஐந்துவித க்லேசங்கள் கூறப்பட்டுள்ளன.

—* श्रीरुद्रप्रभावकथनपूर्विका विद्याप्रार्थना *—

यो देवानां प्रथममशुभद्रावको भक्तिभाजां
पूर्वं विश्वाधिक शतधृतिं जायमानं महर्षिः ।
दृष्ट्यापश्यत्सकलजगतीसृष्टिसामर्थ्यदात्र्या
स त्वं ग्रन्थिप्रविलयकृते विद्यया योजयास्मान् ॥ २५ ॥

யோ தேவானும் ப்ரதமமசுப
த்ராவகோ பக்திபாஜாம்
பூர்வம் விச்வாதிக சதத்ருதிம்
ஜாயமானம் மஹர்ஷிஃ |
த்ருஷ்ட்யாபச்யத் ஸகலஜகதீ
ஸ்ருஷ்டி ஸாமர்த்ய தாத்ர்யா
ஸ த்வம் க்ரந்தி ப்ரவிலயக்ருதே
வித்யயா யோஜயாஸ்மான் ॥ 25 ॥

(ப-ரை) ருத்ரனின் பெருமையைக் கூறி ப்ரம்ம வித்யையைக் கொடுத்தருளும்படி வேண்டுகிறார்.

विश्वाधिक - எல்லாவற்றிற்கும் மேலானவனே! தானுகவே எல்லாவற்றையும் அறிந்தவர்களுள் பெரியவனும், **भक्तिभाजां** தன்னிடம் பக்தி செய்பவர்களுக்கு, **अशुभद्रावकः** - ஸம்ஸார துக்கத்தைப் போக்கடிப்பவனுமான, **यः**-எவன், **देवानां**-தேவர்களுக்கு, **प्रथमं**-முதலாக, **जायमानं**-உண்டாகின்ற, **शतधृतिं**-ப்ரம்மதேவனை, **सकल-जगती सृष्टिसामर्थ्य दात्र्या** -எல்லாவுலகங்களையும் சிருஷ்டி செய்யும் திறமை அளிக்கக்கூடிய, **दृष्ट्या** - கடாக்ஷத்தினல், **अपश्यत्** - பார்த்தானே, **सः त्वं** – அந்த நீ, **ग्रन्थिप्र-विलयकृते** - முடுச்சுக்களின் நிவ்ருத்தியின் பொருட்டு, **अस्मान् विद्यया योजय** - எங்களுக்கு ஞானத்தை அளிப்பாயாக.

(க-ரை) கோடைக்காலத்தில் மண்ணில் விளையாடும் துஷ்டக் குழந்தையை தாயார் அடித்துப் பாலூட்டி கட்டிலில் தூங்க வைப்பது போல ஸம்ஸார துக்கத்தினல் துவண்டுபோன ஜீவர்களைத் தண்டித்து அவர்களுடைய வினைப்பயனை அனுபவிக்கச் செய்து களைப்பாறச் செய்வதற்காக தாயினும் நூறு மடங்கு அன்பு கொண்ட ஈச்வரன் ருத்ரரூபியாகி ஸம்

ஹார காரியத்தைச் செய்கிறார். பிறகு சிறிது காலம் கழித்து மறுபடியும் எழுப்பி போகங்களை அனுபவிக்கச் செய்கிறார். ஈசன் ஸர்வஜ்ஞன், ஸம்ஸாரத்தி லுண்டாகும் ஸகலவித துக்கங்களையும் விலக்குகிற வர். ஆதலால் முதலில் உண்டாகும் ப்ரம்மதேவனை அருளோடு நோக்குகிறார். இதுவே சாக்ஷுஷ தீக்ஷை யாகும். குரு திருஷ்டி மாத்திரத்தினால் தன்னிட முள்ள ஞானத்தை சிஷ்யனிடம் தோற்றுவிப்பது சாக்ஷுஷதீக்ஷை எனப்படும். இதனால் ப்ரம்மதேவ னுக்கு ஸகல உலகங்களையும் படைக்கும் திறமை யுண்டாகிறது. இவ்விதமுள்ள ஈசன் எனக்கு ப்ரம்ம விஷ்ணுருத்ர கிரந்திகள் என்ற முக்தி மார்க்கத்தி லுள்ள முட்டுக் கட்டைகளை நீக்குவதற்காக நான் சிவஜ்ஞானம் பெறும்படி கருணை செய்யவேண்டும்.

(வி - ரை) இந்த ஸ்லோகம், **यो देवानां प्रथमं पुरस्तात् विश्वाधिको रुद्रो महर्षिः। हिरण्यगर्भं पश्यति जायमानं स नो देवः शुभया स्मृत्या संयुनक्तु** என்பது முதலிய வேத வாக் கியங்களின் வ்யாக்யான ரூபமாயும், அதே பதங்கள் அமைந்ததாயும் காணப்படுதல் கவனிக்கத் தக்கது. **अशुभद्रावकः** - என்ற பதம் ருத்ரபதத்தின் விரிவுரை யாகும். சைவ ஸித்தாந்த ஸாரத்தில்.

विश्रान्त्यै भविनां च खिन्नमनसां पाकाय कर्मावलेः
मायावाग्बलसंभवाय कुरुते शम्भुर्यदा संहृतिम् ।
शिष्यन्ते पशवः सशक्तिरमलः शम्भुश्च मायाद्वयं
सृष्ट्यार्थं कुरुते ततश्च दयया भोगाय पुंसां पुनः ॥

என்று பிரளயமும், மறுபடி ஸ்ருஷ்டியும் அதன் கார ணமும் கூறப்பட்டுள்ளது. ஸ்காந்தத்தில், दीपनात्

आत्मबोधस्य क्षारणात्तमसोऽस्य च। दीक्षाशब्देन कथितं गुरोः साक्षान्निरीक्षणम्॥ எனவும், ददाति शिवतादात्म्यं क्षिणोति च मलत्रयम्। अतो दीक्षेति सा प्रोक्ता दीक्षाशब्दार्थवेदिभिः॥ என்று புறுஷார்த்த போதத்திலும் தீக்ஷாசப்தார்த்தம் கூறப்பட்டுள்ளது. தீக்ஷை மூன்று விதம். மாந்த்ரிகீ, ஸ்பார்சிகீ, சாக்ஷுஷீ என்றும் பரசுராம ஸூத்திரத்தில், चक्षुरुन्मील्य यस्तत्त्वं ध्यात्वा शिष्यं निरीक्षते। पशुपाशविमोक्षाय दीक्षेयं चाक्षुषी मता॥ என்பது முதலிய வற்றுல் தீக்ஷையின் வகைகளும் கூறப்பட்டுள்ளன. மேலும் ஆணவீ, சாக்தீ, சாம்பவீ என வேறு வகையாகவும் தீக்ஷை பிரிக்கப்பட்டுள்ளது. देवासुराः संयत्ता आसन् என்னுமிடத்தில், रोदिति इति रुद्रः என்று ருத்ர சப்தத்திற்கு அக்னி என்று பொருள் சொல்லப்பட்டது. இங்குள்ள ருத்ரசப்தம், रुधिर् आवरणे, என்ற தாதுவிலிருந்து ஆவரண பூதமான அஜ்ஞானத்தை, द्रावयति (விரட்டியடிக்கிறது) என்று பொருள் கொண்டது.

—* दुःखतरणस्य शिवज्ञानैकमूलत्वकथनम् *—

यद्याकाशं शुभद मनुजाश्चर्मवद्वेष्टयेयुः
दुःखस्यान्तं तदपि पुरुषस्त्वामविज्ञाय नैति।
विज्ञानं च त्वयि शिव ऋते त्वत्प्रसादान्न लभ्यं
तद्दुःखार्तः कमिह शरणं यामि देवं त्वदन्यम्॥ २६॥

யத்யாகாசம் சுபத
மனுஜாஸ்சர்மவத் வேஷ்டயேயுஃ
துஃகஸ்யாந்தம் ததபீ புருஷஸ்
த்வாமவிஜ்ஞாய நைதி।

விஜ்ஞானம் ச த்வயி சிவ
ருதே த்வத் ப்ரஸாதாந்ந லப்யம்
தத்துக்கார்த்த: கமிஹ சரணம்
யாமி தேவ த்வதன்யம் ॥ 26 ॥

(ப-ரை) துக்கத்தினின்றும் கரையேற சிவஜ்ஞானமே காரணமாகும் எனக் கூறுகிறார். शुभद - க்ஷேமத்தை யளிப்பவனே मनुजा: - மனிதர்கள் आकाश - வானத்தை चर्मवत् - தோலைப்போல यदि वेष्टयेयु: तदपि சுருட்ட வல்லவர்களாயினும் त्वां - (पुरुषं) - பரமாத்மாவாகிய உன்னை अविज्ञाय - அறியாமல் दु:खस्य अन्तं - ஸம்ஸார துக்கத்தின் நிவ்ருத்தியை पुरुष: - ஒரு மனிதனும் न एति - அடைகிறது இல்லை. शिव - சிவனே त्वयि च विज्ञानं - உன் விஷயமான ஞானமோ त्वत्प्रसादात् ऋते - உன்னுடைய அருளின்றி न लभ्यं - அடையக் கூடியதல்ல. तत् - ஆகையால் दु:खार्त: - துக்கத்தால் பீடிக்கப்பட்ட நான் इह - இந்த நிலைமையில் त्वदन्यं - உன்னைத் தவிர कं देवं - எந்த தெய்வத்தை शरणं यामि - சரணமடைவேன்.

(க - ரை) வானத்தைப் பாய்போல் சுருட்டுவது முற்றிலும் முடியாத காரியம். இந்த மானிடவர்க்கம் அதையும் ஸாதித்து விட்டாலும் சாதித்து விடலாம். ஆனல் உன்னை யறியாமல் துக்கத்தை மட்டும் கடக்க முடியாது. உன்னை யறிவது என்பதோ உன் கருணையினலல்லது கிடைக்கக் கூடியதல்ல. ஆதலால் துக்கத்தைக் கடக்க விரும்பும் நான் உன்னைச் சரணமடைவதைத் தவிர வேறு

வகையறியேன். ஆதலால் உன்னருளைப்பெற உன்னையே சரணமடைகிறேன். வேறு யாரைச் சரணமடைய முடியும்.

(வி – ரை) तमेवं विद्वानमृत इह भवति। नान्यः पन्था अयनाय विद्यते। तरति शोकमात्मवित्। य एतद्विदुरमृतास्ते भवन्ति। तत्र को मोहः कः शोकः एकत्वमनुपश्यतः என்பன ஞானமே மோக்ஷ ஸாதனம் என்பதை வலியுறுத்துவன. அவனருளாலே அவன்தாள் போற்றி என்றார் பெரியோர்களும்.

—* शिवप्रसादाद्विद्याया मोक्षसाधनत्वकथनम् *—

किं गूढार्थैरकृतकवचोगुम्फनैः किं पुराणैः
तन्त्राद्यैर्वा पुरुषमतिमिर्दुर्निरूप्यैकमत्यैः।
किं वा शास्त्रैरफलकलहोल्लासमात्रप्रधानैः
विद्या विद्येश्वर कृतधियां केवलं त्वत्प्रसादात् ॥ २७ ॥

கிம் கூடார்த்தைः அக்ருதகவசோ
கும்பநைः கிம் புராணைः
தந்த்ராத்யைர்வா புருஷமதிபிः
துர்நிருப்யைகமத்யைः।
கிம்வா சாஸ்த்ரைரபல
கலஹோல்லாஸ மாத்ர ப்ரதானைः
வித்யா வித்யேச்வர க்ருததியாம்
கேவலம் த்வத்ப்ரஸாதாத் ॥ 27 ॥

(ப-ரை) சிவனருளால் ஞானம் மோக்ஷஸாதனமாம் என்று கூறுகிறார். विद्येश्वर - ஸகல வித்யாதிபதியே गूढार्थैः - மறைந்து கிடக்கும் தாத்பர்யமுள்ள

श्रुतकवचोगुम्फनैः - ச்ருதி வாக்யங்களினல் கிं - யாது பயன். पुराणैः किं - புராணங்களால் என்ன பயன். पुरुषमतिभिः - மனித புத்தியினல் दुर्निरूप्यैकमत्यैः - ஒற்று மைப்படுத்த முடியாத முரண்பட்ட கொள்கைகளைக் கொண்ட तन्त्राद्यैः वा किम् - சமய நூல், மதாசாரங்கள் இவைகளால் தான் யாது பயன்? अफलकलहोल्लासमात्र-प्रधानैः - வீணன கலஹத்தில் குதூஹலத்தையே பிர தானமாகவுடைய शास्त्रैः वा - சாஸ்திரங்களால் தான் किं फलं என்ன பயன்? कृतधियां - அறிவாளிகளுக்கு विद्या-ஞானசம்பத்து त्वत्प्रसादात् केवलं - உன் அருளினலே தான் (ஏற்படக்கூடியதே ஒழிய மற்ற வழிகளால் பெறத்தக்கதல்ல).

(க-ரை) உலகத்தில் சுருதி, ஸ்ம்ருதி, புராணம், தாந்த்ரிக சமய நூல்கள், கலைகள், சாஸ்திரங்கள் என்று பலவிதமான வித்யைகள் ப்ரசாரத்திலிருக்கின் றன. இந்த வித்யைகளைக் கற்றுணர்ந்து மனிதன் யாதொருவித பலனையும் அடைவதில்லை. சுருதிகள் என்ற வேதங்களின் தாத்பர்யத்தைக் கண்டுபிடிப் பதே ஸாத்ய மில்லாமலிருக்கிறது. அது மறை பொருளாயிருப்பதால் புராணங்கள் மத விசார நூல் கள் எல்லாம் பரஸ்பரம் விரோதமான வழிகளைப் பின்பற்றுகின்றன. சாஸ்திர ஞானமே வாதி பிரதி வாதி கக்ஷி பிரதி கக்ஷி என்ற ரீதியில் பிரசண்ட கோலாஹலங்கள் செய்யப் பயன் படுகின்றனவேயன்றி வேறு பயன் அவைகளால் ஏற்படுவதில்லை. உண்மை யான அத்வைத ஜ்ஞானம் உன் அருளால் ஏற்பட வேண்டுமே யொழிய வேறு வழியில்லை. ஸர்வவித்யை களுக்கும் ஈசனுகிய நீயே ஞானத்தை யளிப்பவன்.

(வீ - ரை) अङ्गानि वेदाश्चत्वारो मीमांसा न्यायविस्तरः पुराणं धर्मशास्त्रं च विद्या ह्येताश्चतुर्दश ॥ आयुर्वेदो धनुर्वेदं गान्धर्वश्चेत्यनुक्रमात्। विद्या ह्यष्टादश स्मृताः என்று கூறப்பட்டன வித்யைகள்.

सर्गश्च प्रतिसर्गश्च वंशो मन्वन्तराणि च। वंशानुचरितं चेति पुराणं पञ्चलक्षणम्- என்று கூறப்பட்ட லக்ஷண முடைய பதினெண் புராணங்கள் சைவம், பாசுபதம் காபாலம், பாஞ்சராத்ரம் முதலியன தந்திரங்கள் அக்னி ஸ்தம்பனம், ஜல ஸ்தம்பனம் முதலியன கலைகள்

परमाद्वैतविज्ञानं प्रसादादेव नान्यथा। प्रसादे सति कीटो वा पतङ्गो वाऽथ वानरः। देवो वा दानवो वापि लभते ज्ञानमुत्तमम् ॥ என்பது ப்ரஹ்ம வசனம். एष ह्येव साधु कर्म कारयति तं, यमेभ्यो लोकेभ्य उन्निनीषते என்பது உபநிஷத் तामविद्यां तथाभूतां भगवान् परमेश्वरः। संहरत्युदयन्नेव सहस्रांशुस्तमो यथा ॥ என்பது ஈசன் அஜ்ஞானத்தை விலக்குகிறான் என்பதையும் உணர்த்துகிறது

—* शरणागतदीनोपेक्षणमयुक्तमिति प्रार्थना *—

पापिष्ठोऽहं विषयचपलः सन्ततद्रोहशाली
कार्पण्यैकस्थिरनिवसतिः पुण्यगन्धानभिज्ञः।
यद्यप्येवं तदपि शरण त्वत्पदाब्जं प्रपन्नं
नैनं दीनं स्मरहर तवोपेक्षितुं नाथ युक्तम् ॥ २८ ॥

பாபிஷ்டோஹம் விஷ்யசபலः
ஸந்ததத்ரோஹசாலீ
கார்பண்யைக ஸ்திரநிவஸதிः
புண்யகந்தாநபிஜ்ஞः।

यद्यप्येवं ततपि शरणं
त्वत्पदाब्जं प्रपन्नं
मानमं दीनं स्मरहर
तवोपेक्षितुं नाथ युक्तं ॥ 28 ॥

(ப - ரை) சரணமடைந்த தீனனை கவனியாமலிருப்பது தகுதியில்லை என வேண்டுகிறார். स्मरहर- மன்மத ஶத்ருவே अहं - நான் - पापिष्ठः - மிகவும் பாபங்களைச் செய்வதில் முனைந்தவன். विषयचपलः - போக வஸ்துக்களில் சபல முடையவன். सन्ततद्रोहशाली - சுருதி ஸ்மிருதி தேவகுருக்களின் விதிகளை எப்பொழுதும் மீறுகிறவன். कार्पण्यैकस्थिर निवसतिः - அற்ப புத்தியுடன் கூடிலேசப்பட்டு வாழ்க்கை நடத்துவதையே மாறுத லக்ஷ்யமாக வுடையவன். पुण्यगन्धानभिज्ञः - புண்ணிய மென்பதை எள்ளளவும் செய்தறியாதவன். यद्यप्येवं तदपि - நான் இவ்விதம் இருந்தபோதிலும் त्वत्पदाब्जं - உன் திருவடித் தாமரைகளை शरणं प्रपन्नं - சரணமடைந்த दीनं एनं - எளியவனுகிய என்னை उपेक्षितुं உதாஸீனம் செய்ய हे नाथ - ஓ ஸ்வாமியே तव न युक्तं - உனக்கு நியாயமில்லை.

(க-ரை) எவ்வளவு குற்றமுள்ளவனுக இருந்தாலும் சரண மடைந்தவனை ரக்ஷிப்பது ஈசனின் இயல்பு. ஆகையால் தன்னிடத்தில் பாபங்களைச் செய்வதில் தீவிரமான ப்ரவ்ருத்தியும், புண்ணிய லேசத்தையும் செய்யாத சுபாவமும் இருந்தாலும், தேகத்தையே ஆத்மா என்று நம்பினதால் ஈசுவரனின் உபதேசம் வேத மொழிகள் ஆசார்ய வாக்யங்கள் இவைகளை அலக்ஷ்யம் செய்த துரோஹியாகி விட்டாலும் ஸம்ஸார வாழ்க்கையில் குடும்ப ரக்ஷணத்திற்காகப் பற்-

பல அற்ப காரியங்களில் ஈடுபட்டு மிகவும் தீழ்ப்பட்ட நிலையிலிருந்தாலும் சரணுகத ரக்ஷகனுகிய ஈசன் தன்னைக் காப்பாற்றியே ஆகவேண்டுமென வற்புறுத்துகிறார்.

(வி - ரை) பல வகையான, வேதோல்லங்கனம், ஆசார்யவசனோல்லங்கனம், தேஹாத்ம புத்தி முதலிய துரோகங்கள் இருப்பதால் ஸந்தத த்ரோஹி என்றார். எவ்வித மிருப்பினும் என்னைக் காப்பாற்றுவிடில் உன்னுடைய ஈச்வரத்தன்மைக்கு இழுக்காகும். எனவே நிச்சயம் காப்பாற்றவேண்டுமென வற்புறுத்துகிறார்.

—* अनङ्गीकारेऽगतिकत्वकथनम् *—

आलोच्यैवं यदि मयि भवान् नाथ दोषाननन्तान्
अस्मत्पादाश्रयणपदवीं नार्हतीति क्षिपेन्माम् ।
अद्यैवेमं शरणविरहाद्विद्धि भीत्यैव नष्टं
ग्रामो गृह्णत्याहिततनयं किं नु मात्रा निरस्तम् ॥ २९ ॥

ஆலோச்யைவம் யதி மயி பவான்
நாத தோஷாநநன்தான்
அஸ்மத்பாதாச்ரயணபதவீம்
நார்ஹதீதி க்ஷிபேன்மாம் ।
அத்யைவேமம் சரணவிரஹாத் வித்தி
பீத்யைவ நஷ்டம்
க்ராமோ க்ருஹ்ணாத்யஹிததனயம்
கின்னு மாத்ரா நிரஸ்தம் ॥ 29 ॥

(ப - ரை) நீ என்னை ஏற்காவிடில் நான் கதியற்றவனுவேன் என்கிறார்.

नाथ - இறைவனே एवं - இவ்விதம் मयि - என்னிடத்தில் अनन्तान् दोषान् - கணக்கற்ற குற்றங்களை आलोच्य - ஆராய்ந்து பார்த்து असत्पादाश्रयणपदवीं - நம் சரணத்தைப் பற்றிக்கொள்ளும் தன்மைக்கு नार्हति - இவன் தகுந்தவனல்ல इति - என்று भवान् - தாங்கள் मां - என்னை यदि क्षिपेत् - தள்ளி விட்டால் शरणविरहात् - வேறு சரணமடைய வழியில்லாமல் अद्यैव - இப்பொழுதே भीत्या एव - பயத்தினுலேயே इमं नष्टं विद्धि இவன் விநாசம் அடைந்தவன் ஆவன் என்று நிச்சயித்துக் கொள்ளவும். मात्रा - தாயினுல் निरस्त - துரத்தப்பட்ட अहिततनयं - பெற்றோர்களுக்குப் பிரதிகூலமான நடத்தையுடைய பிள்ளையை ग्रामः किन्नु गृह्णाति - கிராமத்திலுள்ளோர் காக்க முன்வருவார்களா ?

(க - ரை) என் குற்றங்களையே எண்ணி இவன் நம்மிடம் சரண்புக யோக்யன் அல்லன் என்று என்னை நீ உதைத்துத்தள்ளி விடுவாயானுல் வேறு வகை தெரியாமல் இந்த க்ஷணமே நான் பயத்தினுல் ஹ்ருதயம் வெடித்துப் போய்விடுவேன். தாய் வேண்டாமென்று தள்ளிய துஷ்டப்பிள்ளையை உலகத்தில் யார் ஏற்றுக் கொள்ளுவார்கள்.

(வி - ரை) मातेव पुत्रान् रक्षस्व என்பது பிரச்நேபநிஷத். शतापराधिनमपि पुत्रं माता न हि त्यजेत् என்று ஆன்றோரும், त्वं हि नः पिता योऽस्माकमविद्यायाः परं पारं तारयसि என்றும் पितेव पुत्रमभिरक्षतादिमम् என்றும் உள்ள வேத வாக்கியங்களும் கவனிக்கவேண்டியன.

—* भरन्यासपूर्वकप्रार्थना *—

क्षन्तव्यं वा निखिलमपि मे भूतभावि व्यलीकं
दुर्व्यापारप्रवणमथवा शिक्षणीयं मनो मे ।
न त्वेवार्त्या निरतिशयया त्वत्पदाब्जं प्रपन्नं
त्वद्विन्यस्ताखिलभरममुं युक्तमीश प्रहातुम् ॥ ३० ॥

க்ஷந்தவ்யம் வா நிகிலமபி மே
பூதபாவி வ்யலீகம்
துர்வ்யாபார ப்ரவணமதவா
சிக்ஷணீயம் மனோ மே ।
ந த்வேவார்த்யா நிரதிசயயா
த்வத் பதாப்ஜம் ப்ரபன்னம்
த்வத் வின்யஸ்தாகில பரமமும்
யுக்தமீச ப்ரஹாதும் ॥ 30 ॥

(ப-ரை) ஸகல பாரங்களையு மீசனிடம் இறக்கி விட்டு வேண்டுகிறார்.

ஈச-ஸ்வாமி மே-என்னுடைய भूतभावि-இறந்த காலத்திலும் வருங்காலத்திலு முண்டான निखिलं व्यलीकं-எல்லா பாபங்களையும் क्षन्तव्यं वा-மன்னித்த லாவது வேண்டும். अथवा-அல்லது दुर्व्यापारप्रवणं-நிஷித்த ஆசாரங்களில் ப்ரவ்ருத்தி யுடைய मे-எனது मनो वा-மனதையாவது शिक्षणीयं-அடக்கு முறைகளால் சிக்ஷிக்க வேண்டும். निरतिशयया-அதிதீவ்ரமான आर्त्या-மனோவேதனையால் त्वत्पदाब्जं-உனது திருவடிகளை प्रपन्नं-சரணமடைந்த त्वद्विन्यस्ताखिलभरं-உன்னிடத்தில் ஸகல பாரத்தையுமிறக்கிய अमुम्-இந்த என்னை प्रहातुं-கைவிடுவதற்கு नत्वेव युक्तं-உனக்கு நியாயமே ஆகாது.

(க-து) என்னை குற்றமுள்ளவனென்று தள்ளுவது உனக்கு அழகல்ல. என் குற்றங்களை மன்னித்தாவது அல்லது என் குற்றங்களுக்கேற்ற தண்டனையை விதித்தாவது என்னை உன் கிருபைக்குத் தகுந்தவனாகச் செய்து அங்கீகரிக்கத்தான் வேண்டும். மிக்க வருந்தி நீயே கதியென்று உன் காலடியில் விழுந்து உன்னிடமே ஸகல பாரத்தையும் ஒப்படைத்த ஒரு ஏழையை நிராகரிப்பது உன் பெருமைக்கு இழுக்கன்றோ? பாரத்தை ஈச்வரனிடம் ஒப்புவித்தலாவது, தான் என்ற அபிமானத்தை விட்டு, செய்பவன் செய்விப்பவன் எல்லாம் அந்தர்யாமியான பரமேச்வரனே என்று நம்பி எல்லாப் பொறுப்புகளையும் அவனிடமே சமத்தி யிருத்தலாகும்.

(வி - ரை) यदि संन्यस्य कर्माणि युक्त आसीत मत्परः। मदर्थमपि कौन्तय॥ என்பது கீதை. ऐष ह्येव साधु कर्म कारयति तं यमेभ्यो लोकेभ्य उन्निनीषते என்பது உபநிஷத்.

—* सर्वज्ञत्वदयानिधित्वादिकारणोपपादनम् *—

सर्वज्ञस्त्वं निरुपधिकृपासागरः पूर्णशक्तिः
कस्मादेनं न गणयसि मामापदब्धौ निमग्नम्।
एकं पापात्मकमपि रुजा सर्वतोऽत्यन्तदीनं
जन्तुं यद्युद्धरसि शिव कस्तावतातिप्रसङ्गः॥ ३१॥

ஸர்வஜ்ஞஸ்த்வம் நிருபதி
க்ருபாஸாகரः பூர்ணசக்திः
கஸ்மாதேனம் ந கணயஸி
மாமாபதப்தெள நிமக்நம்।

ஏகம் பாபாத்மகமபி ருஜா
ஸர்வதோத்யந்த தீனம்
ஜந்தும் யத்யுத்தரஸி சிவ
கஸ்தாவதாதி ப்ரஸங்க: ॥ 31 ॥

(ப-ரை) முற்றுமுணர்ந்த கருணைக் கடலாதலால் காத்தல் அவசியம் எனக் கூறுக்கிறார். शिव-சிவனே त्वं-நீ सर्वज्ञ:-எல்லாமறிந்தவன், निरुपधिकृपासागर:-எல்லையற்ற கருணைக் கடலாகியவன். पूर्णशक्ति:-நிரம்பிய சக்தியுடையவன். आपदब्धौ-ஆபத்துக்கடலில் निमग्नं-மூழ்கிய एनं मां-இந்த என்னை कस्मात्-ஏன் न गणयसि கவனிக்கவில்லை. पापात्मकमपि-பாபியான துர்குணமுடையவனாயினும் हा வேதனையினால் सर्वत: எல்லாவிதத்திலும் अत्यन्तदीनं-மிகவும் திக்கற்ற एकं जन्तुं-ஒரு பிராணியை यदि उद्धरसि-நீ கை தூக்கிவிடுவாயானால் तावता-அம்மட்டில் तव-உனக்கு क: என்ன अतिप्रसङ्ग: முறைத்தவறு (ஏற்படும்).

(க-ரை) ஆபத்தில் மூழ்கிக்கிடக்கும் என்னை பரிபூர்ணசக்தியுடைய நீ ரக்ஷிக்காமல் இருக்கலாமா? நீ ஸர்வேச்வரனாதலால் வேறு ஒருவரின் உத்தரவைப் பெற்றுத்தான் என்னை காப்பாற்றவேண்டுமென்பதில்லை. நீ ஸர்வஜ்ஞனாதலால் என் கஷ்டதசையை அறியாமலில்லை. நீ கருணைக்கடலாதலால் என்பால் இரங்கக் கூடாதவனில்லை. நான் பாபி என்றாலும் பலவிதத்திலும் பொறுக்க முடியாத துன்பங்களை அநுபவித்து மிக்க பரிதாப நிலையை அடைந்திருக்கும் என்னை ஒருவனை மட்டும் காப்பாற்றிவிட்டால் உனக்கு என்ன குடிமூழ்கிப்போய்விடும். இதைச்சற்று ஆலோசித்துப்பார்.

(வி - ரை) **यः सर्वज्ञः सर्ववित्, परास्य शक्तिर्विविधैव श्रूयते।** என்பது உபநிஷத். **பாரதத்தி ज्ञानानि च वशे यस्य तारकादोत्यशेषतः।** கங்காதரணம், காலகூட விஷ முண்டல் முதலியவற்றுல் ஸர்வசத்தியும், மிகுந்த தயையும் கண்டு கொள்க.

—* क्षुण्णा चैवं प्रार्थनारीतिरित्याह *—

अत्यन्तार्तिव्यथितमगतिं देव मामुद्धरेति
क्षुण्णो मार्गस्तव शिव पुरा केन वाऽनाथनाथ।
कामालम्बे बत तदधिकां प्रार्थनारीतिमन्यां
त्रायस्वैनं सपदि कृपया वस्तुतत्त्वं विचिन्त्य॥ ३२॥

அத்யந்தார்தி வ்யதிதமகதிம்
தேவ மாமுத்தரேதி
க்ஷுண்ணோ மார்க்கஸ்தவ சிவ
புரா கேன வா நாதநாத।
காமாலம்பே பத தததிகாம்
ப்ரார்த்தனு ரீதிமன்யாம்
த்ராயஸ்வைநம் ஸபதி க்ருபயா
வஸ்துதத்வம் விசிந்த்ய॥ 32॥

(ப - ரை) வேண்டுகோளுக்கு இம்முறையே வழக்குமுள்ளது எனக் கூறுகிறார். **अनाथनाथ** - அனைத களுக்கு ரக்ஷகனே! **देव** - ஸ்வாமி **अत्यन्तार्तिव्यथितं** - தீவிர மான துக்கங்களால் மனம் நொந்து போன **अगतिं** - வேறு ரக்ஷகனில்லாத **मां** - என்னை **उद्धर** - கரையேற்று **इति** - என்று **तव मार्गः** உன்னிடம் அடைக்கலம் புகும் வழி **पुरा** - புராதனமாய் **केन वा क्षुण्णः** யாரால்தான் பழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டதோ ஆச்சரியம்.

तदधिकां அதைவிட மேலான **कां अन्यां** - வேறு எந்தவிதமான **प्रार्थनारीतिं** - பிரார்த்தனை செய்து கொள்ளும் வழியை **आलम्बे** - நான் அநுசரிப்பேன். **बत** ஐய்யோ! **वस्तुतत्त्वं विचिन्त्य** - இந்தமாதிரி நிலையை முன்யோசனை பண்ணி **एनं** - இந்த என்னை **सपदि** - உடனே **कृपया** - கருணையினால் **त्रायस्व** - காப்பாற்று.

(க - ரை) ஹே ஈச்வர! நான் கணக்கிட முடியாத கிலேசங்களால் பீடிக்கப்பட்டிருக்கிறேன். எனக்கு உன்னைத் தவிர வேறு யாரும் கதியில்லை. என்னை இந்த துக்கஸாரத்திலிருந்து கரையேற்றிவிடு என்ற வாறு உன்னிடம் பிரார்த்தனை செய்து கொள்ளும் நீதியானது எந்தப் புண்ணியவானால் தொடங்கப்பட்டதோ! அதுவே அநாதிகாலமாய் அநாதைகளுக்கு பிரார்த்தனை நீதியாக வழங்கி வருகிறது. ஆதலால் நானும் அவ்வழியையே பின்பற்றி எனது துக்கங்களை உன்னிடம் தெரிவித்துக்கொண்டு உன்னை ரக்ஷகன் என்று சரணமடைகிறேன். இப்புராதன நீதியைவிட்டு வேறு புதிதாய் உன்னிடம் பிரார்த்தனை செய்து கொள்ளும் நீதியை நான் எவ்விதம் அநுஷ்டிக்க முடியும்? இந்த நிலையை யுணர்ந்து என்னை நீ உடனே தயவுடன் காப்பாற்ற முன்வரவேண்டும் ஈச்வர! 'நான்' அநாதை, பாபி, துக்கிதன், எனக்கு உன்னைத் தவிர வேறு கதி கிடையாது, நீ தான் என்னை ரக்ஷிக்க வேண்டும்.' என்றுதான் பக்தர்கள் உன்னை வேண்டிக் கொள்ளுவது வழக்கம். அப்படியேதான் நானும் உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். ஒரு ஜீவன் ஈச னிடம் தன் பரிதாபத்தையும் பிரார்த்தனையையும் தெரிவித்துக்கொள்ள வேறு வழி கிடையாது.

அநாதிகாலமாய் சரணமடைந்த பக்தர்களை ரக்ஷித்த ீ என்னையும் ரக்ஷிப்பாயாக.

(வி - ரை) कोटयो ब्रह्महत्यानाम् अगम्यागमकोटयः। सद्यः प्रलयमायान्ति महादेवेति कीर्तनात्॥ महादेवेति वक्तारं दृष्ट्वा तु यमकिङ्कराः। पलायन्ते महाभीता स्मृत्वाः तु यमशासनम्॥ என்பது சிவரஹஸ்யம். ஜீவ ஈச்வரரூபமான வஸ்து தத்துவத்தை விசாரித்து அறிந்த மாத்திரத்தில் சோக நிவ்ருத்தி என்பது உபநிஷத்துக்களின் ஸாரம்.

—*जीवेश्वरवस्तुतत्त्वनिरूपणं,आत्मनो मर्कटत्वनिरूपणं च*—

एतावन्तं भ्रमणनिचयं प्रापितोऽयं वराकः
श्रान्तः स्वामिन्नगतिरधुना मोचनीयस्त्वयाहम्।
कृपाकृत्यव्यपगतमतिर्दीनशाखामृगोऽयं
संताड्यैनं दशनविवृतिं पश्यतस्ते फलं किम्॥ ३३॥

ஏதாவந்தம் ப்ரமண நிசயம்
ப்ராபிதோயம் வராக:
ச்ராந்தஸ் ஸ்வாமின்ன கதிரதுனு
மோசநீயஸ்த்வயாஹம்।
க்ருத்யாக்ருத்யவ்யபகத மதிர்
தீனசாகாம்ருகோயம்
ஸந்தாட்யைநம் தசன விவ்ருதிம்
பச்யதஸ்தே பலம் கிம்॥ 33॥

(ப – ரை) ஜீவன் ஈச்வரன் என்ற வஸ்து தத்துவத்தை நிரூபணம் செய்து தன்னை குரங்கு போலுள்ளவன் என்றும் கூறுகிறார். स्वामिन् - ஸ்வாமி! एतावन्तं - இந்த மட்டும் भ्रमणनिचयं - அதிக அலைச்சலை प्रापितः -

அடைவிக்கப்பட்ட **अयं वराकः** இந்த அற்ப பிராணீ **श्रान्तः**-சிரமமடைந்து சோர்ந்து போய்விட்டது. **अधुना**-இப்பொழுது **अगतिः** - நிர்கதியாய் நிற்கும் **अहं** - நான் **त्वया** - உன்னால் **मोचनीयः** விடுவிக்கத் தகுந்தவன். **कृत्याकृत्यव्यपगतमतिः** - செய்யத்தகுந்தது தகாதது என்ற பகுத்தறிவு இல்லாத **अयं दीनशाखामृगः** - இது ஒரு எளிய குரங்கு. **एनं** - இதை **सन्ताड्य** - அடித்து **दशन-विवृतिं** - இதன் பல் இளிப்பை **पश्यतः** - பார்க்கின்ற **ते** - உனக்கு **किं फलं** - யாது பயன்?

(க - ரை) ஒரு குரங்காட்டி தன்னால் பழக்கப் பட்ட குரங்கை வீடுதோறும் கொண்டுபோய் ஆங் காங்கு அதைப் பற்பல விதமாய் ஆட்டிவைக்கிறான். அவ்விதம் அலைந்து திரிந்து கிலேசப்பட்ட அக்குரங்கு தன் களைப்பின் மிகுதியைப் பொறுக்க மாட்டாமல் மிகவும் பரிதாபமாகப் பல்லியிளிக்கிறது. அவ்விதம் இளிப்பது இனி என்னை விட்டுவிடமாட்டாயா? என் பது போல் தோன்றுகிறது. சஞ்சல ஸ்வபாவமுள்ள வனுதலாலும் அறிவீனனுதலாலும் ஜீவன் அக்குரங் கிற்குச் சமானமாகிறான்.

இவன் கோடிக்கணக்கான கர்ப்பவாஸத்தை அடைகிறான். காலனின் தண்டத்தாலடிக்கப்பட்டுப் பல்லை இளிக்கிறான். ஜன்மந்தோறும் தனது நன் மையை அறிந்து கொள்ளாமல் பலவிதமான சேஷ் டைகளைச் செய்து இடைவிடாது கிலேசங்களை அனு பவிக்கிறான். இப்படி இந்தக் குரங்கை ஆட்டிவைப்ப தில் ஈசனுக்கு யாது பயன்? குரங்காட்டி போல அவர் பிச்சை எடுத்து ஜீவனம் செய்பவரா? அல்லது குறும் புள்ள பையனைப் போல குரங்கைத் துன்புறுத்தி

வேடிக்கை பார்ப்பவரா? இந்தக் குரங்கு படும் அவஸ்தையையும் அது மிகப் பரிதாபமாய்ப் பல்லிளிப்பதையும் பார்த்து தயவு ஏற்பட்டு ஸர்வேச்வரன் இதை அவிழ்த்து விடக்கூடாதா?

(வி - ரை) भोगार्थं सृष्टिरित्येके क्रीडार्थमिति चापरे । देवस्यैष स्वभावोऽयमाप्तकामस्य का स्पृहा ॥ என்பது சுருதி. சங்கரபகவத் பாதாசாரியார் சிவானந்த லஹரியில் மனத்தைக் குரங்காக வர்ணித்து கபாலமெடுத்து பிக்ஷுவாங்கும் உனக்கு ஸாதனமாக எனது மனத்தை உன் வசப்படுத்திக் கொள் என்று கூறுவதும் ஈண்டு கவனிக்கத்தக்கது.

—* ईशकृपाप्राप्तिभाग्याभावहेतुप्रश्नः *—

माता तातः सुत इति समाबध्य मां मोहपाशै-
रापात्यैवं भवजलनिधौ हा किमीश त्वयाऽऽप्तम् ।
एतावन्तं समयमियतीमार्तिमापादितेऽस्मिन्
कल्याणी ते किमिति न कृपा कापि मे भाग्यरेखा ॥३४॥

மாதா தாதஸ் ஸுத இதி
ஸமாபத்ய மாம் மோஹபாசை:
ஆபாத்யைவம் பவஜலநிதௌ
ஹா கிமீச த்வயாப்தம் ।
ஏதாவந்தம் ஸமயமியதீ
மார்த்தி மாபாதிதே ஸ்மின்
கல்யாணீ தே கிமிதி ந க்ருபா
காபி மே பாக்யரேகா ॥ 34 ॥

(ப-ரை) ஈசனுடைய கிருபையை அடையக்கூடிய பாக்யம் ஏன் இல்லை என வினவுகிறார்.

ईशे - ஹே ஈச்வர **माता तातः सुतः इति** - தாய் தந்தை பிள்ளை என்றவாறு **मोहपाशैः**-ஆசைக் கயிறுகளால் **मां**-என்னை **समाबध्य** - கட்டி **भवजलनिधौ** - ஸம்ஸாரக்கடலில் **आपात्य** - தள்ளி **हा** - ஐய்யோ **त्वया** - உன்னால் **किं-आसं** - என்ன பயன் அடையப்பட்டது? **एतावन्तं समयं** - இவ்வளவு காலமாக **इयतीं आर्तिं** - இத்துணைக் கஷ்டத்தை **आपादिते** - அடைவிக்கப்பட்ட **अस्मिन्** - இந்த என் விஷயத்தில் **कल्याणी** - க்ஷேமத்தைச் செய்யக் கூடிய **तें कृपा**-உன்து கருணை **किमिति न** - ஏன் ஏற்படவில்லை? **मे** - எனக்கு **कापि भाग्यरेखा** - கொஞ்சமாவது புண்ணியம் (ஏன் ஏற்படவில்லை)

(க-ரை) ஹே ஈச்வர! தாய் தகப்பன் பிள்ளை பெண்டிர் என்றவாறு பற்பல பந்தங்களால் என்னைப் பிணைத்து இந்த ஸம்ஸார மென்ற ஸமுத்திரத்தில் இப்படித் தள்ளியிருக்கிறாயே! இதனால் உனக்கு என்ன லாபம்? என்னை இத்தனை நாள் கஷ்டப்படுத்தியது போதாதா? இனியாவது எனக்கு நல்ல காலம் பிறந்து உனக்கு என்னிடம் தயவு உண்டாகாதா? உனது க்ருபை எனது பாக்யம்,

(வி-ரை) **पुण्यैर्देवत्वमाप्नोति पापैः स्थावरतामियात्। समाभ्यां पुण्यपापाभ्यां मानुष्यं प्राप्नुयान्नरः॥** என்பது புராண வசன்ம். **यदि मे पुण्यमस्तीह कुतो नायाति ते कृपा?** பாக வதத்திலும் **आत्मजायासुतागारसुतद्रविणबन्धुषु। निरूढमूल-हृदयः आत्मानं बहु मन्यते॥ ध्रुवाणि मन्यते मोहात् गृहक्षेत्रवसूनि च।** முதலியன புத்திராதிகள் பந்தமென்பதை வலியுறுத்துகின்றன.

—* जीवेश्वरदायविभागविवादः *—

भुङ्क्षे गुप्तं बत सुखनिधिं तात साधारणं त्वं
भिक्षावृत्तिं परमभिनयन्मायया मां विभज्य ।
मर्यादायाः सकलजगतां नायकः स्थापकस्त्वं
युक्तं किं तद्वद विभजनं योजयस्वात्मना माम् ॥३५॥

புங்க்ஷே குப்தம் பத ஸுகநிதிம்
தாத ஸாதாரணம் த்வம்
பிக்ஷாவ்ருத்திம் பரமபிநயன்
மாயயா மாம் விபஜ்ய ।
மர்யாதாயாஸ் ஸகல ஜகதாம்
நாயகஸ் ஸ்தாபகஸ்த்வம்
யுக்தம் கிம் தத் வத விபஜனம்
யோஜயஸ்வாத்மனா மாம் ॥ 35 ॥

(ப - ரை) ஜீவ ஈச்வரர்களாகிய நமக்கு ஆனந்தமென்னும் சொத்தை பங்கிடுவதில் விவாதம் ஏற்பட்டுள்ளது எனக் கூறுகிறார்.

தात - அப்பா! **साधारणं** - நம் மிருவருக்கும் பொதுவாயுள்ளதாயினும் **गुप्तं** - மறைத்து (ஒளித்து) வைக்கப்பட்டதான **सुखनिधिं** - ஸுகமென்ற பொக்கிஷத்தை **भिक्षावृत्तिं परम् अभिनयन्** - பிக்ஷை எடுத்து ஜீவிப்பதாக மிகவும் பாசாங்குசெய்து கொண்டு **त्वं** - நீ - **मां मायया विभज्य** - என்னை வஞ்சனையாகப் பிரித்து வைத்துவிட்டு (மாயை - அஜ்ஞானம். அஜ்ஞானத்தால் என்னை வேறுபடுத்தி விட்டு) **भुङ्क्षे** - நீயே அனுபவிக்கிறாய். **सकलजगतां नायकः** - எல்லாவுலகங்களையும் நடத்திவைப்பவனும் **मर्यादायाः स्थापकः** - கட்டுப்பாடு

களை ஏற்படுத்தியவனுமாக இருப்பவன் त्वं - நீ – तत् - ஆதலால் (அம்மாதிரியான) विभजनं - பிரிவினை किं युक्तं பொருந்துமா? वद – சொல் मां - என்னை आत्मना - தன்னோடு योजयस्व - சேர்த்துக்கொள்.

(க–ரை) பரமாத்மாவின் நித்ய ஸுக நிலையில் ஜீவாத்மாவுக்கும் ஸமமான பாத்யமிருக்க, மாயையினால் ஜீவாத்மா அந்த ஸுகானுபவத்திலிருந்து விலக்கப்பட்டு பல கிலேசங்களை அனுபவிக்கின்றான் என்ற வேதாந்த தத்துவத்தை ஒரு லௌகிக உதாஹரணத்தை உட்கருத்தாக வைத்துப் பேசுகிறார். தகப்பனுயிருக்கும் நீ உனக்கும் எனக்கும் பொதுவான ஆத்ம சுகம் என்ற ஐச்வரியத்தை எனக்கு ஆளக் கொடுக்காமல் என்னை வஞ்சனையாக பாகம் செய்து விலக்கிவிட்டு நீயும் ஏதோ பிச்சை எடுத்து ஜீவிப்பவன் போல பாசாங்கு செய்துகொண்டு தனிமையில் அந்த ஐச்வரியத்தை நீயே அனுபவிக்கிறாயே! இது எப்படி நியாயமாகும்? உலகத்தவர்களுக்கு நியதிகளை விளக்கும் வேதங்களையும் தர்மசாஸ்திரங்களையும் ஏற்படுத்திய நீயே இவ்விதம் அக்ரமம் செய்தால் யாரிடம் முறையிடுவது? உனக்கு மேல் அதிகாரியிருந்தாலும் அவரிடம் முறையிடலாம். நீயே யாவர்க்கும் மேலான பிரபுவாதலால் எனக்கு உன்னைத் தவிர முறையிடுவதற்கு வேறு புகலிடமும் கிடையாது. மாயை என்பது அவித்யை. அது தான் ஜீவாத்மா பரமாத்மாவினின்று விலகியிருப்பதற்குக் காரணம். தாருகாவனத்தில் மஹர்ஷிகளுக்கு ஜ்ஞானோபதேசம் செய்யும் பொருட்டு லீலையாக பகவான் பிக்ஷை எடுத்தார் என்பது புராண ப்ரஸித்தம்.

(வி - ரை) பகவானே உலகத்தில் நியதிகளை ஏற்படுத்தியவர் என்பதை एष सेतुर्विधरण एषां लोकानां असंभेदाय என்ற உபநிஷத் வாக்யம் கூறுகிறது.

अस्य महतो भूतस्य निःश्वसितमेतद्ग्वेदो यजुर्वेदः सामवेदः என்ற உபநிஷத்தும் शास्त्रयोनित्वात् என்பது முதலிய ப்ரஹ்ம சூத்திரமும், यस्य निःश्वसितं वेदा यो वेदेभ्योऽखिलं जगत्-என்ற வேத பாஷ்யகார வசனமும் ஈசனே ஸகல ஜகத்தின் நியதிகளை நிலை நிறுத்த வேதாதிகளை ஏற்படுத்தியவர் என்பதைத் தெளிவுறச்செய்யும். அவனே ஸகல ஜகந்நாயகன் என்பதை तमीश्वराणां परमं च दैवतम् என்பது முதலிய பாரத வாக்யங்கள் வெளிப்படுத்துவன.

—* भक्तपादधूलिभिः आसनः शरीरारम्भप्रार्थना *—

न त्वा जन्मप्रलयजलधेरुद्धरामीति चेद्धीः
आस्तां तन्मे भवतु च जनिर्यत्र कुत्रापि जातौ।
त्वद्भक्तानामनितरसुखैः पादधूलीकिशोरैः
आरब्धं मे भवतु भगवन् भावि सर्वं शरीरम् ॥ ३६ ॥

நத்வா ஜன்மப்ரலய ஜலதே
ருத்தராமீதி சேத்தீ:
ஆஸ்தாம் தன்மே பவது ச
ஜனிர்யத்ர குத்ராபி ஜாதௌ ।
த்வத்பக்தானுமனிதரஸுகை:
பாததூளீ கிசோரை:
ஆரப்தம் மே பவது பகவன்
பாவி ஸர்வம் சரீரம் ॥ 36 ॥

(ப-ரை) எனது அடியவர்களின் பாத தூளியி னால் எனது உடல் உண்டாகட்டும் என வேண்டு கிறார்.

त्वा - உன்னை जन्मप्रलयजलधेः - பிறவித் தொடர் பென்ற துக்கத்தினின்றும் न उद्धरामि - கரையேற்ற மாட்டேன் इति - என்று चेत् - உனது கருத்தானால் मे - எனக்கு तत् आस्तां - அப்பிறவி இருக்கட்டும். जनिः च - பிறவியும் यत्र कुत्रापि जातौ - எந்த ஜாதியில் வேண்டு மானாலும் भवतु - ஏற்படட்டும் भगवन् - ஓ ஸ்வாமி मे भावि सर्वं शरीरं - எனக்கு ஏற்படப்போகிற எல்லா சரீர மும் त्वद्भक्तानां - உன் பக்தர்களுடைய अनितरसुखैः - உன்னிடத்திலன்றி வேறு எங்கும் ஸுகத்தை யறி யாத पादधूलीकिशोरैः - கால் தூசித் திவிலைகளால் आरब्धं भवतु - உண்டாக்கப்பட்டதாய் இருக்கட்டும்.

(க-ரை) எவ்விதத்திலும் உன்னை ஜனன மர ணங்களிலிருந்து விடுவிக்க முடியாது என்று உனது தீர்மானமாகில் எனக்கு அளிக்கப்படும் சரீரமானது எந்த ஜாதியில் என்னைப் பிறக்கச் செய்வதானாலும் சரி உன் பக்தர்களின் கால் பட்ட தூளிகளால் அமைக் கப் பெற்றதாயிருக்கட்டும் என்றுதான் பிரார்த்தித் துக் கொள்ளுகிறேன். ஏனெனில் அப்பொழுது எனக்கு உன்னிடம் இடைவிடாத சஞ்சலமற்ற பக்தி ஏற்பட ஹேதுவாகும். பெரியோர்களின் பாத தூளி சரீராரம்பத்திற்கு எப்படிக் காரணமாகும் என்றால் மாதாபிதாக்கள் உட்கொண்ட அன்ன பானாதிகளில் அவை சம்பந்தப்பட்டிருப்பதன் மூலம் என்று கூற லாம். அல்லது आरब्धं - என்பதற்குப் பதிலாய் आलिप्तं - என்ற பாடத்தை எடுத்துக்கொண்டால் பால்யம்

முதல் ஸாதுக்களின் பாத தூளி சரீரத்தில் படுவது அநேக ஸந்தர்ப்பங்களில் ஸுலபமாகும்.

(வி - ரை) समस्तसंपत्समवाप्तिहेतवः समुत्थितापत्कुलधूमकेतवः। अपारसंसारसमुद्रसेतवः पुनन्तु मां ब्राह्मणपादपांसवः॥ என்று பிராமணர்களின் பாத தூளியின் மகிமை சொல்லப்பட்டிருக்கிறது. तदन्तरप्रतिपत्तौ रंहति संपरिष्वक्तः प्रश्ननिरूपणाभ्यां - என்ற ப்ரஹ்ம ஸூத்ரத்தின் பாஷ்யத்திலும், சாந்தோக்யம் பஞ்சாக்னி வித்யை கூறுமிடத்திலும் ஜீவனுடைய வேறு சரீர ப்ரவேசம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

—* कीटादिजन्मप्राप्तावपि ईश्वरचरणान्तिकस्थितिप्रार्थना *—

कीटा नागास्तरव इति वा किं न सन्ति स्थलेषु
त्वत्पादाम्भोरुहपरिमलोद्गाहिमन्दानिलेषु।
तेष्वेकं वा सृज पुनरिमं नाथ दीनार्तिहारिन्
आतोषान्मां मृड भवमहाङ्गारनद्यां लुठन्तम्॥ ३७॥

கீடா நாகாஸ்தரவ இதி வா
கிம் நஸந்தி ஸ்தலேஷு
த்வத் பாதாம் போருஹ
பரிமளோத்வாஹி மந்தானிலேஷு |
தேஷ்வேகம் வா ஸ்ருஜ புனரிமம்
நாத தீனார்த்தி ஹாரின்
ஆதோஷான் மாம் ம்ருட
பவமஹாங்கார நத்யாம் லுடந்தம் ॥ 37

(ப-ரை) புழு முதலிய பிறவி எடுப்பினும் உனது திருவடியருகில் இருத்தல் வேண்டுமென்கிறார்.

कीटाः-புழுக்கள் नागाः-பாம்புகள் तरवः-மரங்கள் इति-என்றவாறு त्वत्पादाम्भोहपरिमलोद्गाहिमन्दानिलेषु-உன் திருவடியாகிற தாமரைப் பூவின் நறுமணத்தைப் பரப்பும் தென்றல் வீசுகிறன்ற स्थलेषु-பிரதேசங்களில் किं वा न सन्ति-இருக்கவில்லையா? दीनार्तिहारिन् मृड-பரிதவித்தவர்களின் கிலேசங்களைப் போக்கி சுகமளிக்கும் नाथ-பிரபுவே भवमहाङ्गारनद्यां स्फुरन्तं-ஸம்ஸாரமாகிற பெரிய நெருப்பு நதியில் உருண்டு வரும் इमं मां-இந்த ஜீவனுகிய என்னை (ते-உனக்கு) मा तोषात्-திருப்தி ஏற்படும் வரையில் तेषु वा-அவைகளிலாவது एकं सृज-ஒன்றாகப் படைப்பாயாக.

(க-ரை) மனுஷ்ய ஜன்மம் தான் வேண்டுமென்று நான் கேட்க்கவில்லை. புழு பூச்சி பாம்பு மரம் என்றவாறு எவ்வளவோ ஜீவராசிகள் இருக்கின்றனவே! அவற்றில் ஒன்றாய் என்னைச் சிருஷ்டித்தாலும் சம்மதமே. ஆனால் அப்பிரதேசத்தில் நான் சஞ்சரிக்குமிடம் உன் பாதத்தில் பட்ட இளங்காற்று வீசுமிடமாக இருந்தால் போதும். இந்த ஜனன மரணமென்னும் நெருப்பு நதியில் கிடந்து புரளும் எனக்கு உன் சரணகமலத்தின் மணங்கமழும் ஜில்லென்ற மந்த மாருதம் ஆறுதலையளிக்கட்டும். அவ்விதம் நீ கிருபை செய்வாயானால் எவ்வளவு காலம் இந்த ஸம்ஸாரத்தில் என்னைத் தள்ளிக்கொண்டிருந்தாலும் எனக்கு ஆக்ஷேபணை இல்லை. கிலேசப்படுபவர்களின் கிலேசங்களை நீக்கும் கருணாநிதியான நீ இந்த வரம் கொடுக்க மறுப்பாயா?

(வி - ரை) சிவாகந்தலஹரியிலும் नरत्वं देवत्वं नगवनमृगत्वं मशकता पशुत्वं कीटत्वं भवतु विहगत्वादि-जननम् । सदा त्वत्पादाब्जस्मरणपरमानन्दलहरीविहारासक्तंचेत् हृदयमिह किं तेन वपुषा ॥ என்று கூறப்பட்டுள்ளது.

—* आत्मनः चरमसमयेऽपीश्वरस्मृतिप्रार्थना *—

काले कण्ठस्फुरदसुकलालेशसत्तावलोक-
व्याग्रोदग्रव्यसनरुदितस्निग्धरुद्धोपकण्ठे ।
अन्तस्तोदैरवधिरहितामार्तिमापाद्यमानेऽ-
प्यङ्घ्रिद्वन्द्वे तव निविशतामन्तरात्मन्ममात्मा ॥ ३८ ॥

காலே கண்டஸ்புரதஸுகலா
வேச ஸத்தாவலோக
வ்யக்ரோதக்ரவ்யஸந ருதித
ஸ்னிக்த ருத்தோபகண்டே ।
அந்தஸ்தோதை ரவதி ரஹிதா
மார்த்தி மாபாத்யமானேபி
அங்க்ரி த்வந்த்வே தவ நிவிசதாம்
அந்தராத்மன் மமாத்மா ॥ 38

(ப - ரை) இறுதிக்காலத்திலாவது உனது ஸ்மரணம் எனக்கு இருத்தல் வேண்டுமென்று கூறுகிறார். कण्ठस्फुरदसुकलालेशसत्तावलोकव्यग्रोदग्रव्यसनरुदित-स्निग्धरुद्धोपकण्ठे - நெஞ்சில் துடிக்கும் மெல்லிய பிராண வாயுவின் ஸூக்ஷ்மமான நடமாட்டத்தை பரீக்ஷித்தறிய அரும்பாடுபடும் ஸகல பந்து மித்திரர்களால் அருகாமையில் சூழப்பட்டும் अवधिरहितैः - எல்லையற்ற अन्तस्तोदैः - சுவாஸம் கபம் விக்கல் முதலிய ஆந்தர

மான துன்பங்களால் आर्तिम् आपाद्यमाने - வேதனை அடைவிக்கப்படும் काले ऽपि - அந்த ஸமயத்திலாவது अन्तरात्मन् - அந்தர்யாமியாக வுள்ள பரமாத்மாவே मम आत्मा - என் ஜீவன் तव - உன்னுடைய अङ्घ्रिद्वन्द्वे - இரு பாதங்களில் निविशतां - ஈடுபடவேண்டும்.

(க - ரை) அந்தியகாலத்தில் வைத்யர்கள் கை விட்டபிறகு பந்துக்களும் நண்பர்களும் க்ரமமாக க்ஷீணித்துவரும் சுவாஸத்தை பரீக்ஷித்துக் கொண்டு பக்கத்தில் நெருக்கமாய்க் கூடிக்கொண்டு துக்கம் மிகுந்து ஓலமிடும் அந்த சமயத்தில், உயிர் வெளிச் செல்லுவதால் உண்டாகும் வேதனை, சரீரத்தினுள் பலவாறு பெருகி பொறுக்க முடியாதபடி துன்புறுத் தவும் கூடும். அந்தக்காலத்தில் கூட எனது அந்தக் கரணம் உனது திருவடிகளில் லயமடையவேண்டும்.

(வி – ரை) एष त आत्मा अन्तर्याम्यमृतः - என்கிற உபநிஷத் பரப்ரஹ்மமே ஜீவனின் வாஸ்தவமான ஸ்வரூபம் என்பது புலப்படும்.

—* एतत्प्रार्थनादृढीकरणम् *—

अन्तर्बाष्पाकुलितनयनानन्तरङ्गानपश्यन्
अग्रे घोषं रुदितबहुलं कातराणमशृण्वन् ।
अत्युत्क्रान्तिश्रममगणयन्नन्तकाले कपर्दिन्
अङ्घिद्वन्द्वे तव निविशतामन्तरात्मन्ममात्मा ॥ ३९ ॥

அந்தர் பாஷ்பாகுலித
நயனானந்த ரங்காநபச்யன்
அக்ரே கோஷம் ருதித பஹுளம்
காதராணாமச்ருண்வன் ।

அத்யுத் க்ராந்தி ச்ரமமகணயன்
அந்தகாலே கபர்தின்
அங்க்ரி த்வந்த்வே தவ நிவிசதா
மந்தராத்மன் மமாத்மா ॥ 39

(ப - ரை) அதே வேண்டுகோளை மேலும் வலியுறுத்துகிறார்.

कपर्दिन् - ஜடாதாரியான பரமேச்வரனே! अन्तरात्मन् - அந்தர்யாமியே! अन्तकाले - ப்ராண வியோக காலத்தில் अन्तर्ष्पाकुलितनयनान् - உள்ளுரப் பெருகிய கண்ணீரால் கலங்கிய கண்ணுடைய अन्तरङ्गान् - ஆப்த ஜனங்களை अपश्यन् - பார்க்காமலும் अग्र - முன்னுல कातराणां - பயந்த ஸ்திரீகளின் रुदितबहुलं - அழுகை மேலிட்ட घोषं - பெருங்குரலையும் (காதில் வாங்காமலும்) उत्क्रान्तिश्रममपि - மரண வேதனையையும் अगणयन् - பொருட்படுத்தாமலும் तव - உன்னுடைய अङ्घिद्वन्द्वे - இருபாதங்களில் मम - என்னுடைய आत्मा - ஜீவன் निविशतां - அடைக்கலம் புகவேண்டும்.

(க - ரை) தாங்கமுடியாத துக்கத்தினுல் பக்கத்தில் கண் கலங்கி நிற்கும் உயிருக்கு உயிரான என் சொந்த ஜனங்களைக் கண்ணுல் பார்க்காமலும், மரிப்பவனைக்கண்டு பயத்துடனும் சோகத்துடனும் ப்ரலாபம் செய்பவர்களின் கூக்குரல்களைக் காதில் வாங்கிக் கொள்ளாமலும் ப்ராணன் வெளிக்கிளம்பும் போது ஏற்படும் சரீராவஸ்தைகளை லக்ஷ்யம் செய்யாமலும் அந்திய காலத்தில் என் மனம் அந்தராத்மாவான உன்னிடம் ஐக்யமடையட்டும்.

(வி - ரை) இந்திரியம் முதலியன நல்ல நிலையில் இருக்கும் பொழுது, ஐயம் திரிபு இல்லாமல் ஸ்வாது

பவ விஷயமாக ஆன சிவோஹம் என்ற பாவனை, அந்திய காலத்திலும் தொடர்ந்து இருக்கும். இஃது, வித்யாரண்ய முனிவரால் दिने दिने स्वप्नसुप्त्योः अधीते विस्मृतेऽप्ययम्। परोद्युनिधीतः स्यात्तद्वद्विद्या न नश्यति॥ प्रमाणोत्पादिता विद्या प्रमाणं प्रबलं विना। न नश्यति न वेदान्तात् प्रबलं मानमिष्यते। என்று விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

—* ईश्वरप्रत्यक्षानुभवः *—

चारुस्मेराननसरसिजं चन्द्ररेखावतंसं
फुल्लन्मल्लीकुसुमकलिकादामसौभाग्यचोरम् ।
अन्तः पश्याम्यचलसुतया रत्नपीठे निषण्णं
लोकातीतं सततशुभदं रूपमप्राकृतं ते ॥ ४० ॥

சாருஸ்மேரானனஸரஸிஜம்
சந்த்ரரேகாவதம்ஸம்
புல்லன்மல்லீ குஸுமகலிகா
தாம ஸௌபாக்யசோரம் ।
அந்தः பச்யாம்யசல ஸுதயா
ரத்னபீடே நிஷண்ணம்
லோகாதீதம் ஸததசுபதம்
ரூபமப்ராக்ருதம் தே ॥ 40

(ப - ரை) ஈச்வரானுபவத்தை வேண்டுகிறார்:

चारुस्मेराननसरसिजं - அழகிய புன்னகை கொண்ட வதனத் தாமரையை யுடையவரும் चन्द्ररेखावतंसं - இளம் பிறையைச் சிரஸில் சூட்டியவரும் फुल्लन्मल्लीकुसुमकलिकादामसौभाग्यचोरम् - மலர்ந்த மல்லிகை மொக்குகளால் தொடுத்த மாலையின் மங்களகரமான ஏழி

லப் பரிப்பதும் **अचलसुतया** - மலை மன்னனின் மக ளொடு **रत्नपीठे** - ரத்னமய பீடத்தில் **निषण्णं** - வீற்றிருப் பதும் **लोकातीतं** - லோகங்களுக்கு எட்டாததும் **सततशुभदं** - நித்ய மங்களங்களைக் கொடுப்பதும் **अप्राकृतं** - ஸாதாரணமல்லாததும் ஆகிய **ते रूपं** - உன் ஸ்வரூ பத்தை **अन्तः पश्यामि** - உள்ளத்தில் காண்கிறேன்.

(க - ரை) மனதின் தியான ஸமாதியில் உதிக்கும் ஈச்வரஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தை சித்திரத்தில் வரை வது போல வர்ணித்துக் கூறுகிறார். ஈச்வரனின் சரீர காந்தியை மலரும் தருவாயிலிருக்கும் மல்லிகை மொட்டுகளின் மாலைக்கு ஒப்பிடுகிறார். அதில் வெண்மை, மணம், மென்மை, குளிர்ச்சி இவை யெல் லாம் தோன்றுகின்றன. பகவான் பார்வதி தேவி யுடன் யோகாஸனத்தில் வீற்றிருக்கும் வைபவம் தோன்றுகிறது. கருணைமூர்த்தியின் வதனத்தில் மந்த ஹாஸம் தவழுகிறது. முடியில் இளம் பிறை ஒளி வீசுகிறது. அந்த ஸ்வரூபம் எங்கும் காணக்கிடைக் காத திவ்யமங்களமானது. 224 லோகங்களுக்கு அப்பாலிருந்து பிரகாசிப்பது. அத்தகைய உன் ரூபம் எனக்கு இப்பொழுது தென்படுகிறது. அடுத்த சுலோகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது **अन्तः पश्यामि** - என்ற வாக்யத்திற்கு நான் காண்பேனா? என் அந்திய காலத்தில் உன் திருவுருவத்தை நான் காண் பது ஸாத்யமாகுமா? என்று அர்த்தம் செய்து கொள் வதே உசிதம் எனத் தோன்றுகிறது.

(வி - ரை) **शुभदं सततं** - என்று பாடம் சில பிரதி களில் உள்ளது. நிஷ்களரூபமும் **तथैव योगिनां चापि क्षमिणां मन्त्रिणामपि। जपपूजानिमित्तायं निष्कलं सकलं भवेत्॥**

என்ற ஆகம வாக்கியத்தின்படி ஸகளமாகத்தோன்றும் या ते रुद्रा शिवा तनूरघोरा என்ற சுருதியில் अपापकाशिनी என்பது ஸகளரூபம் என்று கூறுகின்றனர்.

—* प्रार्थनादौर्लभ्यान्निर्वेदः *—

स्वप्ने वापि स्वरसविकसद्दिव्यपङ्केरुहाभं
पश्येयं किं तव पशुपते पादयुग्मं कदाचित् ।
काहं पापः क्व तव चरणालोकभाग्यं तथापि
प्रत्याशां मे घटयति पुनर्विश्रुता तेऽनुकम्पा ॥ ४१ ॥

ஸ்வப்னே வாபி ஸ்வரஸ விகஸத்
திவ்ய பங்கேருஹாபம்
பச்யேயம் கிம் தவ பசுபதே
பாதயுக்மம் கதாசித் ।
க்வாஹம் பாபः க்வ தவ
சரணலோக பாக்யம் ததாபி
ப்ரத்யாசாம் மே கடயதி
புனர்விச்ருதா தேனுகம்பா ॥ 41

(ப - ரை) அந்திய காலத்தில் அந்த பாக்யம் கிடைப்பது அரிது எனினும் ஸொப்பனத்திலாவது உன் தரிசனம் எப்பொழுதாவது ஒரு சமயம் கிடைக்குமா? என்று வேண்டுகோள் கிடைக்கப் பெருமையால் வருந்துகிறார். पशुपते - ஹே ஈசவரா! स्वरसविकसद्दिव्य पङ्केरुहाभं - தானாக மலர்ந்த தேவலோகத்துத் தாமரைப் புஷ்பத்தின் அழகு பொருந்திய तव पादयुग्मं - உன்னிரு பாதங்களை कदाचित् - எப்பொழுதாவது. स्वप्ने वापि - ஸ்வப்னத்திலாவது किं पश्येयं - நான் பார்ப்

பேனு? पापः क्व अहं - பாபியான நான் எங்கே? तव - உன்னுடைய चरणालोकभाग्यं क्व - உன் பாதங்களைக் காணும் பாக்கியம் எங்கே? तथापि - அப்படி இருப்பினும் विश्रुता - உலகப் பிரஸித்தமான ते - உன்னுடைய अनुकम्पा पुनः - தயவு மட்டும் मे - எனக்கு प्रत्याशां - நம்பிக்கையை घटयति - ஏற்படுத்துகிறது.

(க-ரை) தானுக மலரும் தாமரைப் புஷ்பத்தின் அழகு வாய்ந்த உன் பாதங்களை கனவிலாவது நான் தெய்வச் செயலாகவாவது பார்க்க நேரிடலாகாதா? அதற்குக்கூட நான் கொடுத்து வைத்தவனில்லை. ஏனெனில் நான் அவ்விதமான பாபி. ஆனாலும் உலகம் புகழும் உன் கருணையைக் கடைப்பிடித்துக் கொண்டு கனவிலாவது அந்த திவ்ய தரிசனத்தின் பாக்கியம் எனக்குக் கிடைக்கும்படி நீ அனுக்ரஹம் செய்வாய் என்று நான் நம்பி ஆவலுடனிருக்கிறேன்.

(வி-ரை) க்வ என்று இரண்டு தரம் கூறியது உன் திருவடி தரிசன பாக்கியம் கிடைப்பது மிகவும் அரிது என்பதை உணர்த்துகிறது.

—* भिक्षाचर्यादिकापटयनिरूपणम् *—

भिक्षावृत्तिं चर पितृवने भूतसङ्घैर्भ्रमेदं
विज्ञातं ते चरितमखिलं विप्रलिप्सोः कपालिन्।
आवैकुण्ठद्रुहिणमखिलप्राणिनामीश्वरस्त्वं
नाथ स्वभेऽप्यहमिह न ते पादपद्मं त्यजामि॥ ४२॥

பிக்ஷாவ்ருத்திம் சர பித்ருவனே
பூதஸங்கைர்ப்ரமேதம்
விஜ்ஞாதம் தே சரிதமகிலம்
விப்ரலிப்ஸோ: கபாலின் |
ஆவைகுண்டத்ருஹிண
மகிலப்ராணிஞ மீச்வரஸ்த்வம்
நாத ஸ்வப்னேப்யஹமிஹ நதே
பாதபத்மம் த்யஜாமி ॥ 42

(ப - ரை) நீ பிக்ஷை எடுத்தல் முதலியன கபட மாக ஏற்பட்டன என்று கூறுகிறார். **कपालिन्** - கபால தாரியான சிவனே **भिक्षावृत्तिं चर** - பிச்சை எடுப்பதை அனுஷ்டி. **पितृवने** - சுடுகாட்டில் **भूतसङ्घैः** - பிசாசங்க ளுடன் **भ्रम** - சுற்று (எனினும்) **अखिलं इदं** - இது எல் லாம் **विप्रलिप्सोः ते** - ஏமாற்றும் எண்ணமுடைய உன் னுடைய **चरितं** - நடவடிக்கை (என்று) **विज्ञातं** - தெரிந்துவிட்டது. **आवैकुण्ठद्रुहिणं** - விஷ்ணு ப்ரஹ்மா பர்யந்தமான **अखिलप्राणिनां** - எல்லா ஜீவராசிகளுக்கும் **ईश्वरः त्वं-ஈசன் நீ. नाथ**-ஓ ஸ்வாமி **स्वप्नेऽपि**-கனவிற்கூட **इह** - இந்த ஜன்மத்தில் **अहं** - நான் **ते पादपद्मं** - உன் சரணகமலத்தை **न त्यजामि** - விடமாட்டேன்.

(க-ரை) நீ பிக்ஷை எடுப்பதானாலும் சுடுகாட்டில் சஞ்சரித்தாலும் பூதங்களுடன் கூடித்திரிந்தாலும் மண்டை யோட்டைப் பூண்டிருந்தாலும் உன் மகி மையை என்னிடமிருந்து மறைத்துவிட முடியாது. நீ எப்படி நடித்துக்காண்பித்தாலும் நீதான் கொசுவு முதல் பிரமன் விஷ்ணு முதலிய தேவதைகள் பரியந் தம் ஸகல பிராணிகளுக்கும் அதிபதி. இதை நான் அறிந்தவனுதலால் நின்னவுள்ளபோது மட்டுமல்லாமல்

ஸ்வப்னதசையில் கூட உன் சரணகமலங்களை நான் விடவே மாட்டேன்.

(வி - ரை) यस्यानवद्यं चरितं मनीषिणो
गृणन्त्यविद्यापटलं बिभित्सवः ।
निरस्तसाम्यातिशयोऽपि यः स्वयं
पिशाचचर्यामचरत्सतां गतिः ॥

என்று பாகவதத்தில் கூறியதும் சண்டு கவனிக்கத் தக்கது.

—* ईश्वरस्य ऐश्वर्यं श्रुतिसिद्धम् *—

आलेपनं भसितमावसथः श्मशानम्
अस्थीनि ते सततमाभरणानि सन्तु ।
निह्नोतुमीश निखिलश्रुतिसारसिद्धम्
ऐश्वर्यमम्बुजभवोऽपि च न क्षमस्ते ॥ ४३ ॥

ஆலேபனம் பஸிதமாவஸதச் ச்மசானம்
அஸ்தீனி தே ஸதத மாபரணாநி ஸந்து ।
நின்ஹோது மீச நிகில ச்ருதி ஸாரஸித்தம்
ஐச்வர்ய மம்புஜபவோபி ச ந க்ஷமஸ்தே ॥ 43

(ப - ரை) ஈசனின் பெருமை வேதஸித்தம் எனக் கூறுகிறார். आलेपनं भसितं - நீ பூசிக்கொள்ளுவது விபூதி. आवसथः - உனதிருப்பிடம் श्मशानं - சுடுகாடு. ते - உனக்கு सततं - எப்பொழுதும் आभरणं - அணியாக இருப்பன अस्थीनि - எலும்புகள். सन्तु - இவ்வாறு இருக்கட்டும். ईश - ஈச்வரனே! सकल श्रुतिसारसिद्धं - ஸகல வேதங்களாலும் ஸாரமென்று நிச்சயமாகத்

தெரிகிற ते - உன்னுடைய ऐश्वर्यं - ஈச்வரத் தன்மையை निह्नोतुं-மறைக்க अम्बुजभवोऽपि च - ப்ரஹ்மாவும் न क्षमः- முடியாதவர்.

(க - ரை) சாம்பலிப் பூசி சுடுகாட்டில் வசித்து எலும்புமாலை பூண்டு நீ ஏழைக் கோலத்தை ப்ரகடனம் செய்தாலும் ஸகல வேதங்களாலும் உபநிஷத்துக்களாலும் தீர்மானமாய் கோஷிக்கப்படும் உன் ஐச்வர்யத்தை மறைக்கும் திறமை ப்ரஹ்ம தேவனுக்கும் கிடையாது.

(வி - ரை) சுருதி பாரஸித்தம் என்று ஒரு பாடம் உண்டு. ப்ரஹ்மதர்க்கஸ்தவத்தில் दग्धे तवाक्षिनयनेन चराचरेऽस्मिन् त्वत्तोऽखिलं भुवनमेव महाश्मशानम्। तत्र स्थितिं विबुधनाथ तवासहायां, सन्तः श्मशानवसतिं समुदाहरन्ति ॥ ஸகல ஸம்ஹார காலத்தில் ஒருவகை ஈசனிருக்கும் நிலையை மஹாச்மசானவாஸி என்ற சொல் உணர்த்துவதாகக் கூறுகிறார். சிவபுராணத்தில் எலும்புகள் விஷ்ணுவினுடையன என்பது விரிவாகக் கூறப்படுகிறது. வேதங்களைக் கவர்ந்து சென்ற ஸோமகாஸுரனைக் கொன்று மத்ஸ்யரூபத்துடன் அட்டஹாஸம் செய்த விஷ்ணுவை குஹன் சிக்ஷித்தான். அவர் தன்னுடைய நேத்ரவலய ரூபமான எலும்பைக் கொடுத்தார். செறுக்குற்ற ஆதி கூர்மம் கணேசனால் துன்புறுத்தப்பட்டு தனது முதுகு கபாலாஸ்தியைக் கொடுத்தார். வீரபத்ரனால் பீடிக்கப்பட்ட ஆதி வராஹம், தெத்துப்பல்லைக் கொடுத்தார். சரபத்தினால் ஹிம்ஸிக்கப்பட்ட ந்ருஸிம்ஹன் தனது தோலையும் ஆகாசபைரவரால் சிக்ஷிக்கப்பட்ட த்ரிவிக்ரமன் விஷாண்டத்தையும் கொடுத்தார் என்பது சிவபுராணம்.

பிக்ஷாடனம் தாருகாவன மஹர்ஷிகளுக்கு ஜ்ஞானோப தேசம் செய்யவென்பது ப்ரஸித்தம். ச்வேதாச்வத ரோபநிஷத், சங்கரஸம்ஹிதா, ஸனத்குமார ஸம்ஹிதா, சிவபுராணம் முதலியன ஈசனுக்கு உள்ள குணதிசயங் களைக் கூறுகின்றன. ஈசாவாஸ்யமிதம் ஸர்வம், ஸர்வவ்யாபி ஸ: பகவான் தஸ்மாத்ஸர்வகத: சிவ: - என்பது உபநிஷத்.

—* शिवानुचरभृत्यभावाभ्यर्थनम् *—

विहर पितृवने वा विश्वपारे पुरे वा
रजतगिरितटे वा रत्नसानुस्थले वा ।
दिश भवदुपकण्ठं देहि मे भृत्यभावं
परमशिव तव श्रीपादुकावाहकानाम् ॥ ४४ ॥

விஹர பித்ருவனே வா விச்வபாரே புரே வா
ரஜத கிரி தடே வா ரத்னஸானுஸ்தலே வா |
திச பவதுபகண்டம் தேஹி மே ப்ருத்யபாவம்
பரமசிவ தவ ஸ்ரீபாதுகாவாஹகானாம் ॥ 44

पितृवने वा विहर - நீ சுடுகாட்டில் சஞ்சரித்தாலும் சரி. **विश्वपारे पुरे वा** - ஸகலபுவனங்களுக்கு அப்பா லுள்ள உன் லோகத்தில் நீ வஸித்தாலும் சரி. **रजतगिरितटे वा** - வெள்ளிமலையான கைலாஸத்திலானா லும் சரி. **रत्नसानुस्थले वा** - அல்லது ரத்ன தாழ்வரை யுடன் கூடிய மேருமலையிலானாலும் சரி. **हे परमशिव** - ஏ பரமசிவனே **भवदुपकण्ठं** - உன் ஸமீபத்திலிருத்தல் **दिश** - எனக்கு ஏற்படுத்து. **तव** - உன்னுடைய **श्रीपादु-कावाहकानां** - பாதுகைகளைத் தாங்கும் நந்தி பிருங்கி முதலியவர்களுக்கு **भृत्यभावं** - ஸேவகனாயிருத்தல் **मे देहि** - எனக்கு கொடு.

(க - ரை) நீ சுடுகாட்டில் வஸித்தாலும் சரி அல்லது 224 புவனங்களுக்கு அப்பாலுள்ள உன் லோகத்தில் வசித்தாலும் சரி. நீ கைலாஸத்திலோ மேருமலையிலோ இருந்தாலும் சரி. நீ எங்கிருப்பினும் உன் சமீபத்தில் சிச்ரூஷை செய்து கொண்டிருக்கும் பக்தர்களின் அடிமையாக என்னை ஏற்படுத்து.

(வி – ரை) அடியார்க்குமடியேன் என்றது தேவாரம்.

—* अर्थवादस्तुतामरानीश्वरत्वकथनम् *—

विविधमपि गुणौघं वेदयन्त्यर्थवादाः
परिमितविभवानां पामराणां सुराणाम् ।
तनुहिमकरमौले तावता तत्परत्वे
कति कति जगदीशाः कल्पिता नो भवेयुः ॥ ४५ ॥

விவிதமபி குணௌகம்
வேதயன்த்யர்த்தவாதாஃ
பரிமித விபவானும்
பாமராணும் ஸுராணும் |
தநு ஹிமகர மௌலே
தாவதா தத்பரத்வே
கதி கதி ஜகதீசாஃ
கல்பிதா நோ பவேயுஃ ॥ 45

(ப - ரை) அர்த்த வாதத்தினுல் துதிக்கப்பட்டவர்கள் ஈசனல்லர் என்கிறார். **तनुहिमकरमौले** - இளம் பிறையை முடியிற் சூடியவரே **परिमितविभवानां** - கணக்கிடப்படும் பெருமை வாய்ந்த **पामराणां** - அஜ்ஞானி

களான **सुराणां** - தேவர்கள் விஷயத்தில் **अर्थवादाः** - வேதங்களின் தாற்காலிகப் புகழ்ச்சிகள் **विविधमपि गुणैः** பற்பலவிதமான குணவிசேஷங்களை **वेदयन्तु** - விளம்பரப்படுத்தட்டும். **तावता** - அந்தக் காரணத்தைக் கொண்டே **तत्परत्वे** - அந்த தேவர்களுக்கு உன்னைவிட உயர்ந்த ஸ்தானமானது கிடைத்து விடுமானால் **कति कति जगदीशाः** - எத்தனை எத்தனை ஜகதீசர்கள் **कल्पिताः** - ஏற்படுத்தப் பட்டவர்களாக **नो भवेयुः** - ஆகமாட்டார்கள்.

(க - ரை) பரமேசுவரன் ஒருவனே ஒழியப் பல பேர்கள் இருப்பது அஸாத்யம். அந்த ஒருவனுக்கு உட்பட்டே மற்றவர்கள் ஆட்சி நடத்துவது கிரமமாகும். இல்லையேல் உலகங்களுக்குக் கேடு விளையும். ஆனால் உன்னைத் தவிர மற்ற விஷ்ணு முதலிய தேவதைகளின் பெருமைகளை விரிவாய் வர்ணிக்கிறார்களே என்றால் அவ்வித வர்ணனைகள் அர்த்தவாதங்கள் ஆகின்றன. அவை தாற்காலிகமான ஸ்துதிகள். முடிவான தீர்மானத்தைக் குறிக்கின்றனவாகமாட்டா. ஸர்வேச்வரனான உன்னைத் தவிர மற்ற தேவர்கள் ஒரு வரம்புடன் கூடிய மகிமையைப் பெற்றவர்களே. அவர்கள் தவறுகளைச் செய்பவர்களாயும், அந்தப் பாப பயன்களை அடைபவர்களாயு மிருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் பாமரர்கள். நீயோ ஞான கலைக்கு அடையாளமான சந்திரகலையை தரித்தவன். அளவற்ற தடையற்ற மகிமை வாய்ந்தவன்.

(வி - ரை) **ज्ञानचन्द्रकलाचूडं दशादिग्बाहुमण्डलम्** - என்பது ஆகமம். அர்த்தவாதங்கள், நிந்தை, ஸ்துதி, ப்ரக்ருதி, புராகல்பம் என்று பலவகைப்படும். **शिवस्य परतत्त्वस्य स्वभावः सकलं शुक। तदधीनं तदन्येषां इति तत्त्वविदां स्थितिः॥** என்பதனால் மற்ற தேவர்களின் மஹிமை

அளவுக்கடங்கியது என்பது புலனுகும். விருத்திர ஹத்தி, கௌதம பத்னி தர்ஷணம் முதலியவற்றுல் இந்திரன் பாபத்தையும், அதன் பயனையும் அடைந்தான் என்பது பிரசித்தம். ப்ரஹ்மா, விஷ்ணு முதலிய தேவர்களும் அவ்விதமே.

—* ब्रह्मादिभिः निष्कृष्टं शिवपारम्यम् *—

बलमबलममीषां बल्बजानां विचिन्त्यं
कथमपि शिव कालक्षेपमात्रप्रधानैः ।
निखिलमपि रहस्यं नाथ निष्कृष्य साक्षात्
सरसिजभवमुख्यैः साधितं नः प्रमाणम् ॥ ४६ ॥

பலமபலமமீஷாம் பல்பஜானும் விசிந்த்யம்
கதமபி சிவ காலக்ஷேப மாத்ர ப்ரதானைः ।
நிகிலமபி ரஹஸ்யம் நாத நிஷ்க்ருஷ்ய ஸாக்ஷாத்
ஸரஸிஜபவமுக்யைஸ் ஸாதிதம் நः ப்ரமாணம் ॥ 46

(ப-ரை) ப்ரஹ்மா முதலியவர்களால் சிவபரத்துவம் தீர்மானிக்கப்பெற்றுள்ளது.

शिव – சிவபெருமானே **बल्बजानां अमीषां** - துர்பலர்களான இந்த தேவர்களின் **बल** - பலமும் **अबल** - பலமற்றதன்மையும் **कथमपि**-வெகு சிரமப்பட்டு **कालक्षेपमात्रप्रधानैः** பொழுது போக்குவதிலேயே முக்கிய நோக்கமுடையவர்களால் **विचिन्त्यं**-ஆராய்ச்சி செய்யப்படவேண்டியது. **नाथ**-ஸ்வாமி **निखिलमपि रहस्यं** - வேதபுராணங்களின் ஸர்வரஹஸ்யத்தையும் **निष्कृष्य** – கடைந்தெடுத்து (ஒருங்கே திரட்டி) **साक्षात् सरसिजभवमुख्यैः** - நேராக ப்ரஹ்மா முதலியவர்களாலேயே **साधितं** - எது ஸாதிக்கப்பட்டிருக்கிறதோ அதுவே **नः प्रमाणं** - எமக்குச் சான்று.

(க - ரை) தேவர்களின் பரஸ்பர பலாபலங்களை ஆராய்ச்சி செய்து கொண்டு பொழுது போக்கிக் கொண்டிருக்கிறார்கள் பலர். அப்படி வீண் பொழுது போக்க எனக்கு அவசியமில்லை. கர்ம, உபாஸனை, ஜ்ஞான காண்டங்களின் பரமஸித்தாந்தத்தை ப்ரஹ்மா முதலியவர்கள் கடைந்து எடுத்துத் தெளிவாய் உரைத்து விட்டபடியால் நான் அவர்களின் வாக்கியத்தைக் கடைப்பிடித்துக்கொண்டு உன்னைச் சரண மடைவதே கதி என்பதை அறிந்திருக்கிறேன்.

(வி - ரை) न वा ओजीयो रुद्र त्वदस्ति - என்று வேதம் "எல்லோரையும் விட ஈசன் பலவான்" என்பதை உணர்த்துகிறது. मायाबलेनैव हरिं शिवेन समानमाहुः पुरुषाधमा हि ॥ என்பது ப்ரஹ்மகீதை. மேலும் परमशिवसमुद्रेऽहं हरिः सर्वेदेवा मनुजपशुमृगाद्याः शीकरा एव सत्यं - என்று கூறியுள்ளது. विमलमतिभिरेवं वेदवेदान्तनिष्ठैः हृदयकुहरनिष्ठं वेदितुं शक्यते हि என்றும் ப்ரஹ்மகீதை.

—* शिवपदाब्जमन्तरा नान्यत्र मे स्पृहा *—

न किंचिन्मेनेऽतः समभिलषणीयं त्रिभुवने
सुखं वा दुःखं वा मम भवतु यद्भावि भगवन् ।
समुन्मीलत्पाथोरुहकुहरसौभाग्यमुषि ते
पदद्वन्द्वे चेतः परिचयमुपेयान्मम सदा ॥ ४७ ॥

ந கிஞ்சின்மேனே தஸ்
ஸமபிலஷணீயம் த்ரிபுவனே
ஸுகம் வா துக்கம் வா மம
பவது யத்பாவி பகவன் ।
ஸமுன்மீலத்பாதோருஹ
குஹராஸௌபாக்யமுஷி தே
பதத்வந்த்வே சேதः
பரிசயமுபேயான் மம ஸதா ॥ 47

(ப – ரை) சிவனது திருவடியன்றி வேறிடம் எனது விருப்பமில்லை என்கிறார்.

त्रिभुवने - மூன்று உலகங்களிலும் अतः - இதைக் காட்டிலும் समभिलषणीयं - விரும்பத்தகுந்ததாக न किंचित् मेने - நான் எதையும் மதிக்க வில்லை. भगवन् - ஈச்வர! सुखं वा दुःखं वा - சுகமோ துக்கமோ मम - எனக்கு यत् भावि - பிராரப்தவசமாய் எது வரக்கூடியதோ भवतु - அது வரட்டும். समुन्मीलत् पाथोरुहकुहरसौभाग्यमुषि - மலர்ந்த தாமரைப்பூவின் உட்புறத்தின் அழகைத் திருடும் ते पदद्वन्द्वे - உன்னிரு பாதங்களில் मम चेतः - என் மனம் सदा - எப்பொழுதும் परिचयं - நட்பை उपेयात् - அடையட்டும்.

(க - ரை) எனக்கு இம் மூன்று லோகங்களிலும் வேண்டக் கூடியது மற்றொன்று மில்லை. கர்மவசமாய் சுகமோ துக்கமோ எது வரவேண்டிய பிராப்தியோ அது வரட்டும். அதைப் பற்றி நான் கவலை கொள்ள வில்லை. நான் வேண்டுவது ஒன்றேதான். எப் பொழுதும் என்மனம் மலர்ந்த தாமரையின் உட்புறம் போல் அழகு மிகுந்த உன் இருசரணங்களில் ஈடு படட்டும்.

(வி - ரை) ऐश्वर्यमप्रत्यमनुपाधिमती च लक्ष्मीः शौर्यं च वीर्ययशसी च विरागता च। एते गुणाः षडपि ते भगसंज्ञयोक्ताः, सन्तीत्यनेन भगवानिति ते निरादुः ॥ - என்பது சுதர்சனசார் யார் வாக்கு. மற்ற தேவர்களை பகவான் என்ற சப்தம், அடைமொழியுடன் கூடியே சுக்ரபகவான், சூரியபகவான் என்று உணர்த்தும். ரிஷிகளுக்கும் ஏனைய தேவர்களுக்கும் பொருந்துமாறு उत्पत्तिं निधनं चैव भूतानामा गतिं गतिम्। वेत्ति विद्यामविद्यां च स वाच्यो भगवा- निति ॥ லக்ஷணப் புராணங்களில் கூறப்பட்டுள்ளது

ऐश्वर्यस्य समग्रस्य वीर्यस्य यशसः श्रियः। ज्ञानवैराग्ययोश्चापि षण्णां भग इतीरणा॥–என்ற லக்ஷணம் சிவபெருமானுக்கே பொருந்தும்.

—* हीनस्तुत्युच्छिष्टभावक्षमापणम् *—

उदरभरणमात्रं साध्यमुद्दिश्य नीचे-
ष्वसकृदुपनिबद्धामाहितोच्छिष्टभावाम्।
अहमिह नुतिभङ्गीमर्पयित्वोपहारं
तव चरणसरोजे तात जातोऽपराधी॥ ४८॥

உதரபரணமாத்ரம் ஸாத்ய
முத்திச்ய நீசேஷு
அஸக்ருதுபநிபத்தாம்
ஆஹிதோச்சிஷ்டபாவாம்।
அஹமிஹ நுதிபங்கீம்
அர்ப்பயித்வோபஹாரம்
தவ சரண ஸரோஜே
தாத ஜாதோபராதீ॥ 48

(ப - ரை) நீசர்களைத் துதித்து தாழ்மை யடைந்தாலும் உன்னைத் துதித்த குற்றத்தை மன்னிக்க வேண்டுமென பிரார்த்திக்கிறார். तात - அப்பா! उदरभरणमात्रं साध्यं - வயிற்றை நிரப்பும் பலனை மட்டும் उद्दिश्य - உத்தேசம் செய்து असकृत् - அடிக்கடி नीचेषु - அல்பர்கள் விஷயத்தில் उपनिबद्धाम् - சுலோக ரூபமாய் அமைக்கப்பட்டு அதனால் आहितोच्छिष्टभावां - உச்சிஷ்டம் என்ற தன்மையை அடைவிக்கப்பட்ட नुतिभङ्गीं - ஸ்தோத்திரத்தை तव - உன்னுடைய चरणसरोजे - திருவடித் தாமரையில் उपहारं - காணிக்கையாக अर्पयित्वा -

-அர்ப்பணம் செய்துவிட்டு अहं - நான் अपराधी जातः- அபராதம் செய்தவனானேன்.

(க - ரை) ஸ்வாமி! நான் இங்கு உன்னைத் துதிக்கும் முன் எவ்வளவோ அதமர்களை இந்த வாக்கினால் துதித்திருக்கிறேன். வயிறு வளர்ப்பதற்காக அல்பர்களைத் துதித்த வாக்கினால் உன்னைத் துதிப்பது பெரிய அபராதமாகும். நிந்திக்கத்தக்க காரியத்தில் ஈடுபட்டிருந்த என் வாக்கு அசுத்தமாகிவிட்டது. அதை இப்போது உன் விஷயத்தில் பிரயோகிப்பதனால் நான் செய்யும் அபராதத்தை நீ க்ஷமித்துக் கொள்வாயா?

(வி - ரை) வர்ணம், ஆச்ரமம் வயது, கர்ம, நிலை முதலியவற்றால் குறைந்தவர்களாயினும், பொருளின் நிமித்தம் துதித்ததால் வாக்கு அசுத்தமாயிற்று என்றார்.

—* सर्वापराधक्षमापणम् *—

सर्वं सदाशिव सहस्व ममापराधं
मग्नं समुद्धर महत्यमुमापदब्धौ ।
सर्वात्मना तव पदाम्बुजमेव दीनः
स्वामिन्ननन्यशरणः शरणं गतोऽस्मि ॥ ४९ ॥

ஸர்வம் ஸதாசிவ ஸஹஸ்வ மமாபராதம்
மக்னம் ஸமுத்தர மஹத்யமு மாபதப்தௌ ।
ஸர்வாத்மனா தவ பதாம்புஜமேவ தீன:
ஸ்வாமின் அனன்யசரணச் சரணம் கதோஸ்மி ॥ 49

(ப - ரை) எல்லாக் குற்றங்களையும் பொறுக்க வேண்டுகிறார். सदाशिव - ஏ சதாசிவமே सर्वं मम अपराधं: என்னுடைய எல்லா அபராதங்களையும் सहस्व - பொறுத்துக்கொள். आपदब्धौ - ஆபத்துக்கடலில் मग्नं -

மூம்கின அஸு - இந்த என்னை समुद्धर - கை தூக்கிவிடு. स्वामिन् - ஸ்வாமியே दीनः (अहं) - எளிய நான் अनन्यशरणः - வேறு அடைக்கல மற்றவனுய் सर्वात्मना - என் முழுத் தீர்மானத்துடன் तव - உன்னுடைய पदाम्बुजमेव - திரு வடித் தாமரையையே शरणं गतोऽस्मि - சரணமடைந் திருக்கிறேன்.

(க - ரை) என் அபராதங்களை யெல்லாம் பொறுத் துக்கொண்டு என்னை இந்த ஆபத்துக்களினின்றும் நீ கைதூக்கி விடுவாயாக. ஹே ஸதாசிவ! எளியவனு கிய நான் எல்லாப்பற்றுகளையும் விட்டு வேறு சிந்தனை யில்லாமல் என்னை நீயே காப்பாய் என்று நம்பி உன் னையே சரணமடைந்து விட்டேன்.

(வி - ரை) ஈண்டு ஆபத்து என்று ஸம்ஸார துக் கத்தைக் குறிப்பிடுகிறார். உலக நீதியில் அவர்கள் பெரியவர் எனினும், தன்னுடைய வித்யேச்வர பதவி யைத் திரும்பவும் பெறுவதற்கு ஈசனது கிருபை வேண்டப்படுவதால் அதைப் பெறவே எளியவன் என்று தன்னைக் குறிக்கிறார்.

चिदम्बरमिदं पुरं प्रथितमेव पुण्यस्थलं
सुताश्च विनयोज्ज्वलाः सुकृतयश्च काश्चित्कृताः ।
वयांसि मम सप्ततेरुपरि नैव भोगे स्पृहा
न किंचिदपि चिन्तये शिवपदं दिदृक्षे परम् ॥

என்று தீக்ஷிதர் அவர்களே கூறுகிறார்கள்.

—* स्तुतिसमर्पणपूर्वकं प्रार्थना *—

आत्मार्पणस्तुतिरियं भगवन्निबद्धा
यद्यप्यनन्यमनसा न मया तथापि ।

वाचापि केवलमयं शरणं वृणीते
दीनो वराक इति रक्ष कृपानिधे माम् ॥ ५० ॥

ஆத்மார்ப்பண ஸ்துதிரியம் பகவன் நிபத்தா
ய்த்யப்யனன்ய மனஸா ந மயா ததாபி ।
வாசாபி கேவலமயம் சரணம் வ்ருணீதே
தீனே வராக இதி ரக்ஷ க்ருபாநிதே மாம் ॥ 50

(ப - ரை) ஸ்துதியை ஈசனிடம் ஸமர்ப்பணம் செய்து வேண்டுகிறார். **भगवन्** - ஓ ஈச்வர **इयं** - இந்த **आत्मार्पणस्तुतिः** - ஆத்மார்ப்பண ஸ்துதியானது **मया** - என்னால் **अनन्यमनसा** - வேறு விஷயங்களிலிருந்து கட்டுப்படுத்தப்பட்ட மனதுடன் **यद्यपि न निबद्धा** - இயற்றப்படவில்லை. **तथापि** - அப்படியிருப்பினும் **कृपानिधे** - தயாநிதியே **अयं दीनः वराकः** - இவன் எளியவன் அற்பன் **वाचा केवलं** - வெறும் வார்த்தையினால் மட்டுமாவது **शरणं वृणीते** - சரணத்தை வேண்டுகிறான் **इति** - என்ற காரணத்தைக்கொண்டு **मां रक्ष** - என்னை ரக்ஷிக்க வேண்டும்.

(க - ரை) நான் ஏகாக்ரசித்தனாக இருந்து இந்த ஆத்மார்ப்பண ஸ்துதியை இயற்றவில்லை எனினும் தயாநிதியே! ஸ்துதி ரூபமான வார்த்தைகளை (மனமுருகாமல்) மட்டுமாவது சொல்லுகிறானே என்று கருணை புரிந்து என்னை ரக்ஷிப்பாயாக.

(வி - ரை) நீ தயாநிதி; ஆதலின், நான் எவ்விதம் ப்ரார்த்தனை செய்தாலும் பயன் அளிப்பாய் என்பது தோன்ற க்ருபாநிதே என்று ஸம்போதனம் செய்தார்.

முற்றிற்று.

श्री मार्गबन्धुस्तोत्रम्

शंभो महादेव देव

शिव शंभो महादेव देवेश शंभो

शंभो महादेव देव

फालावनम्रत्किरीटं

फालनेत्रार्चिषा दग्ध पञ्चेषुकीटम्।

शूलाहतारातिकूटं

शुद्धमर्धेन्दुचूडं भजे मार्गबन्धुम्॥ .. शंभो...

अङ्गे विराजद्भुजङ्गं

अभ्र गंगा तरंगाभि रामोत्तमांगम्।

ओंकारवाटी कुरंगं

सिद्ध संसेविताङ्घ्रि भजे मार्गबन्धुम्॥ .. शंभो...

नित्यं चिदानंदरूपं

निह्नुताशेष लोकेश वैरिप्रतापम्।

कार्तस्वरागेन्द्र चापं

कृत्तिवासं भजे दिव्य सन्मार्गबन्धुम्॥ .. शंभो...

कन्दर्प दर्पघ्नमीशं

कालकण्ठं महेशं महाव्योमकेशम्।

कुन्दाभदन्तं सुरेशं

कोटिसूर्यप्रकाशं भजे मार्गबन्धुम्॥ .. शंभो...

मन्दारभूतेरुदारं

मन्दरागेन्द्रसारं महाधौर्यदूरम्।

सिन्धूर दूर प्रचारं

सिन्धुराजातिधीरं भजे मार्गबन्धुम्॥ .. शंभो...

अप्पय्ययज्वेन्द्रगीतं स्तोत्रराजं पठेद्यस्तु भक्त्या प्रयाणे।

तस्यार्थसिद्दिं विधत्ते मार्गमध्येऽभयं चाशुतोषी महेशः॥

शंभो महादेव देव शिव शंभो महादेव

देवेश शंभो शंभो महादेव देव

॥ इति श्री अप्पय्य दीक्षितप्रणितम् श्रीमार्गबन्धुस्तोत्रम् संपूर्णम्॥

ஸ்ரீ மார்கபந்துஸ்தோத்ரம்

ஸீபோ மஹாதேவ தேவ
ஸிவ ஸீபோ மஹாதேவ தேவேஸ ஸீபோ
ஸீபோ மஹாதேவ தேவ

பாலாவநம்ரத்கிரீட்
பாலநேத்ரார்சிஷா தக்த பஞ்செஷுகீடம்।
ஸ ூலாஹதாராதிகூட்
ஸ,த்தமர்தேந்துசூட் பஜே மார்கபந்தும்॥ .. ஸீபோ...

அங்கெ விராஜத்புஜங்கீ
அப்ர கீகா தரீகாபி ராமோத்தமரீகம்।
ஓகாரவாடீ குரீகீ
ஸித்த ஸீஸேவிதாங்க்ரீ பஜே மார்கபந்தும்॥ .. ஸீபோ...

நித்யீ சிதாநீதரூபீ
நிஹ்நுதாஸேஷ லோகேஸ வைரிப்ரதாபம்।
கார்தஸ்வராகேந்த்ர சாபீ
கத்திவாஸீ பஜே திவ்ய ஸந்மார்கபந்தும்॥ .. ஸீபோ...

கந்தர்ப தர்பக்நமீஸீ
காலகண்ட் மஹேஸீ மஹாவ்யோமகேஸம்।
குந்தாபதந்தீ ஸுரேஸீ
கோடிஸூர்யப்ரகாஸீ பஜே மார்கபந்தும்॥ .. ஸீபோ...

மந்தாரபூதேருதாரீ
மந்தராகேந்த்ரஸாரீ மஹாகௌர்யதூரம்।
ஸிந்தூர தூர ப்ரசாரீ
ஸிந்துராஜாதிதீரீ பஜே மார்கபந்தும்॥ .. ஸீபோ...

அப்பய்யயஜ்வேந்த்ரகீதீ ஸ்தோத்ரராஜீ படேத்யஸ்து பக்த்யா ப்ரயாணே।
தஸ்யார்தஸித்தீ விதத்தெ மார்கமத்யேऽபய் சாஸ,தோஷீ மஹேஸ:॥

ஸீபோ மஹாதேவ தேவ ஸிவ ஸீபோ மஹாதேவ
தேவேஸ ஸீபோ ஸீபோ மஹாதேவ தேவ

॥இதி ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதப்ரணிதம் ஸ்ரீமார்கபந்துஸ்தோத்ரம் ஸீபூர்ணம்॥

ADAYAPALAM ROUTE MAP



- If you drive from Chennai, take Chennai Bangalore Highway.
- Take off at Arcot towards Arni Road and drive about 15 kms.
- After crossing Timiri, watch out a sign board on your right that says:'Kalakanteswarar Temple, Adayapalam'.
- This board appears adj.to MGR Polytechnic college.

Contact Numbers :

0416-2228986 / 97877 47224 / 90030 52601

சேனைக்கிழங்கு பரங்கிக் காயாகிவிட்டால் என்ன செய்வது?

பிரார்ப்த கர்மாவை நாம் மனதார ஏற்றுக்கொண்டு அனுபவித்துவிட வேண்டும். நமது பெரியோர்கள் அப்படித்தான் நமக்கு வழி காட்டியுள்ளார்கள்.

சர்மா சாஸ்திரிகள்

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதரின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம் நமக்கு இதைத்தான் நினைவூட்டுகின்றது.

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதரின் அந்திம காலத்தில் பொறுக்க முடியாத வயிற்று வலியால் துடித்தார். தனது சிவ பூஜைக்கு இந்த உபாதை இடைஞ்சலாக இருப்பதனால் தனக்கு எதிரே ஒரு தாம்பாளத்தில் நீர் நிரப்பி வயிற்றில் இருந்த பெரிய கட்டியை அதில் வெளியே கொண்டு வந்தார். அது ஒரு சேனைக்கிழங்கு போல் நீரில் மிதந்தது. பூஜை முடிந்ததும் ரத்தக் கட்டி வயிற்றுக்குள் பழையபடியே சென்றுவிடும். இது அன்றாடம் தொடர்ந்தது.

குருநாதா; தங்களால் அந்த கட்டியை வெளியே கொண்டுவர முடிகிறதே. அதை அப்படியே வெளியே விட்டுவிட கூடாதா? என சிஷ்யர்கள் கேட்டனர்.

சிஷ்ய சிகாமணிகளே, வாஸ்தவம். என்னால் அதை வெளியேற்ற முடியும். அப்புறம் சேனைக்கிழங்கு பரங்கிக்காயாகி என்னை அடையும் போது அதை எப்படி பொறுத்துக் கொள்வது. இந்த ஜென்மத்தில் அனுபவிக்க வேண்டியதை சிவன் அருளோடு இப்போதே பொறுத்துக் கொண்டு அனுபவித்து விடுகிறேன்.